27 FEB 1975
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்கிழமை, 1974 டிசம்பர் 17

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்ப தைக் குறிக்கும்.]

1. அரசினர் தீர்மானம்

வினு நேரத்தைத் தள்ளிவைத்தல்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, "சட்டப் பேரவை விதி 22-இன்கீழ் முதல் ஒரு மணி நேரம் 'வினுக்கள்-விடைகள்' என்று உள்ளதை இன்று தள்ளிவைத்து, நிகழ்ச்சி நிரலில் அடுத்துள்ளதை எடுத்துக்கொள்ளவேண்டும்" என்று முன்மொழிகின்றேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, "அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதம் நடைபெறும். திரு. இ. எஸ். தியாகராசன் அவர்கள் பேசலாம்.

2. அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும், அமைச்சரவையின் தனியொரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்.

*** திரு. இ. எஸ். தியாகராசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் கலைஞர் அவர்களுடைய அமைச்சரவையின்மீது கொண்டு வரப்பட்டிருக்கிற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தையும் கண்டனத் தீர்மானத்தையும் எதிர்த்து, தமிழக அரசு செய் திருக்கும் சாதனைகள் சிலவற்றைச் சொல்ல நான் விழைகிறேன்.

[திரு. இ. எஸ். தியாகராசன்] [1974 டிசம்பர் 17

தமிழகத்தில் 1967-ஆம் ஆண்டு, போறிஞர் அண்ணு அவர்கள் முதல் அமைச்சர் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்பு இருந்த உணவு நிலைமையைப்பற்றி நாம் எண்ணிப் பார்ப்போமானுல், இன்றுள்ள உணவு நெருக்கடி அதைவிட அதிகமானது என்று சொல்வதற்கில்லே என்றே நான் கருதுகிறேன்.

நம்முடைய டாக்டர் கலேஞர் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு தமிழகத்தில் பசுமைப் புரட்சியை உண்டாக்கி, தமிழ்நாடெங்கிலும் உணவு உற்பத்தியை அதிகமாக்கி, ஒன்றியங்கள்தோறும் நிலவள வங்கிகளேத் துவக்கி, அங்கிருக்கின்ற ஏழை விவசாயிகள் பொருளாதாரத்தில் உயர்வதற்கு வழிவகுத்துத் தந்து, அவர்கள் மற்றத் துறைகளிலும் நல்ல வளர்ச்சியுறுவதற்கு ஆவன செய்திருக்கிறர்கள். அதன் விளேவாக, 1967-ம் ஆண்டு இருந்த ஒரு பெரும் நெருக்கடி தவிர்க்கப்பட்டு, கடந்த ஆண்டு வரை கேட்போர்க்கெல்லாம் வாரி வழங்கும் சூழ்நிலேயில் உணவு நிலேமையைப் பொறுத்து தமிழகம் இருந்துவந்தது என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நிலேயை யாரும் மறுத்துக் கூறுவதற்கில்லே.

கடந்த ஆண்டுவரை எந்த மாநிலத்தில் உணவு நெருக்கடி நிலே ஏற்பட்டாலும், அதற்கு வேண்டிய உணவு தானியங்களேத் தமிழக அரசு வாரி வழங்கி வந்தது என்பதையும் நாம் நினேவில் கொள்ளவேண்டும். இப்பொழுது தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இக்கியா முழுவதிலுமே பருவ மழை பொய்த்துவிட்டதன் காரணமாக, எல்லா மாநிலங்களிலும் உணவு நெருக்கடி இருந்து கொண்டிருக்கிறது, நம்முடைய மாநிலத்தில் இப்பொழுது ஏற்பட்டிருக்கிற உணவு நெருக்கடியை நம்முடைய அரசு மிகத் திறமையாகச் சமாளிக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது ஏற்பட்டிருக்கிற உணவு நெருக்கடி, எதிர்பாராமல், இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்டிருப்பதாகும். நம்முடைய அரசு மத்திய அரசை கேட்டு, நம் மாநிலத்திற்கு வேண்டிய உணவு தானியங்களே வாங்கி, தமிழகத்தில் இருக்கும் உணவு நெருக்கடியை மிக விரைவில் நிவர்த்தி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

1974 டிசம்பர் 17] [திரு. இ. எஸ். தியாகராசன்]

நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் இதுவரை தமிழக அரசியல் வானில், யாருமே, எந்த அரசுமே செய்திராத பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெசவாளர்கள் பிரச்சினையைப்பொறுத்தவரையில், மத்திய அரசு தருகிற 40 இலட்சம் ரூபாய் நிதியை வைத்துக்கொண்டு, இன்றையதினம் நம்முடைய அரசு இரண்டு கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கி, நெசவாளர்களுக்கான நல்ல பல திட்டங்களைத் தயார் செய்து, நெசவாளர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதிலே மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டிருப்பதை நாம் பார்க்கின்றோம்.

கடந்த 27 ஆண்டுகளாக, நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்துங்கூட, உடல் ஊனமுற்றோர்களின் நிலை குறித்து யாருமே சிந்திக்காதிருந்த நேரத்தில், அவர்களுக்கான சிறப்புத் திட்டங்களை நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் தீட்டி, இன்றையதினம் தமிழகத்தில் இருக்கும இலட்சக்கணக்கான உடல் ஊனமுற்றோர்களுக்கு வாழ்வு அளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, கண்ணொளி வழங்கும் திட்டம். நாட்டில் எத்தனையோ பேர் கண்பார்வை இல்லாமல், நாட்டில் நடப்பதைப் பார்க்க முடியுமா என்று ஏங்கிக்கொண்டிருந்த நேரத்தில், கண்ணிழந்தவர்களுக்குக் கண்ணொளி வழங்கும் நல்லதொரு பணியினை இந்த அரசு செய்துவருகிறது என்பதையும் இந்த நேரத்தில் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம், கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதுவும் பாராட்டுதலுக்குரிய திட்டமாகும். ஏழை எளிய விவசாய மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்களும், நிலப்பட்டாக்களும் அளிக்கப்பட்டு, இலட்சக் கணக்கான உழவர் பெருமக்கள் தமிழ்நாட்டில் பயன்பெற்றிருக்கிறார்கள் என்பதையும் நாம் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநில அரசும் செய்யாத ஒரு நல்ல பெரும் காரியம் பூம்புகார் கப்பல் கழகம் தமிழகத்தில் அமைக்கப்பட்டிருப்பதுதான். இதுவும் நம்முடைய

[திரு. இ. எஸ். தியாகராசன்] [1974 டிசம்பர் 17

டாக்டர் கலைஞர் அமைச்சரவைதான் செய்திருக்கிறது. இந்த மாபெரும் காரியத்தை வேறு எந்த மாநில அரசும் செய்யவில்லை என்பதைப் பார்க்கும்போது, கப்பல் ஓட்டிய தமிழருக்கு நினைவுச் சின்னமாக அமைந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துக்கூறுவதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகுதான் பிற்பட்டோர் நலத்தைக் கவனிப்பதற்காகத் தனி அமைச்சர் ஒருவரை அமைச்சரவையில் இடம் பெறச் செய்து, பிற்பட்ட சமுதாயத்தை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளெல்லாம் எடுத்து, அவர்களுக்கு வாழ்வு அளித்துக்கொண்டு வருகிறது இந்த அரசு என்பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

கடந்த வாரத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு இலட்சம் வீடுகள் தாழ்த்தப்பட்டவர்களுக்காகக் கட்டும் திட்டத்தின்கீழ் முதல் தவணையாக தஞ்சை மாவட்டத்தில் பத்தாயிரம் வீடுகள் கட்டித் திறந்து வைத்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஒரு கழகத்தைத் துவக்கி அந்தக் கழகத்தின் மூலம் ஒரு லட்சம் வீடுகள் தமிழ்நாட்டில் இருக்கும் ஏழை தாழ்த்தப்பட்டவர்களுக்காகக் கட்டித் தருவதற்கு நம்முடைய அரசு முன்வந்திருக்கிறது. இதுபோன்ற நல்ல திட்டத்தை இதுவரையில் வேறு யாரும் செய்ய முன்வந்ததில்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட பல நல்ல அருமையான திட்டங்களைத் தீட்டி, தமிழக மக்களின் நலனில் அக்கறைகொண்டு நிறைவேற்றிவரும் திராவிட முன்னேற்றக் கழக அரசு நீடித்திருக்கவேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எவ்வளவு நேரம் வேண்டும்?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: 45 நிமிடங்கள் கொடுத்தால், அதற்குள் என்னுடைய உரையை முடித்துவிட முயற்சிக்கிறேன்.

1974 டிசம்பர் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 45 நிமிடங்கள் கொடுத்து விடுகிறேன். குறுக்கீடுகள் இருந்தாலும், அதற்குள் முடித்து விடுங்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம் இந்த அவையிலே இந்த அரசின்மீது கொண்டு வரப்பட்டிருக்கிற நம்பிக்கையின்மைத் தீர்மானத்தையும், கண்டனத் தீர்மானத்தையும் ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல முன்வந்துள்ளேன்.

இந்தச் சபையிலே எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பலர் அரசாங்கம் செய்த தவறுகளையும், செய்யத் தவறியவைகளையும் எடுத்துக்காட்டினர்கள். அதே சந்தர்ப்பத்தில் ஆளும் தரப்பில் இருந்து ஆட்சி மிக நல்ல முறையில் நடப்பதாகவும், வேண்டுமென்றே எதிர் தரப்பிலே இருக்கின்றவர்கள் அரசாங்கத்தின்மீது இல்லாத குறைகளை எல்லாம் எடுத்துச் சொல்வதற்குத் தேவையில்லாத ஒன்றை கொண்டுவந்து விவாதித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதாகவும் இங்கே குறிப்பிட்டார்கள்.

என்னைப் பொறுத்தவரையில், எங்களுடைய கட்சியைப் பொறுத்த வரையில் ஒன்றைத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மக்களுடைய ஆதரவை இழந்துவிட்ட நிலையிலே இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

> "செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
> செய்யாமை யானும் கெடும்"

என்பது வள்ளுவர் வாக்கு. செய்யத் தகாதவைகளைச் செய்தாலும் குற்றம். செய்யக்கூடியவைகளைச் செய்யாமல் விட்டாலும் குற்றம். ஆக, இந்த இரண்டு குற்றச்சாட்டுகளிலிருந்தும் இந்த அரசு தப்புவதற்கு இயலாது. எனென்றால் செய்ய வேண்டியவைகளை இந்த அரசு செய்யவில்லை. ஆனால் செய்யக் கூடாதவைகளைச் செய்திருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டு உண்மையாக இருக்க முடியுமே தவிர, தவறாக இருக்க முடியாது. கடந்த 5, 6 ஆண்டுக் கால கட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருந்த ஸ்திரமான சூழ்நிலை, சாதகமான சூழ்நிலை

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 டிசம்பர் 17

இனிமேல் வரக்கூடியவர்களுக்கு இருக்குமா என்று சொல்ல முடியாது. அப்படி ஒரு சௌகரியான சூழ்நிலை இருந்தும்கூட மக்களுடைய நன்மதிப்பைப் பெற முடியாமல், இழக்கக்கூடிய நிலை ஏன் ஏற்பட்டது என்பதைப்பற்றி இந்த அரசும் திராவிட முன்னேற்றக் கழகமும் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நான் இதைச் சரியான சூழ்நிலை என்று எந்தக் காரணத்தாலே சொல்கிறேன் என்றால் சட்டப் பேரவையிலே மிகப் பெரும் பான்மை பலத்தை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். அதனால் ஒரு ஸ்திரமான அரசாக இந்த அரசு இருக்கிறது. சட்டப்பேரவையிலே நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்றால் இதை நிறைவேற்றி, உடனே அரசைப் பதவியிலிருந்து இறக்க முடியாத அளவுக்கு ஒரு ஸ்திரமான நிலையை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். இது உண்மையிலேயே ஒரு பெரிய பலம் நீங்கள் எடுக்கின்ற எந்த முடிவையும் துணிச்சலாகச் செயல் படுத்தக்கூடிய பலத்தைச் சட்டப் பேரவையிலே பெற்றிருக்கிறீர்கள்.

அடுத்தபடியாக, மதுரை மாநாட்டிலே நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் பேசிய பேச்சை நான் பார்த்தேன். அவர்கள் தன்னுடைய கட்சிப் பலத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தார்கள். அது உண்மை. கட்சியின் ஸ்தாபன பலம் நன்றாக இருக்கிறது. உங்களுக்குப் பரவலாக ஸ்தாபன பலம் இருக்கிறது. கிராம அடிப்படையில் இருந்து, வட்டார அடிப்படையிலிருந்து, மாவட்ட அடிப்படையிலிருந்து மாநில மட்டம் வரை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஸ்திரமான ஸ்தாபன அமைப்பு இருக்கிறது என்று பெருமகிழ்ச்சியோடு கூறி இருக்கிறார்கள். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். அம்மாதிரி நாடு தழுவிய ஒரு ஸ்தாபனத்தை வைத்துக்கொண்டு, அதே சந்தர்ப்பத்திலே சட்டப் பேரவையில் இவ்வளவு பெரும்பான்மை பலத்தை வைத்துக்கொண்டு, மக்களுடைய நன்மதிப்பை இழந்திருக்கிறீர்கள் என்றால் அதற்குக் காரணம் என்ன என்று நீங்கள் சிந்திக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் என்ன காரணம் என்று கருதிப் பார்க்கும்போது நீங்கள் ஆட்சியிலே ஒரு ஸ்திரமான கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை. அப்போதைக்கப்போது ஒரு முடிவை எடுக்கிறீர்கள்; உடனடியாக எடுத்த முடிவை மாற்றுகிறீர்கள். இப்படி ஒரு ஸ்திரமான கொள்கையைக்

1974 டிசம்பர் 17] [திரு. எ. ஆர். மாரிமுத்து]

கடைப்பிடிக்காததன் காரணமாக மக்களுடைய நன்மதிப்பைத் தொடர்ந்து பெற வழியில்லாமல் இன்றைக்கு மக்கள் மதிப்பை இழந்து கொண்டிருக்கிறீர்கள். இதற்குப் பல உதாரணங்களைக் கூற முடியும். இதையெல்லாம் வைத்துத்தானே என்னவோ வள்ளுவர் பெருந்தகை,

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பதிழுக்கு"

என்று சொல்லியிருக்கிறார்.

ஒரு முடிவை எடுத்து, அதை அவ்வப்போது மாற்றிக் கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டால் இழுக்குத்தான் வரும். ஆக, மக்களுக்கு என்னென்ன காரியங்களைச் செய்கிறோம், என்ன செய்யவேண்டுமென்று நினைக்கிறோம் என்பதைத் திட்டமிட்டு ஒழுங்காகச் செய்ய வேண்டும். இல்லை என்றால் மக்களுக்குப் பலன் இல்லை. செய்யவேண்டிய காரியங்களை ஒழுங்குபடுத்தி, செம்மையாகச் செய்யாததால் இன்றைக்கு நீங்கள், மக்கள் நம்மை மறந்துவிட்டார்களோ என்ற எண்ணம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. மக்கள் நன்றிகெட்டவர்கள் என்றுகூட உங்களுக்குச் சொல்லத் தோன்றுகிறது. இல்லை. மக்கள் நன்றிகெட்டவர்கள் அல்ல. மக்கள் எல்லாவற்றையும் நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். குறிப்பாக தமிழ்நாட்டில் இருக்கிற மக்கள் தெளிந்த மனதுடையவர்கள், சீர்தூக்கிப் பார்க்கும் எண்ணம் கொண்டவர்கள். ஆகவே, தமிழ்நாட்டு மக்கள் நல்லதைச் செய்யத் தயங்கமாட்டார்கள். உங்களின் தவறுல்தான் இன்றைக்கு மக்களுடைய மதிப்பை நீங்கள் இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அடிக்கடி உங்களுடைய முடிவை மாற்றிக்கொள்கிறீர்கள் என்பதற்கு உதாரணமாக மதுவிலக்கல் எடுத்துக்கொள்ளலாம். இது கடந்துபோன சமாச்சாரம் என்றாலும் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். அண்ணா அவர்கள் இருந்தபோது மதுவிலக்கைக் கைவிடப் போவது இல்லை என்று சொன்னார்கள். அப்புறம் வந்த நீங்கள் 'சுத்தி நெருப்பு, மத்தியிலே சூடம்' இருக்க முடியாது என்று சொன்னீர்கள். இன்றைக்கு இருக்கிற முதலமைச்சரவர்கள் மதுவிலக்கை எல்லா இடங்களிலும் கொண்டுவந்தால்தான் இங்கும் அமலாக்க முடியும் என்று சொல்லி, மதுவிலக்கைக் கைவிட்டுவிட்டார்கள்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 டிசம்பர் 17

ஓராண்டுக் காலம் கழித்து திரும்பவும் மதுவிலக்கைக் கொண்டு வந்தார்கள். ஆகவே, மதுவிலக்குக் கொள்கையிலே உங்களுக்கு ஒரு ஸ்திரமான கொள்கை இல்லை. அப்போதைக்கப்போது இருக்கின்ற நிலைமைக்குத் தகுந்தமாதிரி முடிவை மாற்றிக் கொள்கிறீர்கள். மதுவிலக்கை மீண்டும் கொண்டு வந்ததில் எங்களுக்கெல்லாம் பெருமகிழ்ச்சி. அது வேறு விஷயம். ஆனால் என்ன போஸ்டர் போட்டார்கள் தெரியுமா? 'மதுவிலக்கைக் கொண்டுவந்து ஏழைக் குடும்பங்களைக் காப்பாற்றிய கலைஞரே வாழ்க, வாழ்க' என்று சுவரொட்டி போடுகிறார்கள். இம் மாதிரிப் பிரச்சாரங்கள் செய்வதன்மூலம் மக்களுடைய மதிப்பை இழக்காமல் இருக்க முடியுமா? மதுவிலக்கு புதிதாகக் கொண்டு வரப்பட்டதா? ஏற்கெனவே இருந்ததை மீண்டும் கொண்டு வந்தீர்கள். அவ்வளவுதான். ஆகவே, இப்படிப்பட்ட தவறான பிரச்சாரங்களைச் செய்வதன் மூலம் மக்களிடம் உங்களுக்குப் புகழ் ஏற்படாது; பெருமை ஏற்படாது என்பதைத் தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி, தஞ்சாவூரில் நெல் சம்பந்தமாக எடுத்த முடிவு. இதுவும் முன்னால் பேசப்பட்டதுதான் என்றாலும் குறிப்பாகச் சொல்கிறேன். முதலில் திறந்துவிட்டீர்கள். இரண்டு நாள் கழித்து திரும்பவும் மூடிவிட்டீர்கள். ஒரு முடிவை எடுத்தால் அதை அமலாக்க முயற்சி செய்ய வேண்டும்.

உணவுக் கொள்கையில் ஒரு திட்டவட்டமான கொள்கை இன்றுவரையில் எடுக்க முடியவில்லையே. கடந்த 6 மாதங்களாக இவ்வளவு விவகாரங்கள் ஏற்பட்ட பிறகும் உணவுக் கொள்கையைப் பொறுத்தவரையில் ஒரு திட்டவட்டமான முடிவை நீங்கள் எடுக்கவில்லை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நிலக்கடலை, எண்ணெய் வித்து ஏறிவிட்டது; மக்களுக்குக் கட்டுப்படியாகவில்லை, ஆகவே, தடை போடுகிறோம் என்று சொன்னீர்கள். அதையாவது ஸ்திரமாக அமலாக்கினீர்களா? இல்லையே. இப்போது வெளி மாநிலங்களுக்குக் கொண்டு போகலாம் என்று நீங்கள் சொல்லி விட்டீர்கள், இருந்த தடையை எடுத்துவிட்டீர்கள். ஆக, இதிலும் ஸ்திரமான முடிவு இல்லை.

1974 டிசம்பர் 17]

பத்து நாட்களுக்கு முன்னால் புஞ்சைத் தானியங்களுக்கு லெவி விதிக்கப்படும்; இன்னின்ன வகையில் லெவி விதிக்கப்படும் என்று அறிவித்தீர்கள். இரண்டு தினங்களுக்கு முன்னால் புஞ்சைத் தானியங்களுக்கு லெவி வாங்கப் போவதில்லை என்று சொன்னீர்கள். இது சரியா, தப்பா என்று அந்த விவகாரத்திற்குள் போக நான் விரும்பவில்லை. முதலிலே லெவி என்றீர்கள்; அப்புறம் லெவி இல்லை என்றீர்கள்.

அது மட்டுமல்ல. புஞ்சைத் தானியங்களை மத்திய அரசு வெளி மாநிலங்களுக்குப் போக அனுமதி அளித்திருப்பதால் இங்கே விலை எறிவிட்டது என்று சொன்னீர்கள். மத்திய அரசு மீது பழிபோட்டீர்கள். இப்போது அந்தப் பழியை நீங்கள் சொல்ல மாட்டீர்கள். அந்த நிலைமையை நான் ரொம்ப விரிவாகச் சொல்லவேண்டியதில்லை. மத்திய அரசு புஞ்சைத் தானியங்களுக்குக் கட்டுப்பாட்டை எடுத்தது தவறு என்று இப்போது சொல்ல மாட்டீர்கள். அந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்தியது நல்லது; அது தேவை. ஆகவே, நான் இதைச் சொல்கிறேன் என்றால் எந்தக் காரியத்தைச் செய்தாலும்...

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒரே ஒரு விளக்கம் அங்கத்தினர் தருவார் என்று நம்புகிறேன். தமிழக அரசு போடுகிறது எடுக்கிறது, போடுகிறது எடுக்கிறது என்று சொல்கிறார். மத்திய அரசு சில கட்டுப்பாட்டை வைத்திருந்தார்கள். பிறகு எடுத்தார்கள். நாமும் அதையொட்டித்தானே செயல்பட வேண்டியுள்ளது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: சில சந்தர்ப்பங்களுக்காக மாற்றம் பண்ணியிருக்கலாம். ஆனால் இன்றைக்கு நமக்கு வெளி மாநிலங்களில் இருந்துதான் புஞ்சைத் தானியங்கள் வந்தாக வேண்டும். இதனால் இன்றைக்கு நாம் மத்திய அரசாங்கத்தைக் குறை சொல்ல முடியாத சூழ்நிலைதான் ஏற்பட்டிருக்கிறது.

அடுத்து, எசென்ஷியல் கமாடிட்டீஸ் என்பதாக மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை, சர்க்கரை கிடைக்கவில்லை, கோதுமை கிடைக்கவில்லை என்றால், உடனே அவற்றைக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விநியோகம் செய்கிறோம் என்கிறீர்கள். கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் விநியோகம் செய்வதை நான் எதிர்க்கவில்லை. வரவேற்கிறேன். ஆனால், கூட்டுறவுச் சங்கம் சரியான முறையில்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 டிசம்பர் 17

எங்காவது செயல்படவில்லையென்றால், அதைச் சரியான முறையில் செயல்படுவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொள்ளாது உடனே அங்கெல்லாம் தனியார்கள் மூலமாக விநியோகம் செய்ய உத்தரவு இடுகிறீர்கள். இப்படி ஒரு பக்கம் தனியார், ஒரு பக்கம் கூட்டுறவுச் சங்கங்கள் என்ற அவல நிலை இருக்கிறது.

அடுத்து, தஞ்சை மாவட்டத்திற்கு என்று ஒரு லெவி அறிவித்திருக்கிறீர்கள். அது தெளிவாகச் சிந்தித்து அறிவித்த முடிவா என்றால் இல்லை. இதையும் மாற்றத்தான் போகிறீர்கள், மாற்றியாகத்தான் வேண்டும். இப்படி எதை எடுத்தாலும் ஜாஸ்லாட்டமான கொள்கைதான். இதனால் உங்கள் கட்சிக்குக் கெட்ட பெயர் வராதா என்கிற பிரச்சினைக்குள் நான் போகவில்லை, உங்கள் ஆட்சிக்கோ, உங்கள் கட்சிக்கோ ஏற்படுகிற கெட்ட பெயர் ஒரு பக்கம் இருக்கட்டும். இதனால் நாட்டுமக்களுக்குப் பெருந் தீங்கு ஏற்படுகிறது. நாட்டு மக்களுக்குப் பெரும் சங்கடத்தை உண்டாக்குகிறது. அவர்கள் பலவிதமான துன்பங்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள், இதைக் கொஞ்சம் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் வாரத்திற்கு 3 கிலோ அரிசி தருவதாகச் சொன்னீர்கள். நாங்கள் குடும்பத்திலுள்ள தபர்களின் எண்ணிக்கை பேரில் கொடுக்க வேண்டும் என்றோம். அது முடியாது என்றாலும் ஒரு குடும்பத்திற்கு 3 கிலோ அரிசி தருவதாகச் சொன்னீர்களே, இதையாவது கொடுப்பதற்கு— மொத்தத் தேவை என்ன, கையிலுள்ள ஸ்டாக் எவ்வளவு ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு இதனை அறிவித்தீர்களா என்றால் இல்லை. இதற்கான ஒரு அமைப்பை ஏற்படுத்தினீர்களா என்றால் இல்லை, வெறும் பேச்சளவுக்கு வாய் அளவுக்கு அறிவிப்புகளை இங்கே செய்துகொண்டிருக்கிறீர்களே தவிர, பேசப்படுவதை அமல்படுத்துவதற்கான எந்த முயற்சிகளையும் நீங்கள் எடுத்துக்கொள்வதில்லை. அதைப்பற்றிச் சிந்திப்பதில்லை.

இன்றைக்குத் தஞ்சை மாவட்டத்தில் இருந்து அரிசி நெல் வெளியே போகக் கூடாது என்ற கட்டுப்பாட்டை வைத்திருக்கிறீர்கள். இது அவசியம். அதில் எனக்குக் கருத்து மாறுபாடு இடையாது. ஆனால் நாம் ஒரு காரியத்தைச் செய்யவேண்டும் என்கிறபோது இன்றுள்ள சமூக அமைப்பு என்ன, அதனுடைய

1974 டிசம்பர் 17] [திரு. எ. ஆர். மாரிமுத்து]

குறைகளெல்லாம் என்ன, மக்களுடைய குறைகளெல்லாம் என்ன என்பதைத் எல்லாம் பார்த்து அதற்கேற்றவாறு ஒரு திட்டத்தை வகுக்க வேண்டாமா? இன்றைக்கு நீங்கள் மூட்டைக்கு 51 ரூபாய் கொடுக்கிறீர்கள் என்றால் வெளியில் 130 ரூபாய்க்கு மூட்டை வாங்கப்படுகிறது என்றால் யாராவது உங்களிடம் கொடுப்பார்களா? இன்றைக்கு தப்போ, தவறோ லாப நோக்குள்ள சமூக அமைப்புதானே இருக்கிறது. இதை வைத்துக்கொண்டுதானே நாம் செயல்படவேண்டியிருக்கிறது. நாட்டு மக்களுக்கு நலம் செய்ய வேண்டுமென்றோ, மரியாதைக்குப் பயந்தோ சிலர் வேண்டுமானால் நீங்கள் அறிவித்த விலைக்கு லெவிக்கு நெல்லைக் கொடுத்து விடுவார்கள், எல்லோரும் கொடுத்துவிடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா?

தஞ்சை மாவட்டத்தின் சர்க்கார் புள்ளிவிவரப்படி 4 லட்சம் ஏக்கரா குறுவை சாகுபடி என்று கணக்குச் சொன்னீர்கள். அதைப்பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அந்தப் புள்ளிவிவரம் தப்பு. காலதாமதமாக காவிரியில் தண்ணீர் வந்த காரணத்தினால் அறுப்பு மழையில் அகப்பட்டுக்கொள்ளும் எனப் பயந்து குறுவை 2½ லட்சம் ஏக்கராவுக்குமேல் சாகுபடி செய்யப்படவில்லை. ஒருபோக குறுவைபோக, இன்னும் குறுகியகாலப் பயிர் எல்லாவற்றையும் சேர்த்து 4 லட்சம் என்றே சொல்லுங்கள். அந்த நான்கு லட்சம் ஏக்கராவுக்கு உங்களால் இதுவரை கொள்முதல் செய்ய முடிந்திருப்பது ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் டன்கள் தானே. இந்த மாதத்தில் இன்னும் சில ஆயிரம் வேண்டுமானால் செய்திருக்கலாம். 2½ லட்சம் ஏக்கரா குறுவை சாகுபடி என்று வைத்துக்கொண்டாலும் 2½ லட்சம் டன்னாவது கொள்முதல் செய்யப்பட்டிருக்கவேண்டும். இதை உன்னிப்பாகக் கவனித்தீர்களா? அங்கேயுள்ள குறைபாடு என்ன?

தஞ்சை மாவட்டத்தை விடுங்கள். மற்ற மாவட்டங்களை எல்லாம் எடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நீங்கள் விதித்த கொள்முதல் இலக்கு எவ்வளவு? அதை உங்களால் செய்ய முடிந்ததா? என் உங்களால் மற்ற மாவட்டங்களில் குறித்த அளவுக்குக்கூடக் கொள்முதல் செய்ய முடியவில்லை? அங்கங்கே நெல் பதுக்கப்பட்டுவிட்டது என்றால்

[திரு. எ. ஆர். மாரிமுத்து] [1974 டிசம்பர் 17

உங்கள் கொள்முதல் அளவுக்கான தானியத்தையாவது ஏன் உங்களால் வெளிக்கொணர முடியவில்லை? அதற்கு நீங்கள் என்ன முயற்சியை எடுத்துக்கொண்டீர்கள்?

மாவட்டத்திற்கு மாவட்டம் நெல் விலையில் அதிக அளவுக்கு வித்தியாசம் இருக்கிறபோது நீங்கள் குறிப்பிட்டுள்ள கட்டுபடியாகாத குறைந்த விலைக்கு உங்களிடம் கொண்டுவந்து எல்லோரும் நெல்லைக் கொடுத்துவிடுவார்கள் என்று நீங்கள் எப்படி எதிர் பார்க்கிறீர்கள்? பொதுத் தேர்தல் வருவதற்குள்ளாக, நீங்கள் ஆட்சிப் பீடத்தைவிட்டு இறங்குவதற்குள்ளாக நாட்டு மக்களின் உயிரை இன்றையதினம் காப்பாற்றியாக வேண்டும். சாதாரண மக்களின் உயிரைக் காப்பாற்றியாக வேண்டும். நான் மேல் நிலையில் உள்ளவர்களைப்பற்றிக்கூடச் சொல்லவில்லை. அவர்கள் பாலும், பழமும் சாப்பிட்டேகூட உயிர் வாழலாம். எனக்கு அவர்களைப் பற்றிக் கவலையில்லை. உங்களது ஆட்சியின் கடைசிக் காலத்தில் சாதாரண மக்கள் எல்லாம் செத்துவிழக்கூடிய நிலைக்குத்தான் நிலைமைகளைக் கொண்டுவந்து விட்டிருக்கிறீர்கள், ஒரு நிலையான கொள்கை இல்லாத காரணத்தினால், இனியாவது இதுபற்றிச் சிந்தித்து ஒரு முடிவு எடுக்க வேண்டாமா? தயவுசெய்து உங்கள் ஆட்சியில் கடைசிக் காலக் கட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் துன்பப்படக்கூடிய கெட்ட பெயரை சரித்திரத்தில் ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம்.

இன்றைக்கு விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடிய நியாய மான விலையை நீங்கள் நிர்ணயித்திருப்பதால் விவசாயிகள் உங்களிடமே நெல்லைக் கொடுப்பார்கள். ஆனால், தங்களுக்கு நியாயமான விலை கொடுக்கப்படவில்லை என்று அவர்கள் கருது கிறார்கள். வெளியில் அதிகவிலை கிடைக்கிற காரணத்தினால் இன்னும் அதிகம் ஏறக்கூடும் என்று அவர்களுக்கு எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. அது சகஜம். நீங்கள் அவர்களுக்கு ஊக்குவிக்க என்ன செய்தீர்கள்?

மத்திய சர்க்கார் பல்வேறு பொருளாதார நிலைமைகளை ஆராய்ந்து உணவுப் பொருள்களின் விலையை ஒரு கட்டுப்பாடான நிலையில் வைத்திருந்தால்தான் நாட்டின் பொருளாதார நிலையை ஒரு கட்டுப்பாடான நிலையில் வைத்திருக்க முடியும் என்று கருதி சில பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கி

1974 டிசம்பர் 17] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

மூர்கள். சமுதாயத்தின் ஒரு பகுதியினர் தியாகம் செய்வதன் காரணமாக சமுதாயம் முழுமையும் காப்பாற்றப்படக்கூடிய நிலைமை ஏற்படலாம் என்று கருதி ரிசர்வ் பாங்கி, அக்ரிகல்சுரல் கமிஷன், ப்ளானிங் கமிஷன் ஆகியவை எல்லாம் கலந்து 74–75-க்கு உணவுப் பொருள்களைப் பொறுத்தவரையில் நிர்ணயித்த விலைக்கு மேல் கொடுக்கக்கூடாது என்று அறிவித்திருக்கிறார்கள். அவர்கள் அந்த உத்தரவை, அரசாங்கத்திற்குத் தேவையான அளவுக்கு வாங்கப்படுகிற தானியங்களைப் பொறுத்துக்கூட நிர்ணயித்திருக்கலாம். சர்க்கரையை எடுத்துக்கொண்டால் இன்றைக்கு கண்டிரோல் விலை இருக்கிறது, அது லெவி சர்க்கரைக்குத்தான். பாரஸ்ட் ஓப்பன் மார்க்கெட் சர்க்கரைக்கு ஒரு விலைதான் இருக்கிறது.

(மூற்பகல் 9-30.)

இதர மாவட்டங்களிலே இதனை அமல்படுத்தியிருக்கிறோம். லெவியை வாங்கிக்கொண்டு பாக்கியை வெளியிலே விற்க அனுமதி கொடுத்திருக்கிறோம். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே எல்லாமே சர்க்கார் வாங்கிக் கொள்ளவேண்டும். வெளியே போகக் கூடாது என்ற நிலைமை இருப்பதன் மூலம் அரசாங்கம் நிர்ணயிக்கிற விலைக்குத்தான் அவர்கள் விற்கவேண்டியிருக்கிறதே தவிர, வேறு விலைக்கு விற்க வழியே கிடையாது. இதை நான் கேட்பதன் மூலம், வெளியே விற்க அனுமதிக்கலாமா என்று கேட்டால், அதனை நான் ஒத்துக்கொள்ளவில்லை. மக்களுடைய நலனைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய பொறுப்பு. அதற்கு விரோதமான கருத்தை நான் சொல்லத் தயாராயில்லை.

ஆனால், சர்க்கார் நிர்ணயித்திருக்கிற விலை தஞ்சை மாவட்டத்திலே உள்ள விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாது. நான் ஒரு விவசாயி என்ற முறையிலே கூறுகிறேன், ஒரு குவிண்டால் நெல்லுக்கு உற்பத்தி செலவு ரூ. 75 ஆகும். இது மிகத் துல்லியமாகப் போட்ட கணக்காகும். நாம் ரூ. 75-க்குக் கொள்முதல் செய்தால், அவர்கள் மனக் கஷ்டம், மனச் சங்கடம்தான் கொள்வார்கள். அவர்கள் அதிக வருவாய் பெற என்ன செய்ய வேண்டுமென்று நீங்கள் சிந்தித்து, அதற்கு முயற்சிப்பீர்களானால், அவர்கள் அரசுக்கு நெல்லைக் கொடுக்க ஊக்கமாக இருப்பார்கள்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 டிசம்பர் 17

லெவி போக, பாக்கியைக் கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். சில பேர், கூட்டுறவுச் சங்கங்கள் சரியாக இல்லே, அவை ஒழுங்காகச் செயல்படவில்லே, அவை கொள்முதல் செய்யவேண்டுமா என்ற கருத்தை வெளியிட்டார்கள். அதிலே பல சிரமங்கள் இருந்தாலும், லெவிக்கு மேலே இருக்கிற நெல்லே, அந்த மாதிரிக் கூட்டுறவுச் சங்கங்களால்தான் கொள்முதல் செய்யமுடியும், அரசின் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனால் கொள்முதல் செய்ய முடியாது, அதில் இருக்கிற சங்கடங்களை நான் உணர்கிறேன். ஆகவே, அரசு கொள்முதல் செய்தால் அதிக வீலேயிலிருக்கவேண்டும். (குறுக்கீடு) தஞ்சை மாவட்டக் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு குவிண்டாலுக்கு ரூ. 120 என்று தீர்மானம் போட்டுள்ளோம். என்னைக் கேட்டால் இப்பொழுது ரூ. 50 கொடுக்கிறீர்கள், இன்னும் ரூ. 15 போட்டு, ரூ. 65 கொடுங்கள், ஒரு மூட்டைக்கு ரூ. 15 ஆகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு மூட்டைக்கு எத்தனை கிலோ?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: 57 கிலோ ஒரு மூட்டைக்கு. இப்பொழுது ரூ. 50 வீலே கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இன்னும் ரூ. 15-ஐச் சேர்த்து, ரூ. 65-க்குக் கொடுங்கள். தஞ்சை மாவட்டத்தை விட்டு நெல் வெளியே போகக் கூடாது. கட்டுப்பாடு அவசியம். தஞ்சை மாவட்டம்தான் நெல் களஞ்சியம் அங்கே இருப்பதை வெளியே விட்டால், பின்னல் மக்களுக்கு எடுத்துக் கொடுக்கச் சங்கடம் ஏற்படும். ஆகவே, என்னைப் பொறுத்தவரையிலே, தடையை எடுத்துவிடுவதை நான் ஏற்க வில்லே.

அடுத்து, இந்த லெவியை எப்படிப் போட்டிருக்கிறார்கள்? தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் சொல்கிறேன், 5 ஏக்கருக்கு மேல் 7½ ஏக்கர் வரையிலும் வைத்திருப்பவர்களிடம் 9½ குவிண்டால் கொள்முதல்; 7½ ஏக்கருக்கு மேல் வைத்திருப்பவர்களிடம் 10 குவிண்டால் அல்லது 1 டன் கொள்முதல்; இந்தக் கணக்கு எப்படிச் சரியாக இருக்கும்? ஒரு டன் என்றால், 57 கிலோ கொண்ட மூட்டையில் 18 மூட்டைகள். ஒரு ஏக்கருக்கு 18 மூட்டை வீளையாதபோது அவன் எப்படிக் கொடுப்பான்? ஐந்து ஏக்கருக்கு மேல் ஒவ்வொரு ஏக்கருக்கும் 18 மூட்டை கொடுக்க

1974 டிசம்பர் 17] [திரு. எ. ஆர். மாரிமுத்து]

வேண்டும். 18 மூட்டைதான் அதிகபட்ச விளைச்சல். விளைச்சல் அதைவிடக் குறைவாக இருக்குமே தவிர, கூடுதலாக இருக்காது. (குறுக்கீடு) நான் 'ஆவரேஜ்' ஆகச் சொல்கிறேன். சில பேர் பண்பட்ட நிலத்தில், பண்பட்ட முறையிலே சாகுபடி செய்தால், கூடக்கிடைக்கும். ஆகவே, ஒரு ஏக்கருக்கு 1 டன் என்ற லெவி முறையை மாற்ற வேண்டும். அதை ½ டன்னுக்கவேண்டும். குறைந்த நிலம் உள்ளவர்களிடம் அவர்கள் சொந்த தேவைக்கு வைத்துக்கொண்டு அது போக, மீதம் இருப்பதைக் கொஞ்சம் அதிக விலைக்கு உங்களிடத்திலே விற்பதற்கான நிலையை அவர்களுக்கு ஏற்படுத்துவது அவசியம் என நான் நினைக்கிறேன்.

ஆக, ஒன்றை நாம் கருத்திலே கொள்ளவேண்டும். சமுதாயத்திலே கஷ்டங்கள், சங்கடங்கள் அடிக்கடி மாறிமாறி ஏற்படுவது சகஜம். ஆனால், கஷ்டங்கள், சங்கடங்கள் ஏற்படுகின்ற போது, அந்தச் சங்கடங்களின் விளைவாக வருபவற்றை நல்லதாக, பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வதற்கான முயற்சியை நாம் செய்ய வேண்டும். அந்தக் கண்ணோட்டத்தோடு இந்த அரசு நடக்கின்றதா, அந்தக் கண்ணோட்டத்தோடு காரியங்களை இந்த அரசு பார்க்கின்றதா என்றால், இல்லை.

நீண்ட நெடுநாட்களாக விநியோக முறை இருக்கிறது. சமுதாய நலனைக் கருத்திலே கொண்டு பார்க்கும்போது, இப் பிரச்னையை 3 நோக்கிலே நாம் அணுகவேண்டும். ஒன்று உற்பத்திப் பெருக்கம். அடுத்தது, கொள்முதல். மூன்றாவது விநியோகம். இந்த மூன்று அமைப்புகளும் சரியான முறையிலே செயல்பட்டாலொழிய மக்களுடைய நலனைப் பாதுகாக்க முடியாது. உற்பத்திப் பிரச்னைக்குப் பின்னாலே வருகிறேன். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் என்ன முறையிலே நடக்கிறது, என்ன கொள்முதல் ஆகிறது, என்று இப்பொழுது சொன்னேன்.

தற்பொழுது விநியோகம் எப்படி இருக்கிறது, விநியோகத்திற்கு அமைப்பு எப்படி இருக்கிறது என்று பார்த்தால், சரியான அமைப்பு கிடையாது. இது பல்லாண்டுகாலமாக நமக்குத் தெரியும். அந்த அமைப்பு எங்கேயும் சரியாக இல்லை. விநியோக முறையிலே தவறு நடக்கிறது, அதனைப் பிடித்தால், மற்றொரு தவறு. வேறொரு தவறு நடக்கிறது. இம்மாதிரி விநியோக முறையை இந்த அரசு பல்லாண்டுகாலமாகச் செய்துவருகிறது.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 டிசம்பர் 17

அதுபற்றி இந்தச் சட்ட சபையிலே அடிக்கடி எடுத்துக் கூறப்பட்டு வந்தது. இதுவரையிலே அதற்கு ஒரு நிரந்தர அமைப்பு கிடையாது. மக்களுக்குத் தேவையான, பரிபூரண மான முறையில், எல்லா மக்களுக்கும், நாடு தழுவிய முறையில் தமிழகம் பூராவுமே, எல்லோருக்கும் உணவுப்பொருள்கள் கிடைக்கக்கூடிய ஒரு நிரந்தர அமைப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதிகப் பொருள் கிடைத்தாலும்சரி குறைந்த பொருள் கிடைத்தாலும்சரி, இருக்கிற பொருளைச் சரியான முறையிலே கொடுக்க வேண்டிய அமைப்பை அரசு ஏற்படுத்தி யிருக்கவேண்டும். இதைவிட என்ன சொல்வான் எதிர்த் தரப்பிலே இருக்கிறவன்? பிடித்துக் கொண்டு வந்தா கொடுப் பான்? கோளாறுகள் இருக்கின்றன என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வில்லை அல்லது உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லையென்றால், இந்தச் சங்கடங்கள், கஷ்டங்கள் ஏற்படுகிறதென்றால், அதனைப்பற்றி சிந்தனை இல்லை யென்றால், சமுதாயத்திலே என்ன முன்னேற்றம் நடைபெறும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? இந்தச் சிரமங்கள், கஷ்டங்கள், உங்கள் காதுகளிலே சதா ஒலித்துக் கொண்டிருக்கும்போது பழைய அமைப்பு தெளிவாக இல்லை, சரியாக இல்லை, ஆகவே புதிய அமைப்பு தேவைப் படுகிறது என்பதைப்பற்றி நீங்கள் சிந்தித்தீர்களா? நீங்கள் சிந்திக்கவே இல்லை. சிந்தனை வந்தால் அல்லவா செயல்பட முடியும். நீங்கள் சிந்திக்கவேயில்லை. வருங்காலத்தில் நன்மை ஏற்படுகிற முறையிலே உங்கள் ஆட்சி சிந்தனை செய்யவில்லை. ஆகவே, இதன்மூலம் ஆட்சிக்குத் தாங்கள் இலாயக்கில்லாதவர்கள் என்பதை நீங்களே ஒவ்வொரு காரியத்திலும் நிரூபித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

புதிய தேவைகளுடைய நிர்ப்பந்தம்தான் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கமுடியும். இன்றைக்குப் பஞ்சம் வந்தது, எங்கே பார்த்தாலும் மழை இல்லை மக்களுடைய நலனைப் பாதுகாக்கவேண்டுமென்ற மிகச் சங்கடமான நிலைமை வந்திருக்கும்போது, இதுவரையிலே நீங்கள் எடுத்த நடவடிக்கை என்ன? நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? அதைத்தான் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

1974 டிசம்பர் 17] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

நமது மதிப்பிற்குரிய பிரதம அமைச்சருக்கு இருக்கிற பெருமை எல்லாம் கஷ்டங்கள் வரும்போது, அவர்கள் மிகத் தீவிரமாகச் சிந்தனையிலும், செயலிலும் ஈடுபடுவார்கள், அதை எதிர்நோக்குவார்கள் என்று கூறுவார்கள். அது அவர்களுக்குள்ள தனிக் குணம்சம். அதுமாதிரி இங்கே சங்கடங்கள், கஷ்டங்கள் இருக்கின்றன. வருங்காலத்திலே, இம்மாதிரி வராமல் இருப்பதற்கான முயற்சிகளை நாம் இன்றையதினம் செய்ய வேண்டாமா?

நாம் கணக்குப் போட்டுப் பார்க்கவேண்டும். இந்த அவையிலே நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் உணவு நிலைமையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏன் இவ்வளவு சங்கடங்கள் ஏற்பட்டன உணவுத்துறையிலே என்று சொல்லும் போது, தேவை 57 இலட்சம் டன், விளைவு 55 இலட்சம் டன், 2 இலட்சம் டன் குறைவு ஏற்பட்டது என்றார். 2 இலட்சம் டன் குறைவு ஏற்பட்டதன் காரணமாக, நமக்கு இவ்வளவு சங்கடம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டார்கள், இருக்கட்டும். 57 இலட்சம் டன் தேவை. 55 இலட்சம் டன் விளைந்திருக்கிறது—குறைவு 2 இலட்சம் டன். அதாவது, 4 சதவிகிதம் தான் குறைவு. இந்த 4 சதவிகிதம் குறைவு படி அரிசி ரூ. 6, ரூ. 7 ஆக ஆக்கியிருக்கிறது. இது சென்ற ஆண்டு சரித்திரம், இதுவரையிலே இருக்கிற சரித்திரம். இந்தச் சரித்திரம் ஏப்படி மாறும் என்பதை நினைத்துப் பார்த்தீர்களா? என்ன நிலைமை என்று சிந்தித்துப் பார்த்தீர்களா? இன்றைக்கு இருக்கிற விளைச்சல் நிலைமையை நான் ஒரு கணக்குப் போட்டுப் பார்த்தேன். இந்தக் கணக்கில் மொத்தம் தமிழகத்திலே நஞ்சை சாகுபடி 27,42,000 ஹெக்டேர், கிட்டத்தட்ட 57 லட்சம் ஏக்கரில் ஆகியிருக்கிறது. மொத்த விளைச்சல் 55 லட்சம் டன், சென்ற ஆண்டு. அதிலே தஞ்சை மாவட்டத்திலே மட்டும் விளைந்தது 13½ லட்சம் டன், இதர மாவட்டங்களிலே விளைந்தது கிட்டத்தட்ட 41 லட்சம் டன் இருக்கும், ஆக மொத்தம் 55 லட்சம் டன் சென்ற ஆண்டு தமிழகத்திலே விளைந்திருக்கிறது. சரி. இந்த தஞ்சை மாவட்டத்திலே 14 லட்சம் டன் விளைச்சலுக்கு ஏதாவது உறுதி இருக்கிறதா இந்த ஆண்டு? அவ்வளவு விளைச்சலையும் அங்கே இந்த ஆண்டு எதிர்பார்க்கிறார்களா? முடியாது. மழையின்மை ஒரு காரணம். மேட்டூர் அணையி

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 டிசம்பர் 17

லிருந்து தண்ணீர் வராத காரணம், காலத்தோடு விடாமல் ஒரு மாதம் பிந்தி விட்டதன் காரணம், காலத்தோடு உரம் கொடுக்காது காலம் தாழ்த்தி கொடுத்தக் காரணம்.

இம்மாதிரி பல சங்கடங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்றல்ல நான்கு சங்கடங்கள் ஏற்பட்டதன் விளைவாகத்தான் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. மேட்டூரில் இருந்த தண்ணீர் வருவது குறைந்ததால் பல இடங்களிலே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களிலுள்ள பயிர்கள் பட்டுப்போய்விட்டது. கதிர் வரக்கூடிய நேரத்திலே தண்ணீர் வராததால் கதிர் வெளியே வருமா வராதா என்ற நிலைமை இருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலே 5 லட்சம் அல்லது 6 லட்சம் டன் குறைவாகத்தான் இந்த ஆண்டு விளையும். 40 லட்சம் டன் அளவில் இதர மாவட்டங்களில் விளைந்தது இந்த ஆண்டு மிகவும் குறையும்.

மற்ற மாவட்டங்களில் நிலைமை என்ன? இராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் போய்விட்டது. அங்கேயிருந்து மக்கள் தஞ்சை மாவட்டத்திற்குப் படையெடுத்து வந்துவிட்டார்கள். இயற்கைக் கோளாறு ஏற்பட்டுவிட்டது என்று நிலைமையில் கன்சர்வேடிவ் ஆகப் பார்த்தால் கூட இந்த ஆண்டு 20 அல்லது 25 லட்சம் டன் பற்றாக்குறை ஏற்படும். 14 லட்சம் டன் புஞ்சை தானியம் விளைந்தது. இந்த ஆண்டு அதுகூட எதிர்பார்க்க முடியாத நிலை இருக்கிறது. இப்படி இரண்டு லட்சம் டன் அதாவது 4 சதவீதம் பற்றாக்குறை இருக்கின்றபோதே படி அரிசி 6 ரூபாய்க்கு விற்கிறது என்றால் 20 லட்சம் டன் பற்றாக்குறை ஏற்படுகிறபோது படி அரிசி என்ன விலை விற்கும் என்பதைப் பார்க்கவேண்டும். அதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்?

கிராம விவசாயத் தொழிலாளிகள் சம்பளம் இருக்க இருக்க குறைந்துகொண்டே போகிறது. அரிசி விலை ஏறிக் கொண்டே போகிறது. வேலையோ கிடைக்கவில்லை. வேலை கிடைத்தாலும் சம்பளம் நான்கு ரூபாய்தான் கிடைக்கிறது, இதை வைத்துக் கொண்டு 7 ரூபாய், 8 ரூபாய்க்கு அரிசி வாங்க முடியுமா? கிழங்கு, புல்லரிசி இவற்றை மக்கள் அதிகமாகச் சாப்பிடக்கூடிய நிலைமை வரும். நம்முடைய மாநிலத்தின் சக்திக்கு உட்பட்டு நம்முடைய மாநிலத்தின் பொருளாதாரத்தின் நிலைமைக்கு ஏற்ப என்ன முடிவு எடுத்திருக்கிறீர்கள்?

1974 டிசம்பர் 17] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

நான்கு தினங்களுக்கு முன்புதான் ரெவின்யூ போர்டு மெம்பர்களை வெளியிலே சென்று கணக்கு எடுத்துவரச் சொல்லி இருக்கிறீர்கள், இதை நான்கு மாதங்களுக்கு முன்னால் செய்திருக்கக்கூடாதா? செய்திருந்தால் முன்னாலேயே நடவடிக்கை எடுத்திருக்கலாமே? நான் சென்ற கூட்டத் தொடரிலோ அதற்கு முந்தைய கூட்டத் தொடரிலே சொன்னேன். தஞ்சை மாவட்டத்திலே பூமிக்கடியிலே தண்ணீர் இருக்கிறது. இதைப் பயன்படுத்தி கொள்ளகூடிய வகையிலே 5 லட்சம் ஏக்கர் அதன் மூலம் சாகுபடிக்குக் கொண்டுவரமுடியும். இன்றைக்கு கூட செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. நம்முடைய சக்தியைப் பூராவும் அதற்குத் திருப்புங்கள், பாக்கிக் காரியங்களை பிறகு பார்க்கலாம்.

வளர்ச்சி துறை அல்லாத காரியம் எது எதற்கு செலவழிக்கிறோமோ அதையெல்லாம் நிறுத்துங்கள். யுத்த காலத்திலே ஏற்படுகின்ற நிலைமை என்று எடுத்துக்கொண்டு முழு முயற்சியோடு இறங்குங்கள். அப்படிச் செய்தால் மக்களுடைய தவிப்பை முழுதுமல்ல, ஓரளவிற்குக் குறைக்கக்கூடிய முயற்சியைச் செய்தவர்கள் ஆவீர்கள்.

நமக்கு இன்னும் எட்டு மாதத்திற்கு உணவு வேண்டியிருக்கிறது. ஒரு ஐந்து லட்சம் ஏக்கரை டார்ஜட்டாக வைத்து மாசி மாதத்திலே நடவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுத்துங்கள். சர்க்கார் வேண்டுமானால் நிலங்களை லீஸ் என்ற முறையில் அதை எடுத்துக்கொண்டு செய்யுங்கள். அதற்கு 10 கோடி ரூபாய் தேவைப்படும் என்று நினைக்கிறேன். இருக்கிற அதிகாரம், பணம் எல்லாம் அங்கே விவசாயத்தில் முடக்குங்கள். பக்கத்திலே இருக்கிற தென் ஆற்காடு மாவட்டம் போன்ற இடங்களில் உள்ள நீரூற்றுக்களை எல்லாம் பயன்படுத்திக்கொள்ள முயற்சி எடுங்கள். மத்திய அரசு தாராளமாக உதவிசெய்ய முன்வரும்.

பத்திரிகையிலே நான் ஒரு செய்திபார்த்தேன். மரவள்ளிக் கிழங்கு 5 லட்சம் ஏக்கரில் சாகுபடிசெய்ய மத்திய அரசு 20 கோடி ரூபாய் உதவிசெய்யும் என்று. அந்தத் திட்டம் வந்தால் தமிழகத்திலே உள்ள உணவுப் பஞ்சத்தைப் போக்குவதற்குப் பயன்படும். இது வர ஒரு வருஷம் ஆகும். ஆகவே,

[திரு. எ. ஆர். மாரிமுத்து] [1974 டிசம்பர் 17

இன்றைக்கு உடனடியாகச் செய்யவேண்டியது இதற்காக 25 கோடி ரூபாய் என்று மொத்தமாக ஒதுக்கி அதிலே தஞ்சை மாவட்டத்திற்கு என்று 5 கோடி ரூபாய் ஒதுக்கி இந்தத் திட்டத்தைப் போடவேண்டும்.

உணவு நிலைமையிலே இன்று ஏற்பட்டகோளாறினால் மற்ற நிலைமைகள் என்ன என்ன ஏற்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கவேண்டும். ஐந்து கோடி ரூபாய் பெறுமானமுள்ள பஞ்சு தேக்கம், கைத்தறித் துணி தேக்கம், இம்மாதிரியான பல்வேறு தேக்கங்கள் ஏற்பட்டதன் காரணமாக பல சங்கடங்களை இன்றைக்கு நாம் எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறோம்.

ஆகவே, இதைத் தடுக்க முன்கூட்டியே தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டை நான் சாட்ட விரும்புகிறேன்.

கல்லூரி மூடப்பட்டிருப்பது நாடு முழுவதும் இருக்கக்கூடிய ஒன்றாக இருந்தாலும்கூட தமிழகத்திலே பல கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கு உள்ள கல்லூரிகளிலே உள்ள குறைபாடுகள்தான் காரணம் என்று தெரிகிறது. ஆகவே அந்தக் குறைபாடுகளைப் போக்கி கல்லூரிகளைத் திறந்து வைக்க ஏற்பாடுகளைச் செய்ய முடியவில்லை உங்களால். நாட்டினுடைய பொருளாதார நிலைமை சீர்கெட்டதோடு மட்டுமல்லாமல், மக்களுடைய நிலைமை சீர்கெட்டதோடு மட்டுமல்லாமல் பிற்காலத்திலே ஒரு மோசமான சூழ்நிலை உருவாக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி விட்டீர்கள். ஆகவே, நீங்கள் ஆட்சியில் இருப்பதற்கான தகுதியை நீங்களே இழந்துவிட்டீர்கள் என்று கருத்தைச் சொல்வதோடு பத்திரிகையிலே வந்த செய்தியைப்பற்றிக் குறிப்பிட்டுவிட்டு என்னுடைய உரையை முடிக்கலாம் என்று நினைக்கிறேன். தமிழ்நாடு ஆர்கைவ்ஸ்-இல் 86 ஆயிரம் ஹிஸ்டாரிக்கல் ரிக்கார்ட்ஸ் அழிக்கப்பட்டுவிட்டன என்று ராஜ்ய சபாவில் கேள்விநேரத்தின்போது சொல்லப்பட்டிருக்கிறது, அவையெல்லாம் 18 ஆம் 19 ஆம் நூற்றாண்டு ரிக்கார்ட்கள். முக்கியமானவை அவைகளை அழிக்க ஏன் உத்தரவிடவேண்டும்? அமைச்சரவைக்கு அது தெரியுமோ தெரியாதோ தெரியவில்லை எனக்கு. இன்னும் இருப்பதையாவது பாதுகாக்கவேண்டும் என்று கூறி இந்த

1974 டிசம்பர் 17] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

அமைச்சரவையின்மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தை முழுமனதோடு ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திருமதி சத்தியவாணிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே. . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எவ்வளவு நேரம் வேண்டும் உங்களுக்கு?

திருமதி சத்தியவாணிமுத்து: முக்கால் மணி நேரம் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரை மணி நேரத்தில் முடித்து விடுங்கள்.

திருமதி சத்தியவாணிமுத்து: முக்கால் மணி நேரம் வேண்டும். பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினரால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எனது கட்சியின் சார்பில் நானும் ஆதரிக்கிறேன் என்று கூறி அதற்கான ஆதாரங்களை முன்வைக்க விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவரவேண்டியதன் அவசியமே நாட்டில் ஏற்பட்டு இருக்கிற உணவுப் பற்றாக்குறை, விலைவாசி யேற்றம் மக்களால் வாங்க முடியாத அளவிற்கு மக்கள் படுகின்ற துன்பம் இவைகளையெல்லாம் நினைத்துதான். மழையின்மை, விளைச்சல் இல்லாத காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்தால் எதிர்க்கட்சிக்காரர்கள் இவ்வளவு பெரிதுபடுத்தியிருக்க மாட்டார்கள். ஆனால், இது அரசாங்கத்தின் கவனக் குறைவாலும், நிர்வாகத்தில் இருக்கிற அதிகாரிகளின் தவறுகளாலும் இந்த ஆட்சியை நடத்துகின்ற அமைச்சர் களாலும் இந்த ஆட்சிக்குப் பொறுப்பாக இருக்கிற முதலமைச்சரின் சரியான நிர்வாகத் திறமையின்மையினாலும் ஏற்பட்ட கோளாறினால்தான் இந்த விலைவாசியேற்றம், உணவுத் தட்டுப்பாடு என்பதை அனைவரும் ஒத்துக்கொள்ளக் கூடிய வகையிலே அதற்கான முறையிலே பயங்கரமான குற்றச்சாட்டுகள், மிகப் பயங்கரமான குறைகள் இந்த ஆட்சியினர் மீது சுமத்தி மதிப்பீட்டுக் குழுவினால் கொடுக்கப் பட்ட அறிக்கை அதற்கு ஆதரவாக இருக்கிற காரணத்தினால்

[திருமதி சத்தியவாணிமுத்து] [1974 டிசம்பர் 17

எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் துணிந்து அதையே ஆதாரமாக வைத்து அதிலே வருகின்ற பல்வேறு குறைகளையும் தவறுகளையும் ஆதாரமாக வைத்துக் கொண்டு ஆளுங்கட்சியினரால் நியமிக்கப் பட்ட மதிப்பீட்டுக் குழுவே இந்த முடிவிற்கு வந்திருக்கிறது என்றால் இன்னும் அவர்கள் நடத்தியிருக்கிற பல்வேறு குறைபாடுகளையும் இன்னும் இருக்கிற கோப்புகளையெல்லாம் பார்க்கிறபோது அவைகளிலே எல்லாம் எத்தனை எத்தனை ஊழல்கள் இருக்குமோ என்ற நம்பிக்கையிலேதான் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காகத்தான் இப்படிப்பட்ட நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து இப்படிப்பட்ட அரசு இருக்க லாயக்கற்றது என்ற முடிவிற்கு வந்து, இது இருக்கக் கூடாது, இதைப் பதவியிலிருந்து இறக்கம் செய்ய வேண்டுமென்று கருதித்தான் நான் இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்கிறேன்.

மதிப்பீட்டுக் குழுத் தலைவர் கொடுத்த அறிக்கையைப் பற்றிப் பலபேர் இங்கே விவாதித்தார்கள். அந்த பைலைக் காட்ட வேண்டுமென்று எதிர்க்கட்சிக்காரர்கள் கேட்டோம். சட்ட அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் அந்த பைலை எங்களுக்குக் காட்டினார்கள். அந்த பைலில் ஏறத்தாழ 32 டெண்டர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். 1971 ஆம் ஆண்டிலே யிருந்து அதற்கான கடிதப் போக்குவரத்து நடை பெற்றிருக்கிறது. எதிர்க்கட்சிக்காரர்களுக்கு இருக்கின்ற சந்தேகம் நீக்கப்பட வேண்டுமென்பதற்காக அந்த பைலைக் காட்ட வேண்டுமென்று சொன்னால் அந்த முழு பைலையும் எதிர்க் கட்சிக்காரர்கள் பார்த்தால்தான் அதிலே எங்கெங்கே தவறுகள் இருக்கின்றன என்பதை எதிர்க்கட்சிக்காரர்கள் நல்ல முறையில் கண்டுபிடிக்க முடியும். நிறைய அதில் இருக்கின்ற குறைகளைச் சொல்ல முடியும்.

ஆனால், அன்றைக்கு சட்ட அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் அந்த முழு பைலையும் கொண்டு வந்து எங்களுக்குக் காட்டவில்லை. பைல் என்றால், இவ்வளவு டூலிங்ஸ் நடந்திருக்கிறது, பைல் குறைந்தது 5 கிலோவாவது இருக்க வேண்டும், அவ்வளவு தடித்த பைலாக இருக்க வேண்டும். ஆனால் சட்ட அமைச்சர் கொண்டு வந்து காட்டியது, நான்கு தாள்

1974 டிசம்பர் 17] [திருமதி சத்தியவாணிமுத்து]

இணைக்கப்பட்டு ஒரு பிரவுன் பேப்பரில் சுற்றப்பட்டது ஒன்று, அதற்குப் பிறகு இன்னொரு 4 தாள் இணைக்கப்பட்டு பிரவுன் பேப்பரில் சுற்றப்பட்டது ஒன்று, அதற்குப் பிறகு 5 தாள் இணைக்கப்பட்டு பிரவுன் பேப்பரில் சுற்றப்பட்டது ஒன்று என்று இப்படி இருந்தன. எப்படி நான் பைலைக் காட்ட வேண்டுமென்று சொன்ன நேரத்தில் முன்னேயும் விட்டுவிட்டு, பின்னேயும் விட்டுவிட்டு இடையிலே ஒரு 4 தாள்களைக் காட்டினார்களோ அதைப்போல இதிலேயும் முன்னேயும் விட்டுவிட்டு, பின்னேயும் விட்டுவிட்டு இடையிலே நான்கு தாள்களை வைத்து, அதைக் கையிலே வைத்துக் கொண்டு இதோ முதலாவது டெண்டர் பாருங்கள் என்று சொன்னார்கள், பிறகு இரண்டாவது டெண்டரைப் பாருங்கள் என்று சொன்னார்கள், பிறகு மூன்றாவது டெண்டர், இதைப் பாருங்கள் என்று சொன்னார்கள். முன்னதற்கும் இரண்டாவதுக்கும், இரண்டாவதுக்கும் மூன்றாவதுக்கும் இடையிலே ஏற்பட்ட கரெஸ்பான்டென்ஸ் இருக்கிறதே அது காட்டப்பட்டதா என்றால், இல்லை. ஆனாலும் பார்த்தோம், அதுவே எங்களுக்குப் போதுமானதாக இருந்த காரணத்தினாலே அதை அப்பொழுதுகூட வற்புறுத்தவில்லை. அதிலும் பல தவறுகள், பைலைக் காட்ட வேண்டுமென்று கேட்டதற்கே காரணம் அதிலே தவறுகள் இருக்கின்றன, ஊழல்கள் இருக்கின்றன என்பதை நிரூபிக்கத்தான் அந்த பைலைக் கேட்டோம். அதில் நிறைய ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன. நிறைய தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. அதிலும் அரசாங்கத்தின், அமைச்சர்களின் ஈடுபாட்டால் வேண்டுமென்றே தவறுகள் நடைபெற்றிருக்கின்றது. அதைக் கண்டும் காணாத அளவிலே இன்றைக்கு முதலமைச்சராவர்களுடைய இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் இன்றைக்குச் சாட்டுகிறேன், அதை நிரூபிக்கவும் செய்கிறேன்.

மூன்று முறைகள் டெண்டர்கள் கூப்பிடப்பட்டிருக்கின்றன. 25—1—1971 இல் முதல் டெண்டரும், 15—2—71 இல் இரண்டாவது டெண்டரும், 9—3—71 ஆம் தேதி மூன்றாவது டெண்டரும் கூப்பிடப்பட்டிருக்கிறது. முதல் டெண்டருக்கு 100 லாட், ஒரு லாட்டிற்கு 500 ரூபாய் என்றால் 50,000 ரூபாய் டெபாசிட் கட்ட வேண்டும். முதல் டெண்டருக்கு 50,000 ரூபாய் டெபாசிட் கட்ட வேண்டும். எந்த டெண்டராக இருந்தாலும் டெபாசிட்

[திருமதி சத்தியவாணிமுத்து] [1974 டிசம்பர் 17

கொடுத்துவிட்டுத் தான் கேட்க முடியும், அப்பொழுதுதான் அதை 'போனஃபைட் டெண்டராக' ஏற்றுக்கொள்ள முடியும். டெபாசிட் கட்டவில்லையென்றால் அது 'போனஃபைட் டெண்டர்' இல்லை.

இங்கே, தாண்டவராயன் முதல் டெண்டரில் டெபாசிட் கட்டவில்லை, இரண்டாவது டெண்டரைப் பொறுத்தவரையில், 100 லாட்டிலே 500 ரூபாய் வீதம் அப்பொழுதாவது 50,000 ரூபாய் கட்டினார் என்றால் இரண்டாவது டெண்டரின் கடைசி நாளான 25 ஆம் தேதியன்றுதான் 17,000 ரூபாயைக் கட்டுகிறார்கள், அதாவது 34 டெண்டருக்கு. 100 டெண்டருக்குப் பதிலாக 34 டெண்டருக்கு 17,000 ரூபாயைக் கட்டுகிறார்கள். டெபாசிட் தொகை கூடக் கட்ட முடியாத அளவில், முதல் டெண்டருக்குக் கட்டவேயில்லை, இரண்டாவது டெண்டருக்கும் பூரணமாகக் கட்டவில்லை, இரண்டு முறையும் டெண்டர் அப்ளிகேஷன் ரிஜெக்ட் செய்யப்படுகிறது, கொடுக்கப்படவில்லை. அதற்குக் காரணம் அவரால் தொகை கட்ட முடியவில்லை, அவருக்கு அரிசியையும், நெல்லையும் கொடுக்க முடியாது என்ற நல்லெண்ணத்தினால் என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால், அப்படிப்பட்ட ஒருவருக்கு மூன்றாவது முறை டெண்டரே கூப்பிடாமல் ஏற்கனவே டெண்டர்கள் போட்டு அந்த டெண்டர்களை விநியோகித்து ஏற்றுக்கொண்டவர்களைக் கூட அழைக்காமல் அவர்கள் இதிலே முன்வரவில்லை என்ற காரணத்தைக் காட்டி தாண்டவராயனுக்கு மாத்திரம் அதிகப் படியான அளவில், 7,000 டன், 5,000 டன் என்ற அளவிற்கு அரிசியையும், நெல்லையும் கொடுக்க வேண்டிய காரணம் என்ன, இரகசியம் என்ன? அதைத்தான் இந்த மாமன்றத்திற்கு, மற்றவர்கள் சிந்திக்க வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே டெண்டர் என்ற முறையில் அபு என்பவர் சக்சஸ்ஃபுல் டெண்டரர் என்று மதிப்பீட்டுக் குழுவிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவருக்கு 100 டன், 200 டன் என்று மட்டும் கொடுக்கிறார்கள். டெண்டரில் ஈடுபட முடியாத ஒருவருக்கு, லாயக்கற்றவருக்கு, டெபாசிட் கட்ட முடியாமல்

1974 டிசம்பர் 17] [திருமதி சத்தியவாணிமுத்து]

இருப்பவருக்கு நெகோஷியேட் பண்ணினேம் என்று சொல்கிறார்கள். நெகோஷியேஷன் ஏற்படும். எப்பொழுது ஏற்படும் என்றால், நான் கூட விவசாயத் துறையிலே ஸ்ப்ரேயிங்க்கிற்கு நெகோஷியேட் செய்திருக்கிறேன். அதைப் போல ஃபிஷ்ஷரீசில் இருக்கும்பொழுதும் நெகோஷியேட் செய்திருக்கிறேன். டெண்டர் போனஃபைட் டெண்டராக வந்த பிறகு வேலைகளை அனைவரும் சரியாக ஒத்துக்கொள்ளவில்லையென்றால், படகு கட்டக் கூடிய லாயக்கு இல்லை என்றால், ஸ்ப்ரே பண்ணக்கூடிய லாயக்கு இல்லையென்றால், இத்தனையும் செய்து கொடுக்கக் கூடிய தகுதி இல்லை, திறமை இல்லை, முடியாது என்று வரும்பொழுது அவர்களை உட்கார வைத்துக்கொண்டு, உங்களால் ஏற்ற அளவிற்கு எடுத்துக்கொள்ளுங்கள், இந்த விலை தான் நியாயமான விலை, இந்த நியாயமான விலையை ஒத்துக் கொள்ளுங்கள் என்று அவரவர்களின் தகுதிக்கேற்ற அளவில் இடத்தை ஒத்துக்கொள்வார்கள் என்ற அளவிலே தான் நெகோஷியேடட் டெண்டர்கள் கருதப்படுகின்றன. அப்படித் தான் நான் இருக்கும்பொழுது செய்து கொண்டு வந்தேன்.

ஆனால், இந்த டெண்டரில் ஏற்கனவே டெண்டருக்குப் பணம் கட்டுவதற்குக் கூட முடியாமல், டெபாசிட் பணம் கட்டுவதற்குக் கூட முடியாமலிருந்த தாண்டவராயனை மூன்றாவது முறையாக, டெண்டரில் கலந்து கொண்ட யாரையும் கூப்பிடாமல் அவருக்கு மட்டும் தகவல் கொடுத்து, அவரும் தொலைபேசி மூலமாக நான் எடுத்துக்கொள்கிறேன். ஆனால், Arranging 5.1 deposit என்று தந்தி கொடுக்கிறார். அப்பொழுது கூட பூரண டெபாசிட் கட்டுகிறேன் என்று சொல்லவில்லை. 5 பர்சென்ட் டெபாசிட் கட்டுகிறேன் என்று சொல்கிறார். 5 பர்சென்ட் கட்டுகிறேன் என்று நேரிலே கூடச் சொல்லவில்லை, தந்தியிலே கூறுகிறார். மூன்றாவது டெண்டரில் இன்னும் அதிகப்படியான நெல்லும், அரிசியும் இருக்கிறது, ஏற்கனவே கொடுத்தது கொஞ்சம், இப்பொழுது நிறைய இருக்கிறது, ஆக அதிகப்படியான அரிசியையும் நெல்லையும் எடுக்க தாண்டவராயனுக்கு மட்டும் தகவல் கொடுத்து அவருடைய ஒப்புதலைத் தந்தி மூலமாகப் பெற்றது எந்த அதிகாரியின் செயல்? ஏன் அப்படிப் பெற வேண்டும்? இதற்கு நமது சட்ட அமைச்சரவர்கள் கூறுகிறார்கள், யாரும் எடுக்க முன்வரவில்லை, அவர்தான் எடுக்க

[திருமதி சத்தியவாணிமுத்து] /1974 டிசம்பர் 17

முன்வந்தார் என்று. யாரும் எடுக்க முன்வரவில்லை என்றால், ஏற்கனவே எடுத்த டெண்டர்தாரர்களையெல்லாம் நீங்கள் எடுத்துக் கொள்கிறீர்களா என்று கேட்டு கடிதம் எழுதப் பட்டதா? அரசாங்கத்திலேயிருந்தோ, கலெக்டரிடத்திலே யிருந்தோ அப்படி இருக்கிறதா என்றால் அதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. அப்படியில்லை என்றால், கடிதம் எழுதப் பட்டு, அந்த டெண்டர்களெல்லாம் நாங்கள் எடுக்க முடியாது என்று மறுத்தார்களா என்றால் சட்ட அமைச்சரவர்கள் காட்டிய பைலில் அதைக் காட்டவில்லை. தந்தியின் மூலமாகத் தாண்டவராயன் அளித்த பதிலைத்தான் காட்டுகிறார்கள். 'மேக்சிமம்' நான் எடுத்துக்கொள்கிறேன். எனவே, 5 பர்சென்ட் டெபாசிட் அரேஞ்ச் பண்ணுகிறேன், மாக்சிமம் எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்டவருக்கு எப்படி நீங்கள் மற்ற டெண்டர்களையெல்லாம் கூப்பிடாமல், அவர்களையும் கூப்பிட்டு நெகோஷியேட் பண்ணாமல் அவருக்கு மாத்திரம் தந்தியின் மூலமாகத் தகவல் கொடுத்து தந்தியின் மூலமாக ஒப்புதலைப் பெறுவதற்கான காரணம் என்ன? அதைத்தான் இன்றைக்கு நான் சட்ட அமைச்சரவர்களைக் கேட்க விரும்புகிறேன். அரசாங்கத்தைக் கேட்க விரும்புகிறேன் மூன்றாவது முறை டெண்டர் கூப்பிடாமல் இருந்ததற்குக் காரணம் என்ன? டெண்டர் கூப்பிட்டால் மற்றவர்களும் வருவார்கள், கேட்பார்கள், முறையாக அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய நிலைமை எற்படும் என்ற அந்த காரணத்தைக் கொண்டுதான், தாண்டவராயனுக்குக் கொடுத்தாக வேண்டும் என்பதற்காகத்தான் தாண்டவராயனுக்குக் கொடுப்பதற்கு நீங்களாகவே துணிகிறீர்கள்.

(மூற்பகல் 10.00)

ஐந்து பர்சன்ட் டெபாசிட் என்றாலும் ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.

சட்ட அமைச்சர் மாதவன் அவர்கள், வேறு டெண்டர்தாரர்கள் யாரும் முன்வரவில்லை. இவர்தான் அனைத்தும் எடுத்துக் கொள்ளு கிறேன் என முன்வந்தார். ஆகவே, அவருக்குக் கொடுத்தோம் என்று அன்றைக்குச் சொல்லுகிறார். அவர் போனஃபைட் டெண்டரர் அல்ல. மற்ற டெண்டர்கள் பெற்றுக் கொள்ள மாட் டோம் என்று மறுத்ததற்கு ஆதாரம் இல்லை. எனவே தாண்டவ ராயனுக்குக் கொடுத்திருக்கக் கூடாது.

1974 டிசம்பர் 17] [திருமதி சத்தியவாணிமுத்து]

ஆனால் வேறு ஆதாரங்கள் இருக்கின்றன. தாண்டவராயன் கொடுத்த தந்தியில் சக்தி டிரேடிங் கம்பெனி கேட்டதை விட பத்து ரூபாய் அதிகம் தருகிறேன் என்று சொல்லுகிறார். சக்தி டிரேடிங்கை விட 10 ரூபாய் அதிகமாகக் கேட்கிறேன் என்று சொன்ன தந்தியை வைத்து சட்ட அமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக் கொண்டதாகச் சொன்னார்கள். சக்தி டிரேடிங் கம்பெனி இடையில் வந்திருக்கிறது. அவர்களைப் புறக்கணித்துவிட்டு தாண்டவராயனுக்குக் கொடுத்திருக்கிறார்கள். சக்தி டிரேடிங் கம்பெனி என்ன கேட்டார்கள்; டன்னுக்கு அவர்கள் கொடுப்பதாகச் சொன்ன விலை என்ன என்பதற்கு ஃபைலில் ஆதாரம் இல்லை. யாரும் கேட்க முன்வரவில்லை என்று சட்ட அமைச்சர் சொல்லுகிறார். ஆனால் எஸ்டிமேட் கமிட்டி ரிப்போர்ட்டில் 9—3—1971 டெண்டரில் என். கே. அபு என்பவருக்கு 100 டன் கொடுத்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. மூன்றுவது முறை டெண்டர் கேட்டபோது நெகோஷியேட் பண்ணியாரும் முன்வரவில்லை, தாண்டவராயன்தான் முன்வந்தார், அவருக்கே கொடுத்தோம் என்று சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் எப்படி அபு என்பவருக்கு 100 டன் கொடுத்தார்கள்? வாமலா கொடுத்தார்கள்? அபுவும் விண்ணப்பித்திருக்கிறார். சக்தி டிரேடிங் கம்பெனியும் விண்ணப்பித்திருக்க வேண்டும். சக்தி டிரேடிங் கம்பெனியை விட அதிகமாகக் கேட்ட தாண்டவராயனுக்குக் கொடுத்ததாக அமைச்சர் அவகர்ள் சொல்லுகிறார்கள். அவர் பணத்தையாவது கட்டினாரா என்றால், இல்லை. பணம் கையில் இல்லாத ஒருவர் தொலைபேசி மூலமாக சென்னையிலிருந்து தஞ்சை கலெக்டருக்கு I am offering என்று சொல்லி 5 பர்சன்ட் டெப்பாசிட் மட்டுமே கட்டுகிறேன் என்று சொன்னவருக்கு இந்த அளவுக்கு அதிகப்படியான நெல்லும் அரிசியும் கொடுக்கவேண்டிய காரணம் என்ன என்பதைச் சிந்திக்கும்போது இதிலே தவறு இருக்கிறது, ஊழல் இருக்கிறது என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

தாண்டவராயனுக்கு மிகக் குறைவான அளவுதான் கொடுத்தோம் என்று மாண்புமிகு அமைச்சர் ப.உ.ச. அவர்கள் குறுக்கிட்டு சொன்னார்கள். எல்லாம் சேர்த்து 5,000 டன்தான் கொடுத்தோம் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சியிலிருந்து 'நீங்கள் 5,000 டன் என்று சொல்லுகிறீர்கள். அது எப்படி 700 வாகன லோடு வரும்? என்று கேட்டார்கள். அது எனக்குத் தெரியாது என்று அவர் சொன்னார்.

[திருமதி சத்தியவாணிமுத்து] [1974 டிசம்பர் 17

எஸ்டிமேட் கமிட்டி ரிப்போர்ட்டில் 700 வாகன் லோடு என்று கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். நான் இதற்காக ரயில்வே அதிகாரிகளிடத்தில் ஒரு வாகன் லோடில் எத்தனை டன்கள் எடுத்துக்கொண்டு போக முடியும் என்று கேட்டேன். அவர்கள் சொன்னார்கள்—மீட்டர் கேஜில் நான்கு சக்கர வாகன்களாக இருந்தால் வாகன் ஒன்றுக்கு 18 டன்னும், எட்டு சக்கர வாகன்களாக இருந்தால் 35 டன்னும் எடுத்துக்கொண்டு போக முடியும்; அதுவே, பிராட்கேஜில் 4 சக்கர வாகன்களாக இருந்தால் வாகன் ஒன்றுக்கு 22 டன்னும் 8 சக்கர வாகன்களாக இருந்தால் 52 டன்னும் எடுத்துக்கொண்டு போக முடியும் என்று சொன்னார்கள்.

அரிசி கடத்தப்பட்டிருக்கிறது; மீட்டர்கேஜில் அல்ல. கேரளா, வாடிபந்தர், பம்பாய், வெஸ்ட் பெங்கால் ஆகிய மூன்று இடங்களுக்கும் மீட்டர்கேஜில் போக முடியாது, பிராட்கேஜில்தான் போக முடியும். எட்டு சக்கரம் கொண்ட வாகனில் 52 டன் எடுத்துக்கொண்டு போக முடியும். அந்த வகையில் கணக்குப் பார்க்கும்போது 36,400 டன் அரிசியோ நெல்லோ எற்றிச் செல்லப் பட்டிருக்கிறது. 700 வாகன்கள் என்று மதிப்பீட்டுக் குழுத் தலைவர் சொல்லுகிறார். 700 வாகன்களில் 36,400 டன் அரிசியோ நெல்லோ மூன்று இடங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதை எப்படி அனுப்பினார்கள்? மாண்புமிகு ப. உ. ச. அவர்களுக்கு இந்தக் கணக்கைப்பற்றிக் கவலை இல்லை. எதைப் பற்றியும் அவருக்கு அக்கறை இல்லை. விவரத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற அக்கறை இல்லாமல் முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறார். அவருக்குத் தெரியாமல் எந்தக் காரியமும் நடை பெறவில்லை. வேண்டுமென்றே தகுதியில்லாத காண்டிராக்டர்களுக்குக் கொடுத்திருக்கிறார்.

இதற்கெல்லாம் அடிப்படை ஆதாரம் எங்கே இருந்து வருகிறது. ஏன் இவ்வளவு அக்கறையை இவர்கள் காட்டுகிறார்கள்? இந்த அளவுக்கு ஊழல் ஏற்பட்டுவிட்ட பிறகு சம்பந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முதலமைச்சர் அவர்கள் ஏன் தயங்குகிறார்கள் என்று சற்று யோசித்துப் பார்த்தால் அதற்குச் சில ஆதாரங்கள் எனக்குக் கிடைத்திருக்கின்றன. அதிலே அசோஷியேடெட் டிரேடர்ஸ் பற்றி எஸ்டிமேட் கமிட்டி ரிப்போர்ட்டிலே கொடுத்திருக்கிறார்கள். மொத்தத்தில் 19 பங்குதாரர்களில் 1 முதல் 6 வரை அசோகா டிரேடர்ஸ்; 7 முதல் 11 வரை மிஸ்ஸர்ஸ்

1974 டிசம்பர் 17] [திருமதி சத்தியவர்ணிமுத்து]

கன்னியப்ப முதலியார் கம்பெனி ; 12 முதல் 16 வரை ஷா ஏஜன்சிஸ் ; 17-ம் நபர் டி. ஆர். மணி ; 18-வது நபர் ஆர். வெங்கடேச செட்டி ; 19-வது நபர் எஸ். ராஜாமணி முதலியார். டி. ஆர். மணியும் ராஜாமணி முதலியாரும் சொந்தக்காரர்கள். ஏற்கனவே அசோகா டிரேடர்ஸ் ராஜாமணி முதலியார் மீது ரயில்வே கேஸ். 1020/72 என்ற எண்ணில் கடத்தலுக்காக ஒரு வழக்கு இருக்கிறது. டி. ஆர். மணி ராஜாமணி முதலியாருடைய சொந்தப் பிள்ளை. எஸ். ராஜாமணி முதலியார் ராஜமாணிக்க முதலியாருக்கு பிரதர்-இன்-லா—மைத்துனர். ராஜாமணி ஏற்கனவே அசோகா டிரேடர்சில் இருப்பவர். அவருக்குச் சொந்தப் பிள்ளை டி. ஆர். மணி, எஸ். ராஜாமணி முதலியார், டி. ஆர். மணி இந்த ஒப்பந்தத்தில் வருகிறார்கள். இந்த மூன்று பேருக்கும் வேறு ஒரு தொடர்பும் இருக்கிறது.

ஏற்கனவே, பாண்டியன் பிளைவுட் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தில் ராஜாமணியும் இருக்கிறார். அதிலே கண்ணன் என்பவரும் இருக்கிறார். இந்தக் கண்ணன் மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்களுடைய மருமகன். அப்துல் சலாம், சம்ருதின் என்பவர்கள் இருக்கிறார்கள். ஏற்கனவே அரகண்டநல்லூரில் 4,000 மூட்டைகளை வெள்ளம் அடித்துக்கொண்டு போனதாகக் கூறி ராவுத்தருக்குக் கொடுத்துவிட்ட குற்றச்சாட்டு இருக்கிறது. அப்துல் சலாம், கம்ருதின், ராஜமாணிக்கம் முதலியார் அவர்களுடைய சொந்தக்காரர்கள் எல்லாம் சேர்ந்து பாண்டியன் பிளைவுட் கார்ப்பரேஷனில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அப்துல் சலாம் சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஹல்லர். கம்ருதினும் ஒரு ஹல்லர். இவர்கள் எல்லோரும் சேர்ந்து பாண்டியன் பிளைவுட் கார்ப்பரேஷனில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். இதிலே மாண்புமிகு அமைச்சர் ப. உ. சண்முகத்தின் மருமகன் கண்ணன் இருக்கிறார். இந்தக் கண்ணனை அல்லது வேறு எந்தக் கண்ணனை என்பதற்கு ஆதாரம் இருக்கிறது. இந்தக் கண்ணனுக்குக் கொடுத்திருக்கும் டெலிபோன் நம்பர் அமைச்சர் ப. உ. சண்முகத்தின் திருவண்ணாமலை வீட்டுச் சொந்த டெலிபோன் நம்பர். ஆகவே, வேறு கண்ணன் என்று கொள்வதற்கில்லை.

ப. உ. சண்முகத்தின் சொந்த மருமகனை இந்தக் கண்ணன், ராஜாமணி, ராஜமாணிக்கம், டி. ஆர். மணி, அப்துல் சலாம், கம்ருதின் ஆகிய இவ்வளவு பேரும் சேர்ந்து வேறு ஒரு நிறுவனத்தில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். இந்தக் கண்ணன்

[திருமதி சத்தியவாணிமுத்து] [1974 டிசம்பர் 17

மறைமுகமாக இருந்திருக்கிறார். போனஸ்பைடியாக இல்லாமல் பினாமியாக இருந்திருக்கிறார். ஆகவே, இப்படிப்பட்ட பெரிய ஊழல்களுக்கு ப. உ. ச. அவர்கள்தான் காரணமாக இருக்கக்கூடும் என்ற குற்றச்சாட்டை உங்கள் மூலமாக இந்த அரசாங்கத்தின் மீது திணிக்கிறேன் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பாண்டியன் பிளைவியல் கார்ப்பரேஷனின் சேர்மன் சந்திர சேகரன் என்பவர். ஆறு ஏக்கர் நிலம் ஆற்றுப் படுகையில் ப. உ. ச. ரெவின்யூ அமைச்சராக இருந்த நேரத்தில் பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆற்றுப் படுகையை யாருக்கும் பட்டா செய்து கொடுப்பது கிடையாது. ஆனால் பாண்டியன் பிளைவுட் கார்ப்பரேஷன் சேர்மன் சந்திரசேகனுடைய மகனுக்கு ஆறு ஏக்கர் நிலம் ஆற்றுப் படுகையில் பட்டா போட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

ரெவின்யூ அமைச்சராக இருந்தபோது அவர்களுக்கு ஆறு ஏக்கர் ஆற்றுப்படுகையில் பட்டா செய்து கொடுத்திருக்கிறார்கள். நேற்று கூடச் சொன்னார்கள். அப்துல் சலாம் ப. உ. சண்முகம் அவர்கள் உணவு அமைச்சராக இருந்தபோது ஹல்லிங் ஏஜெண்ட், பின்னர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக ஆனபோது காண்ட்ராக்டர். காண்ட்ராக்டராக ஏன் இருக்கக்கூடாது என்று கேட்டார்கள். சூட்சமம் இதுதான். அவர்களுக்கு இதில் தொடர்பு இருக்கிறது. அவர்கள் எப்படி மாறி மாறி வருகிறார்களோ அதேமாதிரி உணவுத் துறைச் செயலாளரும் மாறி வருகிறார். அன்று யார் இருந்தது? ராமச்சந்திரன் இருந்தார். இன்று பி. டபிள்யூ. டி. செயலாளர் யார்? அதே ராமச்சந்திரன் தான். அதைத்தான் நான் சொல்கிறேன். நான் அமைச்சராக இருந்தபோது சென்னையில் உள்ள வியாபாரிகள் வந்து என்னிடம் குறைபட்டுக்கொள்வார்கள்.

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிர்வாகம் பற்றி குற்றம் சொல்வதில் தவறு இல்லை. ஆனால் அதிகாரிகளை தனிப்பட்ட முறையில் விமர்சிப்பது முறை அல்ல. அம்மையார் அவர்கள் செயலாளரைப் பற்றிக் கூறிய அந்த வாக்கியங்களை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

1974 டிசம்பர் 17]

திருமதி சத்தியவாணிமுத்து: புகார் வந்ததைச் சொன்னேன். அதில் என்ன தவறு இருக்கிறது? நான் என்ன செயலாளரின் அறைக்கா போனேன். புகார்கள் வருவதைச் சொல்கிறேன். அப்துல் சலாமைத் தெரியுமா, மணியைத் தெரியுமா அல்லது கண்ணனைத் தெரியுமா, யாரைத் தெரியும்? என்னிடம் வந்து குற்றம் குறைகள் சொல்கிறார்கள், அதை எடுத்துச் சொல்கிறேன். அவை சரியா இல்லையா என்பதை நீங்கள்தான் பரிசீலனை செய்ய வேண்டும். சொல்லவே கூடாது என்றால் என்ன பொருள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிப்பட்ட முறையில் அதிகாரிகளை விமர்சிப்பது கூடாது என்றுதான் சொல்கிறேன்.

திருமதி சத்தியவாணிமுத்து: சொன்னார்கள், அதைச் சொன்னேன். 700 வாகனங்கள் என்று சொல்வது 36,400 டன் அரிசியும் நெல்லும் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, நாட்டில் இந்தப் பற்றாக்குறை. எனவே நாட்டில் இந்தப் பஞ்சம். எனவே இன்று படி அரிசி ஏழு ரூபாய். இதற்கு மூல காரணம் அதிகாரிகளும் அமைச்சர்களும்தான்.

அமைச்சர்கள் போடுகிற உத்தரவுகளுக்கு முதல் அமைச்சர் அவர்கள் முத்தாய்ப்பு வைத்து முத்திரை குத்துகிறார், கையெழுத்து போட்டு. ஊழல் என்றால் அவர்களும் இதில் சேர்ந்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் இங்கு அழுத்தந்திருத்தமாக கூறுகிறேன். இல்லையென்றால், இவ்வளவு பெரிய குறைகள் எடுத்துச் சொல்லப்பட்டு ஊரில் எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் பேசிக் கொண்டு வரும்போது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் ஜப்பான் செல்வார்களா? சிகிச்சைக்காகச் செல்கிறேன் என்றார். அவர்கள் செல்கிறபோது எல்லாச் செலவுகளையும் அரசு ஏற்றுக் கொள்கிறது. ஜப்பானில் ஆகிற செலவு 300 சொச்சம் ரூபாய் என்கிறார்கள். அவர் நோய்க்காக சிகிச்சை பெற்றுக்கொள்ளவில்லை. ஜப்பானுக்குப் போனதற்கு ஒரு செக் அப் செய்து கொள்ளலாம் என்று போய் இருக்கிறார்களே தவிர அவருக்கு நோயும் கிடையாது, சிகிச்சையும் கிடையாது. ரூ. 300 சொச்சத்திற்கு ஜப்பானில் சிகிச்சை பெற ரூ. 32,000 செலவு செய்து, சர்க்கார் பணத்தைச் செலவு செய்துகொண்டு, அவர் போகலாமா? போகத்தான் வேண்டுமா என்று கேட்கிறேன். நேற்று கூடச் சொன்னார்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத்திற்கு வர

[திருமதி சத்தியவாணிமுத்து] [1974 டிசம்பர் 17

வில்லையே என்று. இவ்வளவு பெரிய எதிர்ப்பு ஆளுகிற கட்சிக்கு இருக்கிறது. ஊரில் அரிசிப் பஞ்சம் ஏற்பட்டிருக்கும்போது சம்பந்தப்பட்ட அமைச்சர் மீது கட்சியிலேயே குற்றம் சொல்லி, கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் குற்றஞ்சாட்டி, இவ்வளவுக்கும் காரணம் அவர்கள்தான் என்று பகிரங்கமாகப் பேசி வருகிற நேரத்தில் சர்க்கார் வரிப் பணத்தில் சொந்தத்திற்கு மருத்துவம் பெற்றுக்கொள்ள ஒரு அமைச்சர் போகிறார் என்றால் முதல் அமைச்சர் அவர்கள் அதற்கு உடந்தையாக இருக்க வேண்டிய காரணம் என்ன? எனவே கூட்டுச் சேர்ந்துகொண்டு கொள்ளை அடித்த காரணத்தால்தான் அவர்கள் மீது முதல் அமைச்சர் நடவடிக்கை எடுக்காமல் வாளாவிருக்கிறார், மெல்லவும் முடியவில்லை, விழுங்கவும் முடியவில்லை.

எனவே, அவர் எதுவும் செய்ய முடியாமல் இன்று ஐயா அவர்களையும் கைவிட்டு விட்டார்கள், பேரறிஞர் அண்ணா அவர்களையும் மறந்துவிட்டார்கள். அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தை இங்கே வைத்துக்கொண்டு நேற்று துணிச்சலோடு சொல்கிறார், நான் காமராஜுக்கு வாரிசு என்று. அதுகுறித்து நான் மெத்த வருத்தப்படுகிறேன். ஐயாவின் வாரிசு, அண்ணா அவர்களின் வாரிசு என்று சொன்னவர் இன்று ஐயாவையும் அண்ணாவையும் மறந்துவிட்டு நான் காமராஜரின் வாரிசு என்று சொல்கிறார். எந்த நேரத்தில் என்று கேட்கிறேன். காமராஜர் இந்த அரசின் மீது ஊழல் குற்றம் சுமத்தும்போது. ஊரெல்லாம் சொல்லிக்கொண்டு, ஊழலோ ஊழல் என்று பேசிக்கொண்டு வந்தார்கள். அதை எடுத்துச் சொல்லிய எம்.ஜி.ஆர். பழிவாங்கப்பட்டு அனுப்பப் பட்டார். அந்தக் காமராஜரைத்தான் இப்போது நமது முதல் அமைச்சர் கருணாநிதி அவர்கள், அவருடைய வாரிசு நான் என்று சொல்கிறார். நீங்கள் வாரிசு என்றால் அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். நான் போய் ஒவ்வொரு வீட்டிலும் நான்தான் வாரிசு வாரிசு என்று சொல்ல முடியாது. இவர்தான் என் வாரிசு என்பதை அந்த வீட்டுச் சொந்தக்காரர் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஐயாவின் அல்லது அண்ணாவின் வாரிசாக வரவேண்டியவர் இன்று காமராஜுடைய வாரிசாக வருகிறேன் என்கிறார், நான் வேதனைப் படுகிறேன். அண்ணாவை காராக்ரஹத்தில் தள்ளியவர், பெரியாருக்கு பல கொடுமைகளைச் செய்தவர், அண்ணாவிற்கு பல துன்பங்களைத் தந்தவர், இந்தக் கட்சிக்கு பல கெடுதல்களைச்

1974 டிசம்பர் 17] [திருமதி சத்தியவாணிமுத்து]

செய்தவர், பல பேர்களுக்கு பல துன்பங்களைச் செய்தவர், தங்களுடைய கொள்கைகளுக்குப் புறம்பாக இருப்பவர், காலம் பூராவும் கழகத்தை எதிர்ப்பவர், உங்கள் கட்சியைச் சார்ந்த அமைச்சர்கள் பற்றி ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெளியே இருப்பவர்களைப் பற்றி அப்போர்ப்பட்ட விமர்சனம் தேவையில்லை.

THIRU R. PONNAPPA NADAR: Sir, the hon. Member is slinging mud on Thiru Kamaraj. To sling mud on Kamaraj is her ulterior motive. We know about each individual. Every Tamilian knows who is Kamaraj and who is the person Kamaraj. Everybody knows about his honesty. We don't want anybody to cast aspersion on an honest person Thiru Kamaraj. It is a No-Confidence Motion against the Ministry. If the hon. Member has anything to talk ill of the Ministry, let her talk and let her not talk ill of Thiru Kamaraj who is not in the House. Of course, she may have difference of opinion on political ideologies and she may have so many things. All these personal animosities and insinuations need not be hurled on Thiru Kamaraj. I once again appeal to the hon. Member, through you, Mr. Speaker, not to sling mud on Thiru Kamaraj whose political life is a clean record.

திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, நான் பெருமதிப்பிற்குரிய காமராஜ் அவர்களைப்பற்றி குற்றம் சொல்லவில்லை. அவர்களை நான் குறை கூறவில்லை. அவர்களது வாரிசு என்று தன்னைச் சொல்லிக்கொள்கிற முதல் அமைச்சர் அவர்களைத்தான் நான் கேட்கிறேன். நீங்கள் ஐயாவின் அல்லது அண்ணாவின் வாரிசாக ...

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இதை விளக்கிவிடுவது நல்லது என்று கருதுகிறேன். நேற்று உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் பேசும்போது காமராஜரின் வாரிசு கருணாநிதி என்று குறிப்பிட்டார். காமராஜரின் வாரிசாக கலைஞரின் ஆட்சி நடைபெறுகிறது என்ற வார்த்தையை அவர் சொன்னார். அப்போது நான் சொன்னேன், தியாகிகளின் வாரிசாக இருப்பதில் தவறு இல்லை என்றும் நல்ல தொரு அரசியல் தியாகியான காமராஜின் வாரிசாக இருப்பதில்

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 17

தவறு இல்லை என்றுதான் சொன்னேன். அதனால் காமராஜ் அவர்களின் கொள்கைகள், அவர்களது ஆட்சியில் நடைபெற்ற குறைகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டதாக அர்த்தம் இல்லை. ராஜாஜி அவர்களோடு நாங்கள் என்னதான் கொள்கை மாறுபட்டிருந்த போதிலும் ராஜாஜியை மதிப்பவர்கள், அன்றும் சரி இன்றும் மதித்துக்கொண்டிருக்கிறோம். காமராஜரின் வாரிசு கருணாநிதி என்று சொன்னதால் அதைச் சொன்னேன். அரசியல் தியாகி ஒருவரின் வாரிசாக இருப்பதில் தவறு இல்லை என்று சொன்னேனே தவிர பெரியாரின் வாரிசு அல்ல, அண்ணாவின் வாரிசு அல்ல, காமராஜின் வாரிசு என்று கூறிக்கொள்ளவில்லை. காமராஜரைப்பற்றி குளனே, குலக்கொழுந்தே என்றெல்லாம் பாராட்டி எழுதியவர் தான் பேரறிஞர் அண்ணா. மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்கின்ற அந்த அரிய போதனையைப் போதித்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அண்ணா அவர்களின் வாரிசாக இருக்க விரும்பிய காரணத்தால்தான், காமராஜ் போன்ற அரசியல் தியாகிகளின் வாரிசாக இருப்பதில் பெருமைப்படுகிறேன் என்று சொன்னேன். இதிலிருந்தே நான் அண்ணாவின் வாரிசு என்பது நன்கு விளங்கும்.

திருமதி சத்தியவாணிமுத்து: ஏற்றுக்கொள்கிறேன். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்பதை ஏற்றுக்கொள்கிறேன். அந்த மல்லிகையின் மணத்தைத்தான் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமே தவிர அந்த மாற்றான் தோட்டத்தையே நம் தோட்டம் என்று ஏற்று அந்தத் தோட்டத்தில் போய் குடியிருந்து விடக்கூடாது. மல்லிகையின் மணம்தான் அனைவருக்கும் சொந்தமே தவிர அந்தத் தோட்டமே அனைவருக்கும் சொந்தம் அல்ல. அண்ணாவை மதிக்காமல் ...

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தோட்டத்தில் போய் குடியிருக்கக் கூடாது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். (பலத்த ஆரவாரம்)

திருமதி சத்தியவாணிமுத்து: அவர் காமராஜ் தோட்டத்திற்கு விரைவில் போகிறார் என்பதை இது நிரூபிக்கிறது.

1974 டிசம்பர் 17]

THIRU K. T. K. TANGAMANI: When we approve of certain thing, we do not clap our hands. We generally thump on the Table. It should not become a furore. You must also give us some protection. Thumping on the Table is all right. But thumping has also got a limit.

திருமதி சத்தியவாணிமுத்து: இன்னும் ஒன்று, கடந்த முறை கூடச் சொன்னார்கள். நான் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தாலும் சேருவேனே தவிர வேறு எந்தக் கட்சியிலும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசியல் விமர்சனம் வேண்டாம். நம்பிக்கையின்மைத் தீர்மானத்தின் மீதுதான் பேச வேண்டும்.

திருமதி சத்தியவாணிமுத்து: மதிப்பீட்டு கமிட்டியில் அறவைப் பணத்திற்கு ஆன பணத்தைக் கொடுக்கவில்லை என்று கணக்கு காட்டி இருக்கிறார்கள். இன்னும் பல பேர் அறவைப் பணத்திற்கான பணத்தைக் கொடுக்கவில்லை. 68-வது ஆண்டில் திருவள்ளூரைச் சேர்ந்த ஒரு இடத்தில் பெருமாள் என்பவர் அறவைப் பணத்திற்கான டெபாசிட் பணம் 10 ஆயிரத்தை கட்டவில்லை. அந்தக் கட்டணத்தை வாங்காமல் 84 ஆயிரம் ரூபாய் நெல்லை அறவைக்கு கொடுத்து இருக்கிறார்கள். அதைப்போல அருணாசலம் என்பவருக்கு 46 ஆயிரம் ரூபாய்க்கு அறவை கொடுத்து இருக்கிறார்கள். இதற்கும் டெபாசிட் பணம் கட்டவில்லை. சபாஸ்டின் என்பவருக்கு 94 ஆயிரம் ரூபாய் நெல் கொடுத்திருக்கிறார்கள். இவரும் பணம் கட்டவில்லை. ஆறுமுகம் என்பவர் கொசமப்பாளையத்தைச் சேர்ந்தவர், 37 ஆயிரம் ரூபாய் நெல் கொடுக்கப்பட்டிருக்கிறது. பணம் கட்டவில்லை. மொத்தம் 2 லட்சம் ரூபாய் ஆகிறது. இது என் மதிப்பீட்டுக் கமிட்டியில் வரவில்லை. நிறையப் பேர் பணம் கட்டவில்லை, வழக்கு மன்றம் சென்று இருக்கிறார்கள் என்று தகவல் கொடுத்து இருக்கிறார்கள்.

மதிப்பீட்டுக் குழுவில் ஏறத்தாழ இரண்டு லட்சம் ரூபாய்க்கு மேலாக நாலு பேருக்கு மேலாக கொடுத்து அறவை பணத்தைக் கொடுக்கவில்லை. அதற்கு வழக்கு மன்றத்திற்கு போயிருக்கிறது. இவை என் எஸ்டிமேட் கமிட்டிக்கு வரவில்லை. அவர்களுக்கு என் டெபாசிட் பணம் 10 ஆயிரம் வாங்காமல் அறவைக்கு கொடுக்க வேண்டும். அந்த அதிகாரி யார்? எடுத்த நடவடிக்கை என்ன?

[திருமதி சத்தியவாணிமுத்து] [1974 டிசம்பர் 17

வேறு யார் யார் மீதோ நடவடிக்கை எடுத்ததாகச் சொல்லுகிறார்களே, இவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? எனக்கு வந்த தகவலே இவ்வளவு என்றால் எனக்கும் வராமல் எஸ்டிமேட்ஸ் கமிட்டிக்கும் வராமல் போன கேஸ்கள் எத்தனை இருக்கும்? தெரியாமல் போனது எத்தனை லட்சமோ, எத்தனை கோடியோ. வராமல் போனது எத்தனை லட்சமோ எத்தனை கோடியோ என்று நினைக்கும்போதுதான் நிர்வாகம் எத்தனை மோசமாகச் செயல்படுகிறது என்று தெரிகிறது.

எனவே, நீங்கள் ஆள லாயக்கு அற்றவர்கள். உங்களால்தான் இந்த விலைவாசி ஏறி இருக்கிறது. இவைகளை எல்லாம் மறைத்து விட்டு ஏழை மக்கள் மத்தியில் போய் நாங்கள் இதைச் செய்கிறோம் அதைச் செய்கிறோம் என்று சொல்லி வருகிறார்கள். இதை நான் கண்டிக்க விரும்புகிறேன.

ஹரிஜன வீட்டு வசதிக் கழகத்தைப்பற்றி முதலமைச்சர் சொன்னார்கள். திருவள்ளூரில் கிடங்கில் சிமெண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது ஹரிஜன வீட்டு வசதிக்காக காலனி வீடுகள் கட்டுவதற்கு. அங்கு 24 பேர் சேர்ந்துகொண்டு இரவோடு இரவாக சாம்பலையும் மண்ணையும் கலந்து இருக்கிறார்கள். கையும் களவுமாக பிடிக்கப் பட்டு இருக்கிறார்கள். போலீசார்கள் பிடித்தார்கள் 24 பேரை. போலீசார் பிடித்தார்களே தவிர மறுபடியும் விட்டு இருக்கிறார்கள். வழக்கு போடவில்லை. இப்படி எத்தனை நடக்கிறது? ஏன் அவர்களை விட்டார்கள்? ஏன் வழக்கு போடவில்லை? நாம் எதிர்க்கட்சியாக இருந்தபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். கவுந்தம்பாடியில் அன்று அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் திறந்து வைத்த ஹரிஜன இல்லங்கள் எல்லாம் இடிந்து விழுந்து லாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் செய்வது போல இருந்தது என்று அன்றைக்கு குறிப்பிட்டார்கள். இப்படிப் பட்ட வீடுகளை கட்டவா வீட்டு வசதிக் கழகத்தை கொண்டுவர நாங்கள் பாடுபட்டோம்.

இன்றைக்கு சிமெண்டில் சாம்பலைக் கலக்கிறார்கள். 24 பேரை கையுங்களவுமாக பிடிக்கிறார்கள். சப் கலெக்டர் விசாரிக்கிறார்கள். நிறுத்து நிறுத்துப் பார்க்கிறார்கள். எதிலும் 50 கிலோ இல்லை. 28, 30, 40 ஆகத்தான் இருக்கிறது, எதிலும் 50 கிலோ சிமெண்ட் இல்லை. வழக்குகூட போடவில்லை என்றால், எந்த மாவட்டச் செயலாளர், வட்டச் செயலாளர் குறுக்கே வந்து வழக்கு போடாமல்

1974 டிசம்பர் 17] [திருமதி சத்தியவாணிமுத்து]

செய்திருக்கிறார்? பிறகு தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடு கட்டு கிறேன் என்ரூல் அதற்கு பிறகு மக்கள் ஏன் கட்டவில்லே என்று கேட்டால் என்னைப் போன்றவர்கள் பொறுப்பு உள்ளவர்கள் காரணத்தை விளக்குகின்ற நேரத்தில் பல விஷயங்களைச் சொல்ல நேரிடுகிறது. அதைச் சொன்னதற்காகத்தான் நான் வெளியே வர வேண்டியதாயிற்று. இப்படிப்பட்ட தவறுகளே நடக்க விடாமல் பார்ப்பதற்கு, கண்டிப்பதற்கு இனியாவது அரசு முன்வர வேண்டும்.

மாலே நேரக் கல்லூரிகளில் உபகாரச் சம்பளத்தை நிறுத்தி விட்டு இருப்பதாகச் சொன்னர்கள். மத்திய அரசாங்கம் உபகாரச் சம்பளம் என்று சொல்லப்படுகிறது. எனவே, இந்தச் சம்பளத்தை நிறுத்திவிட்ட மாணவர்கள் அல்லல் படுகிறார்கள். ஏறத்தாழ இந்த வரிசையில் 200 மாணவர்கள் இருப்பார்கள். இவர்கள் படிக்க தூழைந்துவிட்டார்கள். இடையில் உபகாரச் சம்பளம் இல்லே என்ரூல் எப்படிப் படிக்க முடியும்? ஆகவே மாநில அரசு தன் நிதியிலிருந்து உபகாரச் சம்பளத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாணவர்கள்மீது இந்த அரசு நிறையக் கொலேக் குற்றங்கள், அட்டெம்ட் டு மர்டர் என்று, பல செக்ஷன்களேப் போட்டு....

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: பேரவைத் தலேவர் அவர்களே, இந்த மாலே நேரக் கல்லூரி மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பது பற்றி நேற்று மூன் தினம் சில மாணவர்கள் வந்தார்கள். அதை நான் விசாரித்தேன். அதை இதுவரை மத்திய அரசாங்கம்தான் கொடுத்து வந்தது. மாநில அரசாங்கம் தான் கொடுத்து வந்தது. மாநில அரசாங்கம் கொடுக்கவில்லே. மத்திய அரசாங்கம் இப்படிப்பட்ட ஒரு வழக்கத்தை உருவாக்கி வைத்திருந்தார்கள். நாம் கொடுக்கவேண்டும் என்ரூல் நாம் புதிதாகச் செய்ய வேண்டும் என்று இருக்கிற காரணத்தால் 18 ஆம் தேதி அதிகாரிகளேக் கேட்டு இப்போது நிதி வசதி உள்ளதா, உபகாரச் சம்பளம் வழங்க இயலுமா என்று பரிசீலிக்க ஆலோசித்து இருக்கிறோம். மாணவர்களுக்கு எந்தக் கஷ்டம் வந்தாலும் அதைக் கவனிக்கத் தயாராக இருக்கிறோம்.

திருமதி சத்தியவாணிமுத்து: இந்த ஸ்டான்லி மெடிக்கல் காலேஜில் எட்டு மாணவர்கள் மீது கொலேக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. ஒரு பகுதி மாணவர்களுக்கும் மற்றொரு பகுதி மாண

வர்களுக்கும் ஜாதி அடிப்படையில் சண்டை ஏற்பட்டது. ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டார்கள். இடையில் வந்த மெஸ் வார்டன் மீது அவர் உயர் ஜாதிக்காரர் என்பதற்காக அவரையும் அடித்ததாக வழக்கு போடப்பட்டு இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மாணவர்கள் 8 பேர் மீது அட்டெம்ட் டு மர்டர் என்ற செக்ஷனைப் போட்டு வழக்கு தொடரப்பட்டு இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் சொல்லியும்கூட அந்த வழக்குகள் திரும்பப் பெறப்படவில்லை. அதுபோலவே மதுரையில் இருக்கிறது. புதுக்கோட்டையில் மாணவர்களை சஸ்பெண்ட் செய்து இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மீது கொலைக் குற்றம் சாட்டுவது என்பது அவர்களுக்குச் செய்த நன்மை என்று சொல்ல முடியுமா. நாங்குநேரியில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர், திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்டு, போலீஸ்காரர்களால் அடித்துக் கொலை செய்யப்பட்டு இருக்கிறார். எங்கள் கட்சியைச் சேர்ந்த ஸ்டீபன் என்பவர் காவல் நிலையத்திற்குப் போகிறார். திரு. பொன்னப்ப நாடார் கூட இதைப்பற்றி எடுத்துப் பேசினார். ஊர்வலம் நடத்தினர்கள். அந்த ஸ்டீபன் என்பவர் ஒரு பி.ஏ., எல்.எல்.பி. படித்தவர். அவர் அந்த வழக்கிற்காகச் சென்றபோது * * வெளியே போடா என்று போலீஸ்காரர்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அம்மையார் அவர்கள் இப்போது சொன்ன அந்த வார்த்தையை சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திருமதி சத்தியவாணிமுத்து : இந்த மன்றத்தில் அதைச் சொல்லும்போது எவ்வளவு வேதனைப்படுகிறீர்கள்? ஆனால் ஊரில் அப்படிப்பட்ட நிலைக்குத்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆளாக்கப்படுகிறார்கள். அன்றாடம் இந்த மக்கள் மீது சொல்லப்படுகிற வார்த்தைதான் இது. இந்த மன்ற குறிப்பிலிருந்து நீக்கலாம். கேட்டு, அபச்சாரம் என்று காதில் பஞ்சு வைத்துக்கொள்ளலாம். ஆனால் இப்படி நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டத்தான் நான் குறிப்பிட்டேன்.

காஞ்சீபுரத்தில் தாழ்த்தப்பட்ட பெண்கள் கற்பழிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

1974 டிசம்பர் 17] [திருமதி சத்தியவாணிமுத்து]

காவல்பாதுகாப்பு இயக்கத்தில் உயர் ஜாதிக்காரர்கள், ஏதோ ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளக் கூடாது என்று சொல்லி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தீ வைத்திருக்கிறார்கள். ஆம்பூரில் . . .

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் சட்ட மன்ற உறுப்பினர் நான். காஞ்சிபுரத்தில் கற்பழிக்கப்பட்டார்கள் என்ற தகவல் இதுவரை என் காதுகளுக்கு எட்டவில்லை. எங்கே நடைபெற்றது என்ற விவரங்களை அம்மையார் தெளிவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருமதி சத்தியவாணிமுத்து: தகவல் கொடுக்கிறேன். ஆம்பூரில் தேவிகாபுரம் என்ற இடத்தில் விவசாய மக்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அம்மையார் அவர்கள் விரைவில் முடிக்க வேண்டும். மேலும் மேலும் ஒவ்வொன்றுக சொல்லிக்கொண்டே போவதற்கு நேரம் இல்லை.

திருமதி சத்தியவாணிமுத்து: ஆம்பூரில் 40 தாழ்த்தப்பட்ட மக்களை கைது செய்தார்கள். அவர்கள் ஊருக்கும் செல்ல முடியவில்லை. போலீசிலிருந்தும் விடுவிக்க முடியவில்லை. அன்றுடம் இப்படிப்பட்ட கொடுமைகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படுகின்றன. இப்படி தாழ்த்தப்பட்ட மக்களை பழி வாங்கிக் கொண்டு இருக்கிற நிகழ்ச்சிகளை அமைச்சர்களும் இந்த அரசாங்கமும் கண்டிக்கவில்லை.

இன்றைக்கு நாட்டில் அரிசிப் பஞ்சம் ஏற்பட்டு இருக்கிறது. நிர்வாகத்தில் தவறு ஏற்பட்டு இருக்கிறது. ஆட்சியில் ஊழல் நிரம்பி இருக்கிறது. பைல் கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் சரியான பைல்களைக் கொடுக்கவில்லை. ஊழல் நடைபெற்று இருக்கிறது. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்கள் அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட வேண்டும். அவர் நீக்கப்படவில்லை என்றால் முதலமைச்சர் அவர்களும் உடந்தையாக இருக்கிறார் என்று குற்றம் சாட்டுகிறோம். முதலமைச்சர், அவரை நீக்க முன்வரவில்லை என்றால் முதல்வர் அவர்களும் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று இந்தத் தீர்மானத்தை ஆதரித்து நான் அமர்கிறேன்.

1974 டிசம்பர் 17

(மூற்பகல் 10-30)

திரு. கோவை செழியன்: சார், ஒரு வார்த்தை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நேரம் இல்லை. நீங்கள் உட்காருங்கள். திரு. தங்கமணி, நீங்கள் பேசுங்கள். நான் அனுமதித்தால் மட்டும் மற்றவர்கள் குறுக்கிட இடம் கொடுத்தால் போதும். இல்லையென்றால் பேசுகின்ற உறுப்பினர்கள் தொடர்ந்து பேசினால்தான் குறிப்பிட்ட நேரத்திற்குள் விவாதத்தை முடிக்க முடியும்.

திரு. கோவை செழியன்: அப்படியானால் யாரும் இடையில் கேட்கக் கூடாதா? நான் கேட்பது ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்றால் கேளுங்கள்.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் பேசும்போது உணர்ச்சிவசப்பட்டு ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். அந்த வார்த்தையை சபைக் குறிப்பில் இருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த வார்த்தை அப்போதே நீக்கப்பட்டுவிட்டது. அவர்கள் சொன்னபோதே நீக்குவதற்கு உத்தரவு பிறப்பித்துவிட்டேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சபைக்கு முன்னால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. கோவை செழியன் அவர்களால் கொண்டுவரப் பட்டிருக்கிற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் பேரிலும், காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. எ. சுப்பிரமணியம் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் கண்டனத் தீர்மானத்தின் பேரிலும், இந்தத் தீர்மானங்களை நாங்கள் ஆதரிக்கிறோம் என்ற முறையில் எங்கள் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

இப்படிப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானங்களை அடிக்கடி கொண்டுவருவதன் மூலம் எதிர்க்கட்சிகள்மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போய்விடும் என்று இங்கே பேசிய ஒரு உறுப்பினர் கூறினார். பல நம்பிக்கை இல்லாத் தீர்மானங்களை

1974 டிசம்பர் 17] [திரு. கே. டி. கே. தங்கமணி]

எதிர்க்கட்சிக்காரர்கள் கொண்டுவந்தது உண்மை. ஒரு முறை நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தாலும் கூட, அதிலே பூரண நம்பிக்கை எங்களுக்கு ஏற்படாமல் மேலும் கொண்டுவந்து, பல புதிய விஷயங்களை எடுத்துச் சொல்வதற்காகத் தான் பல முறை நம்பிக்கை இல்லாத் தீர்மானங்கள் கொண்டுவரப் படுகின்றன. அதனால்தான் இப்போதும் இந்தத் தீர்மானங்கள் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தையும், கண்டனத் தீர்மானத்தையும் நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இது பொதுவாக நம்பிக்கை இல்லாத் தீர்மானமாக இருப்பதால் இந்த அரசு 1971-ஆம் ஆண்டு ஆட்சிபீடம் ஏறியபோது இருந்த நிலைமைகளையும், அதற்குப் பின்னால் ஏற்பட்ட நிலைமைகளையும் சுருக்கமாக எடுத்துக்கூற விரும்புகிறேன்.

பெரும்பான்மை உறுப்பினர்களைப் பெற்று, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. இந்த ஆட்சியைப் பற்றி 14—3—1971-ல் புதுடில்லியிலிருந்து வெளிவரும் 'பேட்ரியாட்' என்ற பத்திரிகையில் ஒரு தலையங்கம் பிரசுரித்திருக்கிறார்கள். அது ஒரு சிறு பகுதியாக இருப்பதால் பேரவைத் தலைவரவர்களின் அனுமதியின் பேரில் இங்கே படிக்க விரும்புகிறேன்.

'The massive majority the D.M.K. has obtained should lead to humility on the part of the party leadership. The people have always recognised it as a vaguely progressive party and this belief was strengthened by the formation of the Progressive Front in the State and the support given to Mrs. Gandhi's Government at the Centre. What is called for now is the translation of this vague image of radicalism into concrete terms. Its position should not lead to adoption of an arrogant attitude by the D.M.K. towards its allies, chiefly C.P.I., Forward Bloc and P.S.P.; the Front should work oua a pro gramme of social and economic measures for the next five years, in which land reforms and a fair deal for labour, as well as provision of jobs to the unemployed should have top priority.'

இது ஒரு நல்ல எண்ணத்தோடு, தமிழ்நாட்டில் நல்ல நிலைமை உருவாக வேண்டுமென்ற எண்ணத்தோடு வெளிவந்ததாகும். ஆளும் கட்சி உருப்படியான காரியங்களைச் செய்யவேண்டுமென்று

[திரு. கே. டி. கே. தங்கமணி] 1974 டிசம்பர் 17

விரும்பியே இந்த விஷயத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் இங்கே எப்படி நடைபெறுகிறது என்பதை ஒருசில உதாரணங்களுடன் சொல்ல விரும்புகிறேன்.

கொஞ்ச நாளைக்குள்ளாகவே தாங்கள் பெரியதொரு கட்சியாக இருக்கிறோம் என்ற எண்ணம் ஆளும் கட்சிக்கு ஏற்பட்டுவிட்டது. ஏற்கெனவே காங்கிரஸ் கட்சித் தலைவர் மாரிமுத்து அவர்கள் பல உதாரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த உணவுக் கொள்கை சம்பந்தமாக எப்படிப்பட்ட ஒரு கோளாறு ஏற்பட்டது; அது எப்படித் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். அதற்குக் காரணம் அரசியல் துறையிலே தாங்கள் பெரியதொரு கட்சியாக, பெரும்பான்மை பலத்துடன் இருக்கிறோம் என்ற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்பட்டதுதான்.

அரியாங்குப்பத்தில் 7 கட்சிகளின் கூட்டணி போட்டியிட்டது. அதில் காங்கிரஸ் கட்சியும் இருந்தது. இந்த 7 கட்சிகளின் கூட்டணியைச் சேர்ந்த ஒருவர் போட்டியிடுகின்றபோது, வேறு எந்தக் கட்சியையும் கலந்து கொள்ளாமல் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் இந்தக் கூட்டணியிலிருந்து ஆளும் காங்கிரஸ் கட்சியை விலக்கிவிட்டேன் என்று அறிவித்தார்கள்.

அதுமட்டுமல்ல. நம்முடைய கொள்கைக்கு ஒரு குறைந்த பட்ச திட்டம் வேண்டாமா; அதைப்பற்றி கூடி பேசவேண்டாமா என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேட்டபோது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் இல்லாத கட்சி, தலைமை இல்லாத கட்சி, இது தொண்டர்கள் நடத்துகின்ற கட்சி என்று நையாண்டி பண்ணக்கூடிய முறையில் அவர்கள் பதில் அளித்தார்கள். இதற்குக் காரணம், 'what is called big party bossism' என்று சொல்வார்கள். அந்த எண்ணம் ஓராண்டு காலத்திற்குள்ளாகவே இவர்களுக்கு வந்துவிட்டது. அதனால் படிப்படியாக மக்களிடமிருந்து சறுக்கிக் கொண்டே வந்து, இன்றைக்கு இந்த நிலைமைக்கு வந்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதனுடைய உச்ச கட்டமான நேரத்தில்தான், 1972 அக்டோபர் மாதம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் பிளவு ஏற்பட்டு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உதயமாயிற்று. அதைப்பற்றி பல பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. 13—10—1972 அன்

1974 டிசம்பர் 17] *[திரு. கே. டி. கே. தங்கமணி]*

இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில்,

'There can, however, be no doubt that the D.M.K. after split will not be the party it was.'

என்று செய்தி வந்தது. 20—10—1972 மெயில் பத்திரிகையில்

'The inevitable has happened. Opposition parties will exploit it to weaken the Ruling Party.'

என்று செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு 1973, 74 ஆண்டுகளில் ஆளும் கட்சியினுடைய நடவடிக்கைகளைப் பார்த்தால், யாரும் நினைத்துப் பார்க்க முடியாத நிலைமையில் இருக்கிறது. இன்றைக்கு யார் சட்டமன்றத்தில் பேசினாலும், வெளியே பேசினாலும் உணவு நிலைமையைப் பற்றி பேசாமல் போனால், மக்கள் நிலையை அவர்கள் புரிந்துகொள்ளாதவர்கள், நாட்டு மக்களுக்கு நல்லது செய்யவேண்டுமென்ற எண்ணம் இல்லாதவர்கள் என்று சொல்லக்கூடிய அளவுக்கு உணவு நிலைமை இருக்கிறது. ஆகையால் தான் நேற்றுகூட இந்து பத்திரிகையில்—மற்றப் பத்திரிகைகளிலும்— 'Rice has become bitter rice' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அவர்கள் அதிலே குறிப்பிட்டிருக்கிற விஷயங்களையும் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். இந்த நேரத்தில் அதைக் குறிப்பிடுவது பொருத்தமாகவும் இருக்குமென்று கருதுகிறேன்.

'The near famine conditions in many parts of Tamil Nadu and the prevailing high prices of rice have understandably provoked heated debate in this House. The inescapable conclusion is that either the output of 55 lakh tonnes of rice last year was a gross overestimate orthere has been a large scale smuggling of rice out of the State.'

இந்த இரண்டு காரணங்கள்தான் இருக்க முடியும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

அரிசி சம்பந்தமாக வருகிறபோது, நாங்கள் முன்பே குறிப்பிட்டிருக்கிறோம். 1972-லே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும், எங்கள் கட்சியின் பொதுச் செயலாளர் கல்யாணசுந்தரம் அவர்களும், நானும் ஒரு பட்டியல் தயாரித்து மத்திய அரசுக்குக் கொடுத்தோம். அந்தப் பட்டியல் இங்கே வைக்கப்பட்டு, அதற்குப் பதிலும் கொடுத்தார்கள். அந்தப் பதிலுக்குப் பதிலாக நாங்கள்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 டிசம்பர் 17

இன்னொரு 'ரிஜாயின்டர்' கொடுத்தோம். அதற்கும் 'ரிப்ளே' கொடுத்தார்கள். அவை இதே மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

இன்றைக்கு, 24-வது எஸ்டிமேட்ஸ் கமிட்டியின் ரிப்போர்ட்டில் என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள்? எஸ்டிமேட்ஸ் கமிட்டியின் தலைவர் அதை மீண்டும் படிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் கொடுத்த ரிப்போர்ட்டில் 195-வது பக்கத்தில் இதை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். உணவுப் பிரச்சனையிலே கை வைக்கப்பட்டிருப்பதைக் குறிப்பிட்டிருக்கிறோம்.

'Fraud on people's food'

என்று சொல்லியிருக்கிறோம். ஒரு கோடி ரூபாய்க்குமேல் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது அந்த வகையில். கோஸ்ட் கம்பெனி, ஏ.எம்.லிட். என்றெல்லாம் கம்பெனிகள் என்று இன்வாய்ஸ் எல்லாம் கூட போட்டிருந்தார்கள். அப்படிப்பட்ட கம்பெனிகள் இருக்கின்றனவா என்பதை சந்தேகப்பட்டு சாங்கோபாங்கமாகவும், விரிவாகவும் எடுத்துச்சொல்லியிருக்கிறோம். அதற்குப் பதில் சொல்கிறபோது, எந்த இடத்திலாவது இங்கே இருக்கிற அரிசி கேரளாவுக்குப் போக பெர்மிட் இருந்தது என்று சொல்லவில்லை. கேஸ் போட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். கேஸ் போட்டிருக்கிறோம் என்று சொல்வது, எங்களுக்கு வேண்டுமானால் திருப்தியாக இருக்கலாம். ஆனால் உண்மை என்ன? இன்றைக்குப் பார்க்கிறோம். 24-வது எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள்.

அதனால் ஜனங்கள் மத்தியிலே ஒரு பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. கமிட்டி ரிப்போர்ட்டைப்பற்றி இங்கே பேசினார்கள். அப்போது அது சம்பந்தப்பட்ட ரிக்கார்டுகளை பார்க்க வேண்டுமென்று சொன்னார்கள். பல சர்ச்சைகளுக்குப் பின்னால் சம்பந்தப்பட்ட ரிக்கார்டும் காட்டப்பட்டது. அதைப் பார்த்துவிட்டு சிலர் உண்மை என்றார்கள்; சிலர் உண்மையான ரிக்கார்டு அல்ல என்று சொன்னார்கள். எங்களுக்குக் காட்டப்பட்ட ரிக்கார்டைப் பொறுத்தவரையில் அது உண்மை என்று நான் சொன்னேன். இன்றைக்கும் அதைத்தான் சொல்கிறேன். நான் உண்மை என்று சொன்ன உடனே பார்த்தீர்களா தங்கமணி உண்மை என்று சொல்லிவிட்டான்; தங்கமணியே உண்மை என்று சொல்லிவிட்டால் எல்லாம் உண்மையாகிவிடும் என்று சொல்லி ஆரவாரம்

செய்தீர்கள். ஆனால் அதன் உள்ளே இருக்கிற சரக்குகளைப் பார்த்தால், அதிலே தேனும், நட்டுவாக்காலியும், நல்லபாம்பும் இருக்கின்றன.

உண்மை நிலைமையை வைத்துப் பார்த்தால், யாருமே அங்கு நடந்தது சரி என்று சொல்ல முடியாது. அதைத்தான் வெகு விளக்கமாக, நல்ல முறையில் அழுத்தந்திருத்தமாக அருணா அவர்கள் சொன்னார்கள். இன்று கூட எனக்கு முன்னால் பேசிய தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத் தலைவர் சில விபரங்களை இங்கே எடுத்துச்சொன்னார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேசும்போது தாழ்த்தப் பட்டோர் முன்னேற்றக் கழகத் தலைவியைப்பற்றிச் சொன்னார்களே, அவர்களுடைய பெயரும் அவர்கள் கொடுத்ததில் இணைக்கப்பட் டிருக்கிறதா? அது ஞாபகம் இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த திசை திருப்பக்கூடிய முறைதான் இந்த நிலைக்கு வந்திருக்கிறது. யாராக இருந்தாலும்- அன்றைக்கு விசாரணை செய்ய வேண்டும் என்று கேட்டோம். நீங்கள் இன்றைக்கு வேண்டுமென்றால் காழ்ப்புணர்ச்சியோடு அவர்களை எதிர்க்கலாம். அன்றைக்கு நீங்கள் கொடுத்த பதில் என்ன? அன்றைக்கு நீங்கள் கொடுத்த பதிலையே இன்றைக்குச் சொல்லத் தயாரா?

மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி: நாங்கள் அதே பதிலைச் சொல்கிறோம். திரு. தங்கமணி ஏற்றுக்கொள்ளத் தயாரா?

திரு. கே. டி. கே. தங்கமணி: அதைத்தான் இப்போது சொல் கிறேன். ஏற்றுக்கொள்ளத் தயார். இப்படிச் செய்தவர்களை, இந்த ஆட்களை பாதுகாக்கக்கூடிய வகையில் செயல்படுகிறார்களே என்பதுதான் எனக்கு கொம்ப ஆச்சரியமாக இருந்தது.

எஸ்டிமேட்ஸ் கமிட்டி ஒரு ரிப்போர்ட் கொடுக்கிறது. எஸ்டி மேட்ஸ் கமிட்டி உறுப்பினர்கள் சார்பாக அந்தத் தலைவர் அரசாங் கத்திற்குச் சில சிபாரிசுகளைச் செய்கிறார். அந்தச் சிபார்சின் அடிப்படையில் அரசு உடனே நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்றுதான் இவ்வளவு நாட்களாக நினைத்துக்கொண்டிருக்கிறோம்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 டிசம்பர் 17

எஸ்டிமேட்ஸ் கமிட்டி சிபாரிசுகளை அரசு செயல்படுத்துவதுதான் நாட்டின் பார்லிமெண்டரி ஜனநாயக முறை. எஸ்டிமேட்ஸ் கமிட்டியின் இந்த அறிக்கை மீது அந்த இலாக்காவில் உள்ள அதிகாரிகளோ, அந்த இலாக்காவுக்கு தலைமைப் பொறுப்பை வகிக்கும் அமைச்சரோ நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் என்றுதான் எதிர்பார்த்தோம்.

ஆனால் முன்னாள் உணவு அமைச்சர் நேற்று இந்த அவையில்— எஸ்டிமேட்ஸ் கமிட்டி என்ன ரிப்போர்ட் கொடுத்தாலும் எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை என்று துணிந்து இந்த அவையிலே பேசுகிறார் என்றால் இதையே நான் ஒரு ப்ரிவிலேஜ் ஆகச் சொல்ல முடியும்.

எஸ்டிமேட்ஸ் கமிட்டி நாங்கள் போட்டது அல்ல. இந்த அவையினால் போடப்பட்டது எஸ்டிமேட்ஸ் கமிட்டி. அது அரசுக்குச் சில சிபாரிசுகளைச் செய்திருக்கிறது என்றால் அரசு அந்தச் சிபாரிசுகளை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும். அப்படிச் செயல் படுத்த முடியாதவைகள் இருந்தால் உடனே இந்த அவைக்கு இன்ன இன்ன சிபாரிசுகளை இன்ன காரணங்களினால் செயல்படுத்த முடியவில்லை என்று தெரிவிக்கவேண்டும்.

திரு. இராம. அரங்கண்ணல்: எஸ்டிமேட்ஸ் கமிட்டியின் பரிவுரைகள் அனைத்தையும் அரசு ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற அவசியம் இருக்கிறதா? அந்தப் பரிவுரைகளை ஏற்றுக்கொள்ளவும் செய்யலாம் அல்லது நிராகரிக்கவும் அரசுக்கு உரிமை இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அமல் நடத்தாமல் போனால் இருங்கள். எதை எதை அமல் நடத்தவில்லை என்றாவது இந்த அவைக்கு நீங்கள் தெரிவித்திருக்க வேண்டாமா? எஸ்டிமேட்ஸ் கமிட்டியின் சிபாரிசுகளில் இதை இதை நிறைவேற்றுவதற்கு இல்லை என்று ஒரு தீர்மானத்தை இந்த அவையில் விவாதத்திற்குக் கொண்டு வாருங்கள். "எஸ்டிமேட்ஸ் கமிட்டி என்ன ரிப்போர்ட் கொடுத்தாலும் எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை" என்று ஒரு அமைச்சர் இந்த அவையில் பேசுவது என்றால் . . . .

[1974 டிசம்பர் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எஸ்டிமேட்ஸ் கமிட்டி சிபாரிசுகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். சில சிபாரிசுகளை ஏற்றுக் கொள்வதற்கு இல்லையென்றால் அதற்கான காரணங்களை அரசாங்கம் இந்த அவைக்கு அறிவிக்க வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இப்படி இருக்கும்போது, இதற்கு மாறாக ஒரு அமைச்சர் இந்த அவையில் "எஸ்டிமேட்ஸ் கமிட்டி என்ன ரிப்போர்ட் கொடுத்தாலும் அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை" என்றால் அவர் இந்த அவையையே அவமதித்திருக்கிறார்.

எப்படியோ இன்று எஸ்டிமேட்ஸ் கமிட்டியின் ரிப்போர்ட் பெரிய சர்ச்சைக்குரிய விஷயமாகிவிட்டது. எஸ்டிமேட்ஸ் கமிட்டி கொடுத்த ரிப்போர்ட். சம்பந்தப்பட்ட ஃபைலைப் பார்த்ததன்பேரில் ஒன்றிரண்டு விஷயங்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இந்த அரசு படிப்படியாக பெரும் முதலாளிகள், கோடீஸ்வரர்கள், பெரிய நிலப்பிரபுக்கள் ஆகியவர்களுடைய கையில் அகப்பட்டுக் கொண்டு அவர்கள் சொல்வதையே செய்வோம் என்ற நிலைக்கு வந்துவிட்டது என்பதுதான் எங்கள் குற்றச்சாட்டு. உங்களுக்கு அதிகாரம் இருக்கலாம். ஆனால் அந்த நிலைக்கு வந்த பிறகு உங்கள் அதிகாரத்தை வைத்துக்கொண்டு நீங்கள் அவர்களை ஆட்டிப்படைக்க முடியாது. அவர்கள்தான் உங்களை ஆட்டிப் படைக்கிறார்கள். அவர்கள் போட்டதே உத்தரவாகப் போய் விட்டது. அவர்கள் கையில் அகப்பட்டுக்கொண்ட பிறகு அவர்களை எந்த ஆட்சியும் ஆட்டிப் படைத்ததாகச் சரித்திரமே இல்லை.

இந்த ஃபைலைப் பார்த்ததை வைத்துச் சொல்கிறேன். 20—3—1971-ல் வி. எஸ். தியாகராஜ முதலியார்—தஞ்சாவூர் மார்க்கெட்டிங் பெடரேஷன் தலைவர்—அரசுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதை அப்படியே ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். அவரைப் பற்றி திரு. மாதவன் சொன்னார். அரிசி ஸ்டாக் இல்லை—கார்ப்பரேஷனுக்குச் சொந்தமானது. அதற்காக ஒரு கோடி எழுபது லட்சம் அவர் கொடுக்காமல் போய்விட்டார். அதை செக்கவரி செய்திருக்கிறீர்களா? இல்லை. அப்படிப்பட்ட அவர் எழுதிய கடிதத்தை—அப்படியே கார்பன் காப்பி மாதிரி எடுத்து டிராஃப்ட் நோட் போடப்பட்டிருக்கிறது. அதன்பேரில் 24—3—71-இல் அமைச்சர் கையொப்பமிட்டு ஃபைனல் ஆர்டர் வருகிறது. இது 8—4—71-இல் முதலமைச்சரால் பார்க்கப்பட்டு அவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதில் ஒரு வாக்கியம் இருக்கிறது.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 டிசம்பர் 17

The Hon. Minister has orally asked me to accept it. இதைவிட ஊழலுக்கு என்ன உதாரணம் சொல்ல முடியும்? அதற்குப் பின்னால் உணவு அமைச்சர் கையொப்பமிட்டிருக்கிறார். அதற்குப் பிறகு முதலமைச்சருக்கும் அந்த ஃபைல் அனுப்பப்பட்டு, முதலமைச்சரும் கையொப்பமிட்டிருக்கிறார். ஒவ்வொரு ஃபைலும் முதலமைச்சருக்குப் போகவேண்டும் என்று இங்கிருக்கிறதுபோல் உள்ளது. இப்படி ஒவ்வொரு ஃபைலிலும் முதலமைச்சர் கையொப்பம் இருக்க வேண்டுமென்றால்—இந்தியப் பிரதமருக்கு கையெழுத்துப் போட்டுக்கொண்டிருக்கக் கூட நேரம் இருக்காது என்று நினைக்கிறேன். முதலமைச்சருக்கு நான் தெளிவாகச் சொல்கிறேன். அப்போதிருந்த உணவு அமைச்சர் மட்டுமல்ல—முதலமைச்சரும் அவர்களும் சேர்ந்திருக்கிற சிண்டிகேட்—அந்த சிண்டிகேட் செயல்பட்டிருப்பதன் காரணமாகத்தான் இந்தமாதிரி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரசு சரியான முறையில் செயல்படவில்லை. அந்த ஃபைலில் இருந்து We are able to cull out certain facts and the facts are so damaging. அந்த விவரங்களைப் பார்க்கிறபோது தவறு நடந்திருக்கிறது என்பதற்கு வேறு ஆதாரமே வேண்டாம். மாவட்ட கலெக்டர்—டைப் செய்து கூடக் கையெழுத்திடவில்லை—தன் கையினாலேயே எழுதியிருக்கிறார் He has written in his hand. "He has to be removed—not tendered the deposit or followed rules in prescribed form"— என்று எழுதிய பிறகும் அந்தத் தாண்டவராயன் என்பவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் என்ன பொருள்? எனக்கு யாருக்கு விருப்பமோ அவர்களுக்குக் கொடுப்போம் என்றால்—ஒரு மூட்டைக்கு ஒரு ரூபாய் என்றால் கூட எத்தனையோ லட்சங்கள் வந்திருக்கும். Thandavarayan is a condemned person. சட்ட அமைச்சர் தன் திறமையினால் வாதத்திற்காக எதையும் சொல்லலாம். குற்றம் நடந்திருக்கிறது. அதில் இருந்து தப்ப முடியாது. For tender, a new word has been coined called "negotiated tender". இந்த வார்த்தையையே நான் இப்போதுதான் கேட்கிறேன். நெகோஷியேடட் டெண்டர் என்ன? டைரக்ட் நெகோஷியேஷன்தான். ஜனங்களுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. ஊழல் நடந்திருக்கிறது என்பதற்கான ஆதாரங்களும் இருக்கின்றன. அரிசி 4,000 டன்னுக்கு, நெல் 7,000 டன்னுக்கு பர்மிட் கொடுக்கப்பட்டது. வாங்கியாகிவிட்டது. 79? டன் பர்மிட்—அதுவும் மூவாகிவிட்டது.

1974 டிசம்பர் 17] [திரு. கே. டி. கே. தங்கமணி]

நாலாயிரம் டன் ஒன்று கொடுக்க வேண்டும், கொடுக்காது நிறுத்திவிட்டோம் என்கிறார்கள். அதுவும் எதனால்? சென்னையில் தான் அந்த கேஸ் பிடிபட்டது. அதுவும் சென்டிரல் ஸ்டேஷனில். கேஸ் நெம்பர் கூட 1,022. அன்றைக்குப் போட்ட கேஸ் வாபஸ் வாங்கப்பட்டும் இருக்கிறது. அன்றைக்கு எத்தனை போலீஸ் ஆபீசர்கள் மாற்றப்பட்டார்கள்? ஏன் மாற்றப் பட்டார்கள்? இன்ன காரணத்தினால், உணவு அமைச்சர் சொன்னார், முதலமைச்சர் சொன்னார்—அதனால் மாற்றப்பட்டார்கள் கேஸ் வாபஸ் வாங்கப்பட்டது என்று சொல்வது கஷ்டம். ஆரம்பத்திலும் தலியீடு—இடையிலும் தலியீடு—முடிவிலும் தலியீடு. It is a weak case which has ben lost.

அந்த முறையில் பல உறுப்பினர்கள் சொன்னார்கள், முஸ்லீம் லீக் மெம்பர் கூட ஒரு ஜூடிஷியல் என்கொயரி வேண்டுமென்று சொன்னார்கள்.

With all responsibility at my command I demand that a Committee of this House headed by you, Mr. Speaker, should probe into these transactions. இதைப் பார்த்தால், இது ஏதோ தஞ்சை ஜில்லாவிற்கு மாத்திரம் அல்ல, நான் பார்த்தேன், மதுரை மாவட்டத்திலே இதே மாதிரியாக டென்டர் வந்ததாகவும், கடைசியிலே சுப்பீரியா டென்டர் என்று ஏதோ ஒன்றுக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஏன் இதைச் சொல்கிறேன்? நாங்கள் இரஷியாவிற்குச் செல்வதற்கு முன்னால், எங்களுடைய விமானம் துபாயில் இறங்கியது. அது சிறு மாநிலம் தான், அங்கு 5 இலட்சம் பேர் கூட இல்லை. அங்கு அரிசி வினியோகம் கூட இல்லை. அங்கு நேரடியாக, தமிழ்நாடு சைஸ் 2 கிலோ, 2 கிலோ கோணிப் பையிலே வைத்து விற்கப்படுகிறது. தமிழ்நாடு அரசுக்கும் அவர்களுக்கும் ஏதாவது உறவு உண்டா? நாம் ஏற்றுமதி பண்ணுகிறோமா? அந்த வகையில் ஏதாவது உறவு உண்டா? நாம் 6,000 டன், 8,000 டன், 10,000 டன் என்று வாங்கிக் கொள்ள ஏற்பாடு செய்கிறோம். அது கோளா மூலமாகவோ அல்லது கோவா மூலமாகவோ கடத்தல் பண்ணப்பட்டிருக்கிறது என்பது என்னுடைய குற்றச்சாட்டு. அப்படி வினோதத பூராவையும் நீங்கள் வெளியே தள்ளிவிட்டுப் பற்றாக்குறை என்று சொன்னால் இங்கே உற்பத்தி செய்கிற விவசாயியைக் கேலி பண்ணுகிறோம் என்றாகாதா? அல்லது இந்த பத்திரிகையிலே சொன்னமாதிரி

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 டிசம்பர் 17

'Over statement' ஆக இருக்கலாம். இந்தச் சபையிலே, இதற்கு, மூதலமைச்சர் பதில் சொல்லும்போது குறைத்தபட்சம் 'I will appoint a committee of this House.' என்று சொல்ல வேண்டும். அதுதான் இன்றைக்கு நீதி வழங்கக் கூடியதாக இருக்குமேயொழிய, இல்லாவிட்டால், நீங்கள் பேசுவதைப் பேசுங்கள், நாங்கள் சொல்வதைச் சொல்வோம் என்று சொல்லிக் கொண்டிருந்தால், மக்கள் கேட்கத் தயாராயில்லை. நாங்கள் பக்குவப்பட்டு, வேண்டுமானால் கேட்கத் தயாராகவிருக்கலாம். நீங்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டு வெளியே போனால், உதை கிடைக்கும் எங்களுக்கு.

எங்கள் பேரில் கேஸ் போட்டார்கள், திருவாடானையில். அந்தக் கேஸுக்கு வந்த தோழர்களுக்குச் சாப்பாடு கிடையாது. ஓட்டு போட்டுப் போனால், 3 பேருக்குத்தான் சாப்பாடு என்று சொல்லி விட்டான். மற்றவர்கள் அப்பம் சாப்பிட்டார்கள். எங்கள் ஆட்களுக்குச் சாப்பாடு இல்லையென்பது எங்களுக்கு வேதனையாக இல்லையா? ஆகவே, நிலைமை இப்படியிருக்கிறது. ஆகவே, உனவு அமைச்சர் கண்டிப்பாக இராஜினமா செய்யவேண்டும். அப்படியில்லாமல், அவரைப் பாதுகாக்கிற நிலைமை இருக்குமானால், கண்டிப்பாக முதலமைச்சர் இராஜினமா செய்வது அதைவிடச் சாலச் சிறந்ததாக இருக்கும் என்றுதான் நான் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்தாற் போல், இன்னும் ஒரிரண்டு அமைச்சர்களைப் பற்றி சொல்லப்போகிறேன். நான், எல்லா அமைச்சர்களைப் பற்றியும் சொல்லமுடியும். எங்களுக்குக் கிடைத்திருக்கிற விவரங்களைப் பார்த்தால் எதை விடுவது, எதை எடுத்துக் கொள்வது என்று தெரியவில்லை. விவரங்கள் அவ்வளவு அதிகமாக இருக்கின்றன. இவைகளை எல்லாம் குற்றம் சாட்டுவதற்காகச் சொல்லவில்லை. கூடியவரையிலே பரிசீலனை செய்யவேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன்.

கல்வி இலாகாவிலே எடுத்துக்கொள்வோம். சைனாவிலேதான் கல்சரல் ரெவலூஷன் என்று வந்தது. லெனின் எழுதிய கல்சரல் ரெவலூஷன், கற்க கசடற கற்பவை கற்றபின் .... எல்லோரும் படிக்கவேண்டும், அந்த அளவு உயரவேண்டுமென்பதற்காகக்

1974 டிசம்பர் 17] [திரு. கே. டி. கே. தங்கமணி]

கல்சுரல் ரெவலூஷன் உண்டாக்கினார்கள். பிறகு வேறு இடங்களிலே, பள்ளிக் கூடங்களிலே பரப்பப்பட்டது.

It was an organised cultural revolution in China.

இங்கு, நம்முடைய கல்வியமைச்சர் தலைமையிலே கல்சுரல் ரெவலூஷன் நடக்கிறது. ஸ்டிரைக்குகளுக்கு, கல்விசாலைகள் மூடப்பட்டதற்கு மாணவர்களை மட்டும் நான் குற்றம் சாட்டவில்லை. அந்தக் கல்லூரி மாணவர்கள், கல்லூரிகளைத் திறக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கும்போதே, அவர்கள் ஆளும் காங்கிரசாக இருந்தாலும், ஸ்தாபனக் காங்கிரசாக இருந்தாலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும், அல்லது தி.மு.க. வாக இருந்தாலும்—வெளியே செல்லாமல் இருக்கலாம்—எல்லோரும் ஒரே குரலில் கல்வி அமைச்சர் போக வேண்டும், கல்வியமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டுமென்ற கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நான் காழ்ப்புணர்ச்சியோடு இதைச் சொல்லவில்லை. மதுரையிலே ஒரு லா காலேஜ் வைத்தீர்கள். அந்த மாணவர்கள் என்ன கோரிக்கை வைத்தார்கள்? கல்லூரி திறந்தீர்கள், வசதிகளைக் காணோம், கட்டிடம் காணோம்? படிப்பதோ சட்டம், சட்டம் படிக்கப் புத்தகம் இல்லாமல் எப்படி? லைப்ரரி இல்லையே. கோரிக்கைகளை வைத்துக் குரல் கொடுக்கின்ற நேரத்திலே, கல்வி இலாகாவிலே வேறு யாரையாவது போடுங்கள் என்ற முறையிலே இன்றைக்கு அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுது இருக்கிற, தனியார் கல்விசாலைகள் புராவுக்கும் தனி மசோதா கொண்டு வாவேண்டுமென்று எத்தனை தடவைகள் முயற்சித்தோம். முயற்சித்து, முயற்சித்து, 3 ஆண்டுகளுக்குப் பிறகு, தனியார் கல்விசாலைகளுக்குப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அன்றைக்கே பலர் சொன்னார்கள், கல்வி அமைச்சர் சொன்னார், தனியார் கல்லூரிகளுக்குப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரப்போகிறேன் என்று. தனியார் கல்லூரிகளுக்குப் பாதுகாப்புச் சட்டம் கேரளாவில் இருக்கிறது, ஆந்திராவில் இருக்கிறது, கர்நாடகத்தில் இருக்கிறது. ஆனால், ரொம்ப முன்னேற்றம் அடைந்த, ரொம்ப முன்னேறிக் கொண்டிருக்கிற தமிழகத்தில், 3 ஆண்டு காலமாக, என் இன்றைக்கு

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 டிசம்பர் 17

வரை இந்தப் பாதுகாப்புச் சட்டம் கிடையாது. பாதுகாப்புச் சட்டம் கொண்டு வருவதிலே என்ன கஷ்டம் இருக்கிறது? கொண்டு வர வேண்டுமென்ற அக்கறை இருந்தால் அதைக் கொண்டு வர முடியும்.

இன்றைக்கு யூ. ஜி. சி. ஊதியத்தைக் கொடுக்கவேண்டும் கல்லூரி ஆசிரியர்களுக்கு. இன்றைக்கு நாம் ஒவ்வொரு கல்லூரிக்கும் திட்டத்தட்ட subject to correction 80 சதவிகிதம் கிராண்ட் கொடுக்கிறோம். 400 ரூபாய் சம்பளத்தில் உள்ளவர்களை ரூ 750-க்குக் கொண்டுவந்தால். அப்பொழுது மத்திய சர்க்கார், யூ.ஜி.சி. ஸ்கேலை நீங்கள் கொடுத்தால் 5 ஆண்டுக் காலத்துக்கு 80 சதவிகிதம் நாங்கள் கொடுப்போம் என்று சொல்லுகிறார்கள். அப்படி சொன்ன பிறகும் கூட இன்றைக்கும் நாங்கள் அசைய மாட்டோம், யூ.ஜி.சி. ஸ்கேலை நாம் அமுல்படுத்த மாட்டோம் என்ற நிலைமை ஏற்பட்டால், நாம் யாரைக் குற்றம் சாட்டுவது?

அதே மாதிரி தமிழாசிரியர்கள் கதை. தமிழாசிரியர்கள் இரண்டாம் பிரிவு, ஒன்றும் பிரிவு என்று வேண்டாம் இரண்டாம் பிரிவையும் முதல் பிரிவாக ஆக்க வேண்டுமென்ற முறையில் இன்றைக்கு இரண்டாம் பிரிவுக்குப் பயிற்சியே கிடையாது. ஏன் இதை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? இவற்றையெல்லாம் நான் உதாரணத்திற்காகச் சொல்கிறேன்.

இன்றைக்குக் கல்வி இலாகாவிலே எங்கு எடுத்தாலும் சொம்பத் தாமதம்.

Slow moving machinery—if there is a record for slow moving machinery, it is the Education Department.

அதற்காக, அந்த டிபார்ட்மெண்டிலே இருக்கிற தலைப்பட்டவர்களை நான் குறை சொல்லவில்லை, அல்லது தனிப்பட்ட அமைச்சர் குறை செய்தார் என்றுகூட நான் சொல்லவில்லை. அவர் அதற்குப் பொறுப்பு ஏற்க வேண்டாமா? கல்விக்காக ரூ. 110 கோடி செலவழிக்கக்கூடிய நாம், கல்விசாலைகள் மூடப்பட்டிருப்பதற்காக என்ன செய்தோம்? அதனால், தாய்மார்கள் தங்கள் பிள்ளைகள் சரியாகப் படிக்கவில்லையேயென்று ஏங்குகிற நிலைமை இருக்கிறது.

அதே நேரத்திலே, பெரியார் அவர்கள் பண்பாட்டிலேதான் வருகிறோம் என்று சொல்கிறோம். எனக்குக் கூட பெரியார் போன்றவர்கள் மீது கூடுபோடு உண்டு. இன்றைக்கு சோவியத்

1974 டிசம்பர் 17] [திரு. கே. டி. கே. தங்கமணி]

நாட்டுக்குப் போனால் பெரியாருக்கு இருக்கிற மரியாதை, இங்கு இடையாது என்று சொல்வேன். He is considered to be an Indian **Philosopher.** ஒரு குறிப்பிட்ட விஷயத்திலே, ஜாதிப் பெயரை ஒழிக்கவேண்டுமென்பதிலே பிடியாக இருந்தால். இங்கு கல்லூரி களும், கல்விசாலைகளும் எல்லாமே ஜாதிப் பெயராலே. ஜாதிப் பெயராலே இருக்கட்டும். சாதாரண உயர்நிலைப் பள்ளியிலே கூட ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள்தான் போர்ட் ஆஃப் டைரக் டர்ஸிலே இருக்கிறார்கள். நாம் கிரான்ட் கொடுக்கிறோம். அவர்கள்—தனியார் பள்ளிகள் நடத்துகிறார்கள். ஜாதிக்காரர்களே, போர்ட் ஆஃப் டைரக்டர்ஸிலே இருக்கட்டும். ஆனால், முழுப் பணமும் கொடுக்கிற நம்முடைய அரசு ஏன் இருக்கவேண்டும்.

He must be an ex-officio member representing this Government on this Board. அந்த அளவுக்காவது செய்வார்களா? எனக்கு இன்றைக்கும் சந்தேகமாகத்தான் இருக்கிறது?

அடுத்தாற்போல் கூட்டுறவை எடுத்துக்கொள்வோம். கூட்டுறவை எத்துப் பார்த்தால், எங்குமே எலக்டட் பாடீஸ் இருப்பதாகத் தெரியவில்லை. எல்லாமே நாமினேடட் பாடீஸ். நாம் என்ன சொல்வோம், படிப்படியாக சோஷலிசத்தை அமுலாக்க வேண்டும், எல்லா உற்பத்தி ஸ்தானங்களும் மக்களிடம் இருக்கவேண்டும் என்று சொல்கிறோம். எல்லா உற்பத்தி ஸ்தானங்களும் மக்களிடம் இருக்க வேண்டுமென்றால், விநியோகம் அனைத்தும் மக்களிடம் இருக்க வேண்டுமென்றால், முதல் கட்டமாக, ஏன் இறுதிக் கட்டமாகக் கூட இருக்கலாம், இன்றைக்கு இருக்கக்கூடிய அனைத்துமே கோவாப்பரேடிவிடம் இருக்கவேண்டும். இன்றைக்கு கோவாப்பரேடில் பூராவுமே கரப்ஷனுகளே வரக்கூடிய அளவுக்குச் செயல்பட்டு வருகிறது. பத்து, பதினைந்து உதாரணங்கள் என்னிடத்திலே இருக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அங்கே எலக்டட் பாடீஸ் இருக்கவேண்டும். அதை முதலில் செய்யுங்கள். பூராவுமே அவர்கள் ஆட்களாகப் போட்டு வைத்திருப்பது தப்பு.

கூட்டுறவுத் துறை பாங்குகளிலே, சென்ட்ரல் பாங்குகளிலே இருக்கக்கூடிய ஊழியர்களுக்கு எல்லாம் சம்பளம் கம்மி. மற்ற பாங்கி ஊழியர்களுக்கு எல்லாம்—சிப்பந்திகளுக்கு எல்லாம் சம்பளம் ஜாஸ்தி. சம்பளம் வேண்டுமென்று அவர்கள் சங்கம்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 டிசம்பர் 17

அமைத்தால் அதற்கு என்ன செய்கிறார்கள்? இன்றைக்கு கோவாப்பரேடிவ் செக்டாரிலே, கோவாப்பரேடிவ் சென்ட்ரல் பாங்க் எம்பிளாயீஸ் சங்கம் வைத்து நடத்துகிறார்கள் என்பதற்காகப் பழி வாங்கப்படுகிறார்கள். இவ்வளவு காலம் தொழிற்சங்கங்கள் நடக்கலாம் என்று சட்டம் இருக்கிறது. பெரும் பெரும் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள், வேறு பலர் அவற்றில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டச் சந்தர்ப்பத்திலே சங்கம் வைத்திருக்கிறார்கள் என்பதற்காகப் பழி வாங்குகிறார்கள். உதாரணம் வேண்டுமா? காஞ்சிபுரத்திலே பழி வாங்கியிருக்கிறார்கள். அதே மாதிரி சேலம். சேலம் கதையே தனிக் கதை. சேலத்திலே கர்டர் எங்கோ பறக்கிறது, இப்பொழுது கர்டர் மாறுகிறது. தனிப்பட்ட ஒருவர்மீது காழ்ப்புணர்ச்சி யோடு சொல்லவில்லை. அந்த இயக்கத்தையே குலோஸ் பண்ணு

(முற்பகல் 11-00)

கிறார்களே, அந்த இலாகாவையே கேடுபடுத்துகிறார்களே என்று வேதனையோடுதான் சொல்கிறேன். கூட்டுறவு அமைப்புகள் மூலமாக விநியோகம் செய்யவேண்டும். இன்றைக்கு நீங்கள் கொள் முதலைக் கூட்டுறவு மூலமாகச் செய்யப்போகிறோம் என்று சொல்வது மனநிறைவாக இருக்கிறது. ஆனால் இங்கே உள்ள கூட்டுறவிடம் கொடுத்தால் என்ன ஆகுமோ, கனியார் பாவாயில்லையே என்ற அளவிற்கு நினைக்கத் தோன்றுகிறது. கூட்டுறவையே கறைப்படுத்திவிட்டீர்கள், கெடுத்துவிட்டீர்கள் என்று குற்றஞ்சாட்டுகிறேன்.

இன்னொன்று நான் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நம்முடைய சர்க்கார் சிப்பந்திகள் இப்போது திருப்தியாக இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது, மற்றவர்களுக்குக் கொடுக்காததை எல்லாம் கொடுத்து இருக் கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் இன்றைக்கு காஸ்ட் ஆப் லிவ்விங் சிலாப் சொல்கிறார்கள் என்றால் இன்றைக்கு காஸ்ட் ஆப் லிவ்விங் சிலாப்படி எங்களுக்குக் கொடுக்கவேண்டியதைக் கொடுக்கவில்லை, அப்படிக் கொடுக்கவேண்டுமென்பதை எற்கனவே தமிழக அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது; வசதியில்லாமல் இருக்கக்கூடிய கேரள முதலமைச்சர் கொடுத்துவிட்டார், இந்த மாதிரி கொடுத்தால் என்னால் தாங்கமுடியாதே என்று அவர் சொல்லிக்கொண்டே கொடுத்து விட்டார்.

1974 டிசம்பர் 17] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ஆளுங்கட்சிக்கு ஆதரவாக இருக்கிற நிர்வாகஸ்தர்களே இன்றைக்கு எங்களிடத்திலே வந்து முறையிடுகிறார்கள். இனிமேல் விவகாரம் எதுவும் பண்ணுமல் வேறுவசதிகள் கொடுக்கவில்லை யென்றும் ஒத்துக்கொண்டதையாவது கொடுக்கவேண்டும், விலை வாசி பயங்கரமாக ஏறிக்கொண்டே போகிறது. அரிசிவிலையை அடுக்குமொழியில் சொன்னால் படியரிசி பத்து ரூபாய் என்ற அளவுக்கு வந்துவிடும்போல் இருக்கிறது. படியரிசி பத்து ரூபாய் என்ற அளவிற்கு வந்தால் தமிழ்நாடே பாலைவனமாகப் போய் விடும் என்ற பயங்கரமான நிலைமை இருக்கிறது.

உணவுக் கொள்கையைப் பொறுத்தவரையில் மாறுதல் எதுவும் இல்லை, ஏதாவது கொஞ்சம் அவர்கள் கையிலே விட்டு நீங்கள் கொஞ்சம் செய்யுங்கள் என்று சொன்னால் உடனே கோளாறு வந்து விடுகிறது; நமக்கு மத்திய சர்க்கார் கொடுக்கிற கோதுமை 9,000 டன்தான்—அதுபோதாது என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் பஞ்சாபிலே எங்கள் கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள், அந்தச் சர்க்கார் கோதுமையைக் கொள்முதல் செய்கிறது; அவர்களுக்குத் தரமாட்டேன் என்று சொல்கிறவர்கள் இங்கே கொடுக்கமுன் வருகிறார்கள், இப்படிப் பணம் பாழாகிப்போகிறது. ஆகவே எந்த விஷயத்தை அரசிடத்திலே கொடுத்தாலும் கொள்முதலே அரசு செய்தாலும் பல ஊனங்கள் தவறுக்கு மேல் தவறுகள் இருக்கத் தான் செய்கின்றன என்ற நிலைமை இருக்கிறது.

எதிர்க்கட்சி இருக்கிறது, கூர்மையாக எதிர்க்கக்கூடிய கட்சி யாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது, அடுத்த படியாக எங்கள் கம்யூனிஸ்ட் கட்சி இருக்கிறது, அடுத்தபடியாக ஆளுங்கட்சியினர் எதிர்க்கிறார்கள் என்று சொன்னால் எதிர்ப்பவர்களே, அரசியலே, அரசியலிலேதான் சந்திக்கவேண்டும், அப்படி இங்கே சந்திப்பதில்லை. இங்கே சாதாரணமாகச் சில அமைச்சர்கள் வெளியே கோர்ட்டுக்கு வாருங்கள் என்று சொல்கிறார்கள். என்ன கோர்ட், எங்களுக்குத் தெரியாதா? எத்தனை ஆட்சிகளை நாங்கள் பார்த்திருக்கிறோம். எனக்கு எதிரான பேச்சு, என்னை கொலை செய்யக்கூடிய பேச்சு உடனே பிடிக்கிறேன் பார் என்று சொல்கிறார்கள். இவ்வளவு தூரம் 'ஸோ டச்சி'-யாக இருக்கிறார்கள்.

அரசாங்கத்திலிருக்கிறவர்களிடம் பணம் இருக்கும்—கேஸ் போடுவது சுலபம். கோர்ட்டுக்கு முன்னாலே கொண்டுவந்து நிறுத்துகிறேன் பார் என்று சொல்கிறார்கள். கேஸ் போடுவது

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 டிசம்பர் 17

சுலபம், மவுண்ட் கட்டிவிட்டால் நாங்கள் வேண்டுமானலும் கேஸ் போடலாம்; நாங்கள் ஏதாவது பண்ணிவிட்டால் கோர்ட் வேலியை எங்களால் கவனிக்க முடியாது. நாங்கள் அரசியல்வாதிகள், 100 வேலைகள் இருக்கின்றன; எப்போது சம்மன் வருகிறது என்று கூடத் தெரியாது. கிடைக்காத மந்திரி கோர்ட்டுக்கு வந்துவிட்டார் என்றால், நமக்குத் தெரியாமல் போய் விட்டதே, ஐந்து நாள் போட்டு வாட்டியிருக்கலாமே தப்பித்து விட்டாரே என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

அதேபோன்று தேர்தலில் நடந்த சம்பவங்கள்பற்றி கேஸ்கள் இன்னும் நடந்துகொண்டிருக்கின்றன. திண்டுக்கல் தேர்தல் நடந்து எத்தனையோ மாதங்கள் ஆகிவிட்டன. இப்போது கம்பம் பகுதியில் உள்ளவர்கள்மீது திண்டுக்கல்லில் கேஸ் நடக்கிறது. அவர்கள் என்ன செய்தார்கள்? கம்பத்திலிருந்து லாரியில் திண்டுக்கல்லுக்கு படம் பார்க்க, உலகம் சுற்றும் வாலிபன் படம் பார்க்க வந்திருக்கிறார்கள். திண்டுக்கல் எங்கே இருக்கிறது, கம்பம் எங்கே இருக்கிறது, அங்கே இருந்து ஏ.டி.எம்.கே. கட்சியைச் சேர்ந்தவர்கள்—எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக் கிறார்கள். அவர்களுக்கு ஏ.டி.எம்.கே.-யிலிருந்து பணம் ஒரு காசு கூட கொடுப்பதில்லை. ஒரு தடவை இரண்டு தடவையல்ல 40, 45 தடவைகள் என்று இந்த கேஸுக்காக அவர்கள் வந்தும் அந்த மாஜிஸ்திரேட் என்ன சொல்கிறார்? இன்றைக்கும் உங்கள் வழக்கு எடுக்கப்பட முடியாது, வேண்டுமானல் மாற்றிக்கொள்ளுங்கள் என்கிறார். இப்படி ஒரு அதிகாரியை வைத்துச் சாதாரணமாக இருக்கக்கூடிய ஊழியர்களைச் சித்திரவதைச் செய்யக்கூடிய போக்கு இருக்கிறது, எலக்ஷன் கேஸஸ், இப்படி பேசினார், அப்படிப் பேசினார் என்று கேஸ் போடுவது என்றால் என்ன ஆகும்?

பிரதாப்சந்திரன் வழக்குபற்றி யார் யார் பேசினார்கள் என்று பார்த்தால் ஒவ்வொருவரையும் எத்தனை ஆண்டுகள் ஜெயிலுக்கு அனுப்பவேண்டும். ஆகவே பேச்சுகளை வைத்துக்கொண்டு சிவில் கேஸ், கிரிமினல் கேஸ் போடுவதுகூடாது. அரசியலை அரசியலிலே தான் சந்திக்க வேண்டுமென்ற பக்குவம் இல்லாத நிலைமையிலே இருக்கிறார்கள். அது வரவேண்டும். எங்கே பார்த்தாலும் இப்போது கடத்தல், கடத்தல் என்று பேச்சு வந்திருக்கிறது. ஜனங்களைப் பொறுத்தவரையிலும் எவ்வளவு பட்டினியாக இருந்

1974 டிசம்பர் 17] [திரு. கே. டி. கே. தங்கமணி]

தாலும் கடத்தல் செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதுபற்றி சந்தோஷப்படுகிறார்கள். உடனே வெளியே விடக்கூடாது என்று சொல்கிறார்கள். வெளியே விடக்கூடாது என்று ஜனதிபதி உத்திர விட்டாலும்கூட ஆளுங்கட்சியைச் சேர்ந்த எம்.பி.க்கள் வேண்டாம் என்கிறார்கள். இது எனக்குப் புரியவில்லை. ஏழைகளுடைய உரிமையை பாதுகாக்க வேண்டுமென்ற முறையிலே வெளியே போகலாம் என்று வியாக்கியானம் கூறலாம்.

எனக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. கடத்தல்காரரின் பணம் என்ன செய்யமுடியும் என்பதற்காக சொல்கிறேன். ஒரு டாக்டர் இருந்தார். அவரிடம் இருந்தவருக்கு 10 லட்சம் ரூபாய் பிரைஸ் விழுந்தது, அதை அவரிடம் சொன்னால் இறந்துவிடுவார் என்று நினைத்து டாக்டர் 100 ரூபாய் உனக்கு கிடைத்தால் என்ன செய்வாய் என்று கேட்க அவர் உங்களுக்குப் பாதி தருவேன் என்று சொன்னாராம். பிறகு ஆயிரம் ரூபாய் கிடைத்தால் என்ன செய்வாய் என்று கேட்க அவர் பாதி தருகிறேன் உனக்கு என்றாராம். பிறகு லட்சம் ரூபாய் கிடைத்தால் என்ன செய்வாய் என்றபோது பாதி தருகிறேன் என்று சொல்லி கடைசியில் பத்து லட்சம் ரூபாய் கிடைத்தால் என்ன செய்வாய் என்று கேட்ட போது அப்போதும் பாதி தருகிறேன் என்று சொன்னவுடன் டாக்டர் க்ளோஸ் ஆகிவிட்டாராம். இது எம். ஆர். ராதா, ரத்தக்கண்ணீர் நாடகத்தில் சொல்லியது.

கடத்தல்காரர்களை வெளியேவிடவேண்டுமா? கடத்தல்காரர்கள் எல்லாம் அதேகமாகத் தமிழ்நாட்டிலேதான் இருக்கிறார்கள். மஸ்தான் என்பவர் இந்த ஊர்க்காரர் என்று சொல்கிறார்கள். நாம் பெருமைப்படுவதா? என்ன செய்வது? யாரின் எங்கே என்று எல்லா இடங்களிலும் கேள்வியாக இருக்கிறது? கடத்தல்காரரைப் பிடிக்கிறபோது அவர் தமிழ்நாட்டிலே இருந்திருக்கிறார். அவர் மட்டும் எங்கே மறைந்தார்? நடவடிக்கை எடுத்து யாரினைப் பிடிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டாமா? தமிழ்நாட்டிலே இருந்தவர் தமிழ்நாட்டின் பெயரைக் கெடுத்துவிட்டவர்—அவரைப் [illegible]த்தார்கள் என்ற பெருமை [illegible] திருக்கும் நமக்கு.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 டிசம்பர் 17

இருக்கின்ற விவரங்களில் நான் பக்கம்மட்டும் சொல்கிறேன், வாசிக்க விரும்பவில்லை. அவர் எந்த அளவுக்கு இந்த அரசாங்கத்தோடு ஊடுருவியிருக்கிறார் என்பதற்காகச் சொல்கிறேன். பக்கம் 13, பாரா 3, பக்கம் 44, சார்ஜ் 14, பக்கம் 46, பக்கம் 100 இவைகளில் பார்க்கலாம்.

It is difficult to believe that the Chief Minister did not appreciate the essence of the charge

என்ற முறையிலே நாங்கள் இதைக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் எந்தக் குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தவர்கள், ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்பதல்ல. வாண்டையாரும் இங்கே இருக்கிறார். வாண்டையாரும் உண்டு, ஒரு யாசினும் உண்டு. ஆகவே, இதில் ஜாதியோ, மதமோ இருப்பதாகத் தெரியவில்லை. ஜாதிக்கும், மதத்திற்கும் அப்பாற்பட்ட ஒரு திருக்கூட்டமாக இருக்கிறது. தல்ல ஊர் கீழக்கரை. கீழக்கரை என்றால் இப்பொழுது எல்லாரும் கடத்தல்காரர்கள் என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அங்குள்ள பெருவாரியான மக்கள் உழைத்து, கஷ்டப்படுபவர்கள். அவர்கள் சங்கு குளி தொழிலாளர்கள். அந்தச் சங்கு குளி தொழிலாளர்கள் இருக்கின்ற ஊரின் பெயரையே கெடுத்து விட்டார்கள். ஈஸ்ட் கோஸ்ட் என்று ஆகி, ஈஸ்ட் கோஸ்ட் கம்பெனி என்று ஆகி, ஈஸ்ட் கோஸ்ட் கம்பெனி செய்த வேலைகள் எல்லாமே பயங்காமான வேலைகளாக இருக்கின்றன என்பதைத்தான் எடுத்துக் காட்டியிருக்கிறோம். ஈஸ்ட் கோஸ்ட்டிற்குக் கெட்ட பெயர் உண்டாக்கக் கூடிய அந்த யாசின் உடனடியாகக் கண்டு பிடிக்கப்பட வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரிசனங்கள் சம்பந்தமாக ஏற்கனவே சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது அதிகமாக வருவது அரிசனங்கள் எப்படிக் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்பது. அதிலும் இன்றைக்கு முதலமைச்சரவர்களுடைய இலாக்காதான் போலீஸ் இலாக்கா. போலீஸ் இலாக்கா கொஞ்சம் கண்காணிக்கப்பட வேண்டும். நான் தனிப்பட்ட போலீசைப்பற்றிச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் சில போலீஸ் ஸ்டேஷன்களில், ஹிட்லர்கூடத் தோற்றுப் போய் விடுவார் போல இருக்கிறது. மதுக்கரை போலீஸ் ஸ்டேஷன் சப்-இன்ஸ்பெக்டரைப்பற்றி வந்திருக்கிறது; திருமங்கலத்திலே நடந்த சம்பவத்தைப் பற்றி வந்திருக்கிறது; முதுகளத்து

1974 டிசம்பர் 17] [திரு. கே. டி. கே. தங்கமணி]

நடந்த சம்பவத்தைப்பற்றி வந்திருக்கிறது ; இன்னும் திருத்துறைப் பூண்டியிலே ஒரு சம்பவத்தைப்பற்றி வந்திருக்கிறது. இப்படிப் புதிதாக வேலைக்கு வந்திருப்பவர்கள், அவர்கள் படித்த வாலிபர் கள்தான், நல்லமுறையிலே செயல்படுவதற்குப் பதிலாக ரொம்பக் கோளாறான முறையிலே ரொம்ப ரொம்பத் தவறான முறையிலே நடக்கிறார்கள். இப்பொழுது கூடலூருக்குப் போயிருந்தேன். அங்கே ரொம்ப வேதனையோடு சொன்னார்கள். தன்னுடைய பதவியைப் பயன்படுத்திக்கொண்டு, தன்னிடத்திலே கம்ப்ளெயிண்ட் செய்ய வந்த பெண்ணையே கூட்டிப் போய்விடுகிறார் என்றால் யார் பாதுகாப்பாக இருக்க முடியும் ? பிறகு எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்தப் பெண்ணைக் கொண்டு வந்துள்ளார்கள். அந்தப் பெண்ணைத்தான் பேசினேன். யாருக்கும் பெண் மீது ஆசையிருந்தால் கூப்பிட்டுப் போகட்டும், ஆனால் புருஷன் பெண்சாதி பஞ்சாயத்துப் பேசுவதற்கு வந்தால் புருஷனை அடித்து விரட்டிவிட்டு மனைவியைக் கடத்திச் செல்கின்ற அளவில் போலீஸ் இலாக்கா வரும் என்றால் ஒன்று அந்த இலாக்காவைச் சுத்தப்படுத்த வேண்டும், இல்லையென்றால் அந்த இலாக்காவை இம்மாதிரியாக வைத்திருக்கிற சில நபர்கள் இருக்கிறார்களே அவர்களை மாற்றியாக வேண்டும். மற்ற படி போலீஸ் இலாக்கா நல்ல முறையில்தான் நடக்கிறது. சில போலீஸ்காரர்களின் செயல்கள்தான் அப்படியிருக்கின்றன.

அதேபோல் இன்றைக்கு அரிசனங்களை எடுத்துக்கொண்டால், உணவு உற்பத்தி பெருக வேண்டும், உணவு உற்பத்திப் பெருக வேண்டும் என்று சொல்கிறோம். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தடையாக இருக்கக்கூடிய ஒரு சிறு சம்பவத்தை மட்டும் இங்கே சொல்ல விரும்புகிறேன். முந்தாநாள் வேலூருக்குப் போயிருந்தேன் ; அப்பொழுது ஒன்றைச் சொன்னார்கள். அதைச் சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்களும் குறிப்பிட்டார்கள். தேவிகாபுரம் என்ற ஒரு இடம் மாதனூருக்குப் பக்கத்தில் இருக்கிறது. வேலூரிலிருந்து 20 மைல், வாணியம்பாடி தாலுக்கா. அங்கே 63 குடும்பங்கள் 74 ஏக்கரா தரிசு நிலத்தைச் சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். அவ்வளவு பேரும் அரிசனங்கள். போனவருஷம் சாகுபடி செய்தார்கள் ; இப்பொழுதும் சாகுபடி செய்தார்கள். இப்பொழுது சோளம் விளைந்திருக்கிறது. அதை அறுக்க வேண்டிய [illegible] அறுக்கின்ற கட்டத்தில்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 டிசம்பர் 17

தாசில்தார் போலீஸ் பலமாகச் சென்று, நீங்கள் அறுக்க வேண்டாம், நாங்கள் அறுக்கிறோம் என்று சொல்லி அவைப் பூராவையும் நாசப்படுத்தி, இவர்களையும் ஜெயிலில் வைத்தார்கள். பிறகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்ட் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய எல்லாக் கட்சிக்காரர்களும் இவர்களை ஜெயிலில் வைத்தது தவறு என்ற பிறகு அவர்கள் வெளியே வந்தார்கள். இன்றைக்கும் நீங்கள் போய்ப் பார்க்கலாம், அந்த இடத்தில் குடிசை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதுவா அரிசனங்களுக்குச் செய்யக் கூடிய சேவை, அரிசன விவசாயிகளுக்குச் செய்யும் சேவை? என்று கேட்க விரும்புகிறேன்.

இன்றைக்குச் சோளம் வந்தால் போதும், கேப்பை வந்தால் போதும் என்று திசைசரி ஆயிரம் லாரிகளில் வந்து கொண்டிருக்கிறது, ஆந்திராவிலிருந்து. அதைச் சொல்வதில் தயக்கம் இல்லை, கொண்டு வருவதற்கு மத்திய சர்க்காரின் உத்தரவு உண்டு. பில் போட்டுத்தான் தெனிக்கு வருகிறது. இங்கிருந்து எற்றுமதி ஆகவில்லை. இப்பொழுது இருக்கும் உணவமைச்சாவர்களுடன் சொல்கிறார்கள், இங்கேயிருந்துதான் போகிறது என்று. அங்கேயிருந்து வருகிறதே தவிர இங்கேயிருந்து எங்கே போகிறது? மணிலா இங்கேயிருந்து போகிறதா? போகிறது என்றால் எவ்வளவு போயிற்று? அதற்கான விவரங்களைக் கொடுக்க வேண்டும். நான் கேட்கிறேன், இந்தக் குறுவை அறுவடையிலே தஞ்சாவூர் மாவட்டத்திலே எத்தனை எக்கர் குறுவை போட்டது? நல்லமுறையிலே இந்த வருஷத்திலே பாவாயில்லை என்று சொல்கிறார்கள். அறுவடைக் காலத்திலே மழையில்லை. ஆகவே, இருப்பதை ஓளவிற்கு அறுத்தாகிவிட்டது. எவ்வளவு அறுத்தாகியிருக்கிறது என்பதற்கு இன்றைக்காவது எல்லோருமாகக் கலந்து ஒரு சரியான ஸ்டிகர் எனக்கு வேண்டும். குறுவை அறுவடையிலே எத்தனை கலம் நெல் அல்லது எத்தனை டன் நெல் தஞ்சாவூர் மாவட்டத்திலே அறுவடையானது? தமிழ்நாடு பூராவும் அறுவடையானது எவ்வளவு? இவ்வளவையும் வைத்துக்கொண்டு நாம் இன்றைக்கு எவ்வளவு கொள்முதல் செய்திருக்கிறோம்? எவ்வளவு கொள்முதல் பண்ணை முடியும் என்பதைச் சொல்ல வேண்டும். நான் யாருக்கும் வக்காலத்து வாங்கவில்லை. உற்பத்தியில் சொம்பக் [illegible]க்கொண்டிருக்கும் நாடு [illegible]ற்று போன்ற

1974 டிசம்பர் 17] [திரு. கே. டி. கே. தங்கமணி]

நாடுகளில் எந்தவிதமான விவசாயமும் கிடையாது, கிட்டத்தட்ட அதே நிலைமைதான் இன்றைக்கு சோவியத் யூனியனிலேயும் இருந்து கொண்டிருக்கிறது. அவர்கள் பற்றுக்குறையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று திட்டமிட்டு தானியம் பூராவையும் கொள்முதல் செய்து அதைப் பூராவும் மக்களுக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். ஆகவே, நான் சொல்கிறேன், இந்த அரசு அதையாவது செய்ய வேண்டும். கிடைக்கின்ற தானியங்களைக் கொள்முதல் செய்யட்டும், அது ஜனங்களுக்குக் கிடைக்க வழி செய்யட்டும். ரேஷன் ரேஷன் என்று சொல்லப்பட்டு வந்தது. ஆனால், ரேஷன் வாவில்லே. ரேஷன் வர வேண்டுமென்றால் கொள்முதல் செய்து வைத்திருக்க வேண்டாமா? வி. எஸ். கியாகாஜ முதலியாரின் கையிலே—அல்லது கூட்டுறவு சொசைட்டிகள் இருக்கிறதே, ஊழல் என்ற வார்த்தை லேசான வார்த்தை, கூட்டுறவை குளோஸ் பண்ணிய கூட்டம் இருக்கிறதே அவர்கள் கையிலே மட்டும் கொள்முதல் செய்ய வேண்டுமென்று இருந்தால் விரிவான கண்காணிப்பு இருந்தாலொழிய கோளாறுதான் ஏற்படும். கொள்முதல் செய்திருக்க வேண்டும், அப்படிச் செய்யத் தவறியிருக்கிறது. மக்களைப் பட்டினியாகப் போட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, பல இலாக்காக்களிலும் தவறுக்கு மேல் தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்காக வேதனைப் படுகிறவர்கள் மக்கள். அன்றைக்குப் பாராட்டிய மக்கள் இன்றைக்குப் பாராட்டவில்லை என்றால் மக்கள் மாறிவிட்டார்களா? மக்கள் ஒன்றும் மாறவில்லை. இன்றைக்கு ஆளுங்கட்சியின் நடைமுறை மாறிவிட்டது, ஆளக்கூடிய கட்சியின் கொள்கை மாறிவிட்டது, அதன் நடைமுறை வேதனை தரக்கூடியதாக இருக்கிறது என்றுதானே அர்த்தம். ஆகவே, அப்படி வரும் பொழுது சித்தரஞ்சன்தாஸ் மத்திய பார்லிமெண்டிலே பேசும்பொழுது சொன்னார்கள்,

'you must mend it or end it. The stage has gone when the mending process can continue; so the other process remaining is ending process' இதை, ஒன்று திருத்த வேண்டும் அல்லது அதை ஒதுக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

'The stage has gone when the mending process can continue; now the ending process has to start.' என்று பிரிட்டனில்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 டிசம்பர் 17

ஏகாதிபத்தியத்தைப் பார்த்து அன்றைக்கு அவர்கள் சொன்னார்கள். இனிமேல் திருந்துவார்கள் என்ற நம்பிக்கை இல்லை. எப்படியாவது திருந்தினர்கள் என்றால்தான் சில நிலைமைகள் வரும். சாதாரணமாகத் தவறுகளை நாங்கள் சுட்டிக் காட்டுகிறோம் என்றால், நான் கொஞ்சம் பக்குவமாகச் சொல்லலாம் அல்லது சீனிவாசன் அவர்கள் கொஞ்சம் கடுமையாகப் பேசலாம். இதெல்லாம் குற்றம் தானே. சிந்தித்துப் பார்த்து செய்கையை மாற்று என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் ஒரு சினிமாவிலே சொல்லியிருக்கிறார்கள். குற்றம் என்று தெரிந்தாலும் அதை நியாயப்படுத்திப் பேசக் கூடாது. இந்த அரசாங்கத்திற்கு யார் எதைச் சொன்னாலும் அதற்கு நியாயம் கற்பிக்கின்ற ஒரு வழக்கம் இருக்கிறது. 7 ரூபாய் விற்கிறது என்றால் அங்கே 8 ரூபாய் விற்கிறது என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது.

'The stage has gone when the mending process can continue; now the ending process has to start? என்ற ஒரு நிலைக்குத்தான் எதிர்க்கட்சியிலே உள்ள நாங்கள் வந்திருக்கிறோம். குறிப்பாக எங்கள் கட்சியினுடைய நிலை இன்றைக்கு அதுதான். வேறு எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியும் கிடையாது.

ஆகவே, இரண்டாவது யுத்த காலத்திலே லார்ட் சேம்பர்லின் முதல்பிரதம மந்திரியாக இருந்தார். தொல்லைக்குமேல் தொல்லை வாட்டும்பொழுது பார்லிமெண்டில் விவாதம் நடக்கிறது. நான் அப்பொழுது மாணவனாக இருக்கிறேன். விவாதம் சூடாக இருக்கும் என்று சொன்னார்கள், அதைப் பார்ப்பதற்காக நான் காலரியில் உட்கார்ந்திருந்தேன். சுருக்கமாகப் பேசும்பொழுது ஒருவர் சொன்னார்.

'The Hon. Prime Minister has demanded that the country must be prepared to make the utmost sacrifice. Yes, country is making the utmost sacrifice. The country will continue to make the sacrifice. I demand the Prime Minister to make the same sacrifice which he has called upon us. So he can make the utmost sacrifice that is possible in his hands is to lay down Office as Prime Minister of the country.'

1974 டிசம்பர் 17] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அதேமாதிரியாக இன்றைக்கு அதே சேக்ரிஃபைசை நீங்கள் பண்ணத் தயாரா தயாரா என்று சொல்லி என்னுடைய பேச்சை முடிக்கிறேன். (குறுக்கிடு) இதற்குமேல் எப்படிப் பக்குவமாகச் சொல்ல வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்? நான் என்ன சொல்லியிருக்க வேண்டுமென்றால், My appeal is the Hon. Chief Minister must step down. முதலமைச்சர்களே, இராஜினாமா செய்யுங்கள் என்று சொன்னால்தான் புரியும் போல் இருக்கிறது. இப்பொழுது நான் சொல்லும் முறையில் சொன்னால் புரியாது போல் இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நீங்கள பேசிய பேச்சு டெல்லிக்கு நன்றாகப் பொருந்தும் என்று சொன்னேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, in support of the No confidence Motion moved by the Anna D.M.K. and the Disapproval Motion moved by the Congress Party, I want to offer a few remarks on behalf of the Swatantra Party.

At the outset, I want to state that no section of the people are happy. For example, the agriculturists are not happy; the student population is not happy; the officials are not happy; and the village population are not happy. This is because of the mal-administration and irregular distribution of essential commodities like sugar, kerosene, rice, etc. This Government has promised so many things at the time of election and after the election, they have not cared to take note of the needs of the people. That is why this kind of anarchy has been raised in the entire State. What is the state of affairs in Tamil Nadu?

If you deeply think over the matter, you will see that no section of the people in the entire State including the D.M.K. people are happy. The cost of living has affected all the people. According to the statistics given by the Food Department, we are marginally surplus in food production but what has happened? One measure of rice is being sold from Rs. 7 to Rs. 9. In Andhra Pradesh and Mysore it is being sold at Rs. 2.50 or Rs. 3. On a former occasion, the Hon. Chief Minister had stated that in Andhra Pradesh and Kerala the price of rice was high and that in Tamil Nadu it was low. But now what is the position? Why has the

[Thiru B. Venkataswamy] [1974 டிசம்பர் 17

price of rice has gone up? I think that is because of the policy of the Government with regard to procurement and distribution, the lifting of the ban on the movement of foodgrains, etc.

Sir, we were told previously that there was a green revolution and we were surplus in foodgrains. But if you think deeply over the matter, you will see that we have not achieved green revolution but only yellow revolution and the cost of every produce has increased. There are so many reasons for that. There is a downfall in production because of the mal-administration of the Government.

In this state of affairs, the people mostly affected are agriculturists. Eighty per cent of the agriculturists have been hurt. The rate of Rs. 74 per quintal is a great injustice to the ryots. If you calculate the cost of cultivation—you should not go by the statistics of the officers—it comes to Rs. 120 per quintal for one acre of paddy land. But have this Government come forward to pay that amount? No. In spite of the high cost of fertiliser and the non-availability of pesticides, the agriculturist is producing foodgrains and there is no other go for him. Sir, in the case of industries like textiles, the cost of production plus profit is taken into consideration and the manufacturer gets a better and profitable price. Whereas in agriculture, only the officers are fixing the price and not the producers. This is a sorry state of affairs. The agriculturists have completely lost their confidence in this Government because they never care for the welfare of the agricultural community.

Coming to the next point, consumers also are not happy because the price is high. For that, I suggest that we can subsidies the price of foodgrains for them. Otherwise, it is highly impossible for them to eke out their livelihood. Before I came to this House I met some people who wanted me to ask the Government to reduce the cost of rice. Everybody, including officers and even layman in the street, feel that they have no hope of living happily in this State. That is the state of affairs, and the Government should take some action to relieve their sufferings. I once again emphasise that it is only on account of their mishandling on the food front, all these things have happened in our State.

1974 டிசம்பர் 17] [Thiru B. Venkataswamy]

Coming to the rice scandal in Tamil Nadu, we have already seen the concerned file in the Hon. Speaker's room. According to the file, everything seems to be all right and nobody can deny it. But suspicion is aroused because an insolvent like Thiru Thandavarayan who is only an employee was allowed to purchase foodgrains to the tune of a crore of rupees. Also, why the other tenderers were not called for negotiations? If they were really interested in negotiations, they should have called them also. I request that a Committee may be appointed to conduct a proper and impartial enquiry into the matter. Then only the Opposition Parties and the people outside will be happy.

Coming to the drought conditions, they are prevailing in the entire State. But what are the steps taken by the Government to get over it? In our area even drinking water is not available now. In the previous year we were having plenty of water in tanks and wells but now there is no water there. Even for cattle there is no drinking water. Of course, the Government have announced that they would give assistance to the tune of Rs. 5 crores. But the Central Government are not coming forward to give assistance for it. How do this Government propose to face this problem? We must see that a proper remedy is found to solve it.

My hon. Friend, Thiru Bhomman, wants that the Nilgiris and the Kanyakumari districts should be declared as drought-affected areas. In the Nilgiris, there is no food production. How are the Government going to supply foodgrains to that district? Also, the frost has affected the potato crop in that district and the yield is poor. The people belonging to that area and my constituency have told me that the officials are going to attach their properties for recovering the loans given by the Government. So, I request the Hon. Minister for Revenue to give proper instructions to them that they should not attach the properties of the people who are suffering on account of drought conditions.

The officials are harassing the people. Those who are able to pay, let them pay. But those who are in need of help must be helped and outstanding loans should be written off or postponed and

drought relief works must be started immediately. Otherwise people will go to other States. Because there is no work and they have no money, people are migrating from our place to Mysore State in search of jobs. So, this Government must take serious note of the alarming situation and pay particular attention to the drought conditions prevailing in Dharmapuri and Ramanathapuram districts which have already been declared as drought-prone districts and start drought relief works there. Suitable instructions should be given to the concerned officers that agriculturists and other people are given the necessary help.

Regarding drinking water-supply, I am sorry to say that Government sanctioned some amount but because of the conditions imposed, it is not working well. It takes two or three months to get Government sanction. If we are to dig well then, there is no use. Rainy season may come and then we cannot dig well. What I say is, when there is drought, the concerned officers on the spot should be empowered to sanction the amount for digging of well instead of waiting for Government's sanction which takes time.

Every section of the people are not happy. Eighty per cent of the ryots are not happy. There is students' unrest. Thiru K. T. K. Thangamani spoke about it. Schools and Colleges are being closed. I have given an adjournment motion about students' unrest. This Government has failed to tackle that situation in an effective manner.

Thiru K. T. Thangamani also pointed about D.A. payment to officials. They are middle class people who are suffering due to increase in prices. But they had not been given D.A. increase, with the result, it leads to illegal practices on their part. Government should come to their help and provide them with increased D.A. All sections of the people are not happy. So, what I say is, the people have lost confidence in this Government.

Coming to co-operatives, I want to point out one thing. You are procuring at the rate of Rs. 70 per quintal. 100 kg. of paddy yields 68 kg. of rice. So it works out only to Rs. 1.30 per kilo of rice. But what is the rate at which you are selling rice at fair price shops? At the rate of Rs. 2.50 per kilo. Why is this increase of Rs. 1.20 per kilo? I am not able to understand. Co-operative

1974 டிசம்பர் 17] [Thiru B. Venkataswamy]

societies are not meant for profit. That is why I say these co-operative societies are looting the people. You had been saying that big merchants had been looting. Now, Government itself is looting. The co-operative societies are looting. What I say is that this Government has lost confidence of the people. So, I demand the resignation of this Government. With these words I resume my seat.

(மூற்பகல் 11-30)

திரு. மணலி சி. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற மூன்று தினங்களாக மிக காரசாரமாக விவாதிக்கப்பட்டு வரக்கூடிய நம்பிக்கையில்லாத் தீர்மானம், ஒரு குறிப்பிட்ட கொள்கையைக் கண்டிக்கக்கூடிய தீர்மானம் இவைகளின் மீது நான் என் கருத்துக்களைச் சொல்ல முன் வந்திருக்கிறேன்.

முதலாவதாக, இந்த இரண்டு விஷயங்களையும் சேர்ந்து பேசச் சொல்வது அல்லது சேர்த்துப் பேச வேண்டும் என்று சொல்லக் கூடிய விதத்தில் எதிர்கட்சிகள் ஒப்புக்கொண்டிருப்பது சரியல்ல என்பது என் அபிப்பிராயம். இன்று மிக நெருக்கடியான ஒரு பொருளாதார நிலை இருக்கும்போது, பஞ்ச நிலைமையை நாம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும்போது அதை முக்கியமாக முதலில் கவனிக்க வேண்டும். அதுபற்றிய விஷயங்களைப் பற்றிப் பேசுவது முக்கியமானதாகும்.

இன்னொன்று, பொதுவாக ஆளும் கட்சிமீது இருக்கக்கூடிய அதிருப்தியை, பல்வேறு விஷயங்களில் அதிருப்தியை வெளியிடக் கூடிய ஒரு விஷயமாகும். இந்த இரண்டையும் சேர்த்துப் பேச வேண்டும் என்று சொல்வது ஒரு பக்கத்தில் ஏதாவது ஒரு விஷயத்தில் அழுத்தம் விழுகிறதே தவிர இன்னொரு விஷயத்தில் அழுத்தம் குறைகிறது என்ற நிலையை நாம் இன்றுவது கற்றுக் கொள்ள வேண்டும்.

சென்ற பல சட்டமன்றக் கூட்டங்களில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது ஒரு அர்த்தமில்லாத விஷயமாகப் போய்க் கொண்டிருக்கிறது என்பதைத்தான் நான் பார்க்கிறேன். சில குறிப்பிட்ட விஷயங்களைக் கண்டிப்பது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அது வேண்டும் என்பதைக்கூட அழுத்தந்

[திரு. மணலி சி. கந்தசாமி] [1974 டிசம்பர் 17

திருத்தமாகக் கூறுகிறேன். அப்போதுதான் சர்க்காரைத் திருத்த முடியும். சர்க்காரைத் திருத்தக் கூடிய அந்த நிலையில் நாம் மக்களின் கவனத்தை ஈர்க்க முடியும். ஒட்டுமொத்தமாக ஒவ்வொரு தடவையும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து பல்வேறு விஷயங்களில் காழ்ப்புணர்ச்சியோடு, பகை உணர்ச்சியோடு—அரசியல் விஷயங்கள் குறைவு—மற்ற விஷயங்களில் தனிப்பட்ட முறையில் உள்ள கோபதாபங்கள்தான் அதிகம் பிரதிபலிக்கிறது. ஒவ்வொரு தடவையும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது என்பது எதிர்க்கட்சிகள் தங்கள் பாத்திரங்களை சரிவரச் செய்வதை முடமாக்குகிறது.

முதலில் நான் நம்மை இன்று எதிர்நோக்கியுள்ள பஞ்ச நிலைமையை எடுத்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்குப் பிறகு நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு வருகிறேன். இதுதான் முக்கியம். இன்று மாநிலம் பூராவும் பெரிய வரட்சி இருக்கிறது என்று சொன்னால் அது சிறிய விஷயம் அல்ல. இதனால் ஏற்படக் கூடிய பல்வேறு உத்பாதங்கள் எப்படி நம் மாநிலத்தை, தமிழ்ச் சமுதாயத்தை ஆட்டி அசைக்கும் விதத்தில் ஏற்பட்டுப் போகிறது என்பதை யாரும் மதிப்பிட முடியாது. இன்று ஓரளவிற்கு குறுவை விளைந்திருக்கிறது. கொள்முதல் செய்வது என்ன காரணத்தாலோ வெற்றிபெற முடியவில்லை. உள்ளேபோய்க் கொண்டிருக்க முடியாது. சம்பா எந்தவிதமான பலனையும் தரப் போவதில்லை. மூன்றும் போக சாகுபடி எப்படிச் செய்யப் போகிறோம் என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. இந்த அவலிற்கு ஒரு பயங்கரமான உணவு நிலை, ஒரு பொருளாதார வீழ்ச்சி தமிழ் சமுதாயத்தை எதிர்நோக்கி இருக்கிறது. இதில் இருந்து நாம் எப்படி மீளுவது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் இந்த நிலையை எப்படிச் சமாளிப்பது என்பதை உறுப்பினர்கள் கூர்மையாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அன்று முதல் அமைச்சர் அவர்கள் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப் போகிறோம் என்பதைப் பற்றி ஒரு அறிக்கையை இங்கு வீடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கை காலம் தாழ்த்தி வந்திருக்கிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். நம் முதல் அமைச்சர் அவர்கள் மிகவும் துடிப்பாகவும், முனைப்பாகவும், உற்சாகமாகவும் நடக்கக்கூடியவர். இந்தச் சந்தர்ப்பத்தில் கொஞ்சம் காலத்தாழ்த்தி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று

1974 டிசம்பர் 17] [திரு. மணலி சி. கந்தசாமி]

தான் நான் சொல்ல விரும்புகிறேன். குறுவையின்போதே நமக்கு ஓரளவு தண்ணீர் நிலைமை தெரியும். மேட்டூரின் நிலை நமக்குத் தெரியும். குறுவையின் போதே மழை பெய்யவில்லை. ஒவ்வொரு ஆண்டும் மழை பெய்து குறுவை அறுவடையைக் கெடுக்கும். இந்தத் தடவை அறுவடை சமயத்தில் கூட மழை பெய்யவில்லை என்று தெரிந்த பிறகும் அப்போதே முன் எச்சரிக்கையாக கொள்முதலில் ஈடுபட்டிருக்க வேண்டும். அப்போதே தகுந்த நடவடிக்கைகள் எடுத்திருக்க வேண்டும். அதில் ஓரளவு தயக்கம் காட்டியதால் இன்று நாம் எடுக்கும் நடவடிக்கைகளை நிச்சயமாகப் பாதிக்கும். சில சந்தர்ப்பங்களில் ஷாக் ட்ரீட்மெண்ட் என்று சொல்வார்கள். சில எதிர்பாராத தீமைகள் ஏற்படும்போது அதனால் நீண்ட காலமாக உள்ள பல தீமைகளைப் போக்கும் அளவிற்கு அதைப் பயன்படுத்திக் கொண்டு முன்னேற முடியும். அந்த அடிப்படையில் நாம் இந்த நெருக்கடியைப் பார்க்க வேண்டும். இன்று இதனால் வந்துள்ள சில நன்மைகளை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

முதல் தடவையாக இந்தச் சர்க்கார் தானிய மொத்த வியாபாரத்தை வியாபாரிகளிடமிருந்து பிடுங்கி இருக்கிறது. இதன் விளைவாக ஏற்பட்டதாகும். இல்லாவிடில்—நாங்கள் பல வருடங்களாகச் சொல்லி வருகிறோம், வியாபாரிகள் கொள்ளை அடிக்கிறார்கள், அவர்கள் வாங்குகிற விலைக்கும் விற்கிற விலைக்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது, அவர்கள் கோடிக்கணக்கான ரூபாயைக் குவித்திருக்கிறார்கள், விவசாயிகள் வயிறு எரிகிறார்கள், மொத்த வியாபாரத்தை வியாபாரிகளிடமிருந்து எடுத்துவிட வேண்டும் என்று சொல்லி வருகிறோம் பல ஆண்டுகளாக. அப்படி ஒவ்வொரு ஆண்டும் நாங்கள் சபதம் போட்டுக் கொண்டிருந்தும் இந்தப் பஞ்சம் வந்ததற்குப் பிறகுதான் இன்று இது அவசியம் என்பதை நீங்கள் ஏற்றுக்கொண்டு இப்போது அதைச் செய்ய முன்வந்திருக்கிறீர்கள். இது ஒரு வரவேற்கத்தக்க அம்சம்.

இதில்கூட நான் எச்சரிக்கையாகச் சொல்கிறேன். இது தொடர வேண்டும். பஞ்சம் தீர்ந்துவிட்டது, பஞ்சத்தை நாம் கடந்து விட்டோம் என்று மறுபடியும் இந்த வியாபாரிகள் கூட்டத்தை வளர்த்திவிடாதீர்கள். இந்தக் கூட்டத்தை வளர விட்டால் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும்.

[திரு. மணலி சி. கந்தசாமி] [1974 டிசம்பர் 17

எனவே, இதை ஒரு சாஸ்வத நடவடிக்கையாக கருத வேண்டும். இதற்கு முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வியாபாரிகள் மீது எனக்கு கோபம் கிடையாது. வியாபாரிகள் நியாயமாகக் கொள்முதல் செய்து நியாயமாக விற்றால் வரவேற்கலாம். வியாபாரிகள் சமுதாயத்தின் முதுகெலும்பு என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இன்றைக்கு வியாபாரிகள் தரம் கெட்டு விட்டார்கள். அவர்கள் எப்படியாவது பணம் சேர்க்க வேண்டும் என்ற கொடிய எண்ணத்தோடு செயல்படுகிறார்கள். சமுதாய மக்களால் வெறுக்கப்படக் கூடிய சமுதாயமாக இன்றைக்கு வியாபாரிகள் ஆகிவிட்டார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. சேம்பர் ஆப் காமர்ஸ் நடத்துகின்ற மீட்டிங்குகளில் நாம் பார்க்கலாம். நான் என்ன கூறுகிறேன் என்றால் இன்றைக்கு அரசு மொத்த வியாபாரத்தை எடுத்துக் கொண்டது சாஸ்வதமான இன்றைய தினத்திலிருந்து என்றைக்கும் இருக்கக் கூடியதாக நிரந்தரமாக இருக்கக் கூடியதாக அதை ஆக்க வேண்டும். இதைத்தான் இன்றைக்கு நான் வலியுறுத்துகிறேன்.

அடுத்தபடியாகப் பார்த்தால், இப்போது குறுகிய காலத்தில் எப்படிச் சாகுபடி செய்யலாம், மூன்றாவது போகம் செய்யலாம், என்ன என்ன உதவிகள் செய்யலாம் என்பதில் மிக தாராளமாக இருக்கவேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் என்ன என்ன வழி இருக்கிறது என்று ஆராய்ந்து பில்டர் பாயிண்டுகளைப் போட வேண்டும். சர்க்காரே செலவு செய்து பில்டர் பாயிண்டுகளைப் போடவேண்டும். தனி நபர்களுக்கும் கடன் கொடுத்து போட வேண்டும். சமுதாய பில்டர் பாயிண்டுகளை எங்கெங்கே தஞ்சை ஜில்லா, திருச்சி ஜில்லா எங்கெங்கே நஞ்சை நிலங்கள் இருக்கிறதோ அங்கெல்லாம் சர்க்கார் தரப்பில் சர்க்கார் உடமையாக செய்யப்பட்டு அதன் மூலமாக பாசன வசதியை ஏற்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட நிலங்களுக்கு வாய்தா வரி கூட வாங்கலாம். இப்போது இருக்கிற சம்பிரதாயமான பாசன வசதிகளை மட்டும் நம்பி இராமல் சமுதாயத்திற்கு உதவி அளிக்கக் கூடிய முறையில் பில்டர் பாயிண்டுகளைப் போட வேண்டும். நிறைய நிலம் உள்ளவர்களுக்கு வசதி உள்ளவர்களுக்குச் சொந்தமாக பில்டர் பாயிண்டுகளைப் போட்டு தரலாம். அவர்கள்

1974 டிசம்பர் 17] [திரு. மணலி சி. கந்தசாமி]

கடன் கட்ட முடியும். ஆனல், சிறு விவசாயிகளுக்கு உதவக் கூடியது எது என்றல் சமுதாயத்திற்குச் சொந்தமாக இருக்கின்ற முறையில் சர்க்காரே செலவை ஏற்று போடப்படுகிற பில்டர் பாயிண்டுகளினல் தான் இப்போதைக்கும் எதிர் காலத்திற்கும் நன்மை செய்யக் கூடியதாக இருக்கும். அந்த அடிப்படையில்தான் பில்டர் பாயிண்டுகளை ஏற்படுத்தித் தர வேண்டும்.

அடுத்து, பம்பு செட்டுகள் கொடுப்பது. இரண்டு ஏக்கர், ஒரு ஏக்கர் என்று வைத்திருக்கிறவர்களுக்கு எல்லாம் பம்பு செட்டுகளை ஆயில் என்ஜின்களைக் கடனை கொடுத்தால் அந்தத் திட்டம் உருப்படாது. காரணம், அந்தச் சிறு விவசாயிகளால் கடனைக் கட்ட முடியாது. பிறகு பம்பு செட்டுகளை எடுத்துக் கொள்வார்கள், அல்லது அவனே விற்றுவிடுவான். விவசாயம் பாதிக்கப்படும். ஆகவே பம்பு செட்டுகளைக் கொடுக்காமல் அதற்கு பதிலாக பல்லாயிரக்கணக்கில் பம்புசெட்டுகளை சர்க்காரே வாங்கி யூனியன்கள் மூலமாகவோ பொது ஸ்தாபனங்கள் எங்கெங்கே இருக்கின்றனவோ அங்கெல்லாம் அதன் மூலமாகவோ பம்பு செட்டுகளை வாடகைக்கு விடவேண்டும். வசதி உள்ளவர்களுக்குக் கடனுக்கு பம்புசெட்டுகளை வாங்கிக் கொடுக்கலாம். சிறு விவசாயி களுக்கு இரண்டு மணி நேரம், மூன்று மணி நேரம் என்று வாடகைக்குக் கொடுக்க வசதி செய்யப்பட வேண்டும். இன்றைக்கு இருக்கிற நிலையில் பாசனமே நடக்காது. ஏரியே பாயாது. இன்றைக்கு மேட்டூர் லெவலைப் பார்த்தால் தஞ்சாவூரில் கூட வாய்க்காலிலிருந்து நிலத்திற்கு தண்ணீர் பாயாது என்ற நிலை தான் இருக்கிறது. இப்படி வாடகைக்கு பம்பு செட்டுகளைப் பயன்படுத்த வேண்டும். சொந்த உள்ளவர்களுக்கு கடனைக் கொடுங்கள். ஆட்சேபணை இல்லை. ஒரு ஏக்கரா இரண்டு ஏக்கரா உள்ள விவசாயிகளுக்கு டெனன்ட்ஸ் களுக்கு எல்லாம் பம்ப் செட் வாடகைக்கு கொடுப்பதன் மூலம் பாசன வசதி உத்தரவாதம் ஏற்படுத்தக் கூடிய நிலை ஏற்படுகிறது. அவர்களால் வாய்க்காலில் உள்ள நீரை நிலத்திற்கு எடுத்துக் கொள்ள முடியும். இதைச் செய்வதன் மூலம் ஓரளவு இன்றைக்கு இருக்கிற சம்பாப் பயிரைப் பாதுகாக்க முடியும். மூன்றுவது போகம் கிடைக்கவும் வழி வகை ஏற்படும்.

[திரு. மணலி சி. கந்தசாமி] [1974 டிசம்பர் 17

அடுத்தபடியாக, இதிலிருந்து வரக் கூடிய பிரச்னைகள். இப்போது வரவேண்டிய கிஸ்திக்கு என்ன செய்ய போகிறீர்கள். வாங்கி இருக்கிற கடனை எப்படி அடைப்பது? குத்தகையை எப்படிக் கொடுப்பது. கொள்முதல் பிரச்னை. இவை எல்லாம் பெரிய டைனமிக் பிராப்ளம்ஸ். இப்படிப்பட்ட பிரம்மாண்டமான சமுதாயப் பிரச்னைகள் கிளம்பப் போகின்றன. இதை எல்லாம் முன் கூட்டியே எதிர்பார்த்து தக்க தடுப்பு நடவடிக்கை கிஸ்தியைப் பற்றி, கடனைப் பற்றி எல்லாம் ஒரு முடிவு எடுத்தாக வேண்டும். விலையை நல்லமுறையில் நிர்ணயிக்க வேண்டும். புதிய உத்தரவு களைப் போட வேண்டும். அதைப் போல கடன்களைக் கொஞ்சம் தள்ளி வைக்க வேண்டும். இதுபோன்ற நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

இப்போது குறுவை கொள்முதல் நடக்க வேண்டும். அது பெயில்யூராகத்தான் இருக்கும். அதைப் பற்றி சிந்தித்து மறு பரிசீலனை செய்ய வேண்டும். உற்பத்தியாளர்கள் தஞ்சாவூர் மிராஸ்தார்கள் விற்கத் தயாராக இருக்கிறார்கள். வாங்க ஆள் இல்லை. வாங்கும்போது 57-58-67 கிலோகிராம் வரை போகிறது. ஈரபதம் என்று சொல்லிவிடுகிறார்கள். அட்மாஸ்பியரில் கூட ஈரபதம் இருக்கிறது. ரேடியோவிலேயே கேட்கலாம். நம் உடம்பில் கூட ஈரபதம் இருக்கிறது. நெல்லைக் கொண்டு போய்க் கொடுங்கள். அதற்கு அதிகாரி ஒருவன் இருக்கிறான். எமகாதகன். ஒரு ரூபாய் ஒரு மூட்டைக்குக் கொடுத்தால் ஈரபதம் இருக்காது. இல்லை என்றால் 100-க்கு 78 சதவீதம் ஈரபதம் இருக்கிறது என்று சொல்லி விடுவான் க்வாலிடி இன்ஸ்பெக்டர். இப்படி எல்லாம் காரியங்கள் நடைபெறுகின்றன என்று நமக்குத் தெரிகிறது. இதற்கு முடிவு கட்ட வேண்டாமா? இதை எல்லாம் கருத்தில் கொண்டு விலையை, அளவை எல்லாம் நிர்ணயம் செய்து விட வேண்டும். எல்லா வற்றையும் கருத்திற் கொண்டு இந்த நிர்ணயம் செய்யப்பட வேண்டும். இது சின்ன விஷயம் கொஞ்சம் ஆலோசனையோடு செய்தால் நாம் இந்தக் கொள்முதல் விஷயத்தில் வெற்றி பெற முடியும் என்று நான் ஆலோசனையாக சொல்லுகிறேன். இந்த மாதிரி கடன் நிவாரணம், நீர்ப்பாசனம், சிறு விவசாயிகள் சாகுபடி செய்யப் பாசன உத்தரவாதம், சமுதாய பம்புசெட்டுகள், பில்டர் பாயிண்டுகள் ஏற்படுத்துதல் இவை எல்லாம் விவசாய உற்பத்தியை

1974 டிசம்பர் 17] [திரு. மணலி சி. கந்தசாமி]

அபிவிருத்தி செய்யக் கூடிய வருங்காலத்தில் கூட உபயோகப் படக் கூடிய ஒரு நல்ல இன்வெஸ்ட்மெண்ட். இதில் செலவழிக்கிற பணம் வீண் அல்ல. என்றைக்கும் உதவிகரமானதாக இருக்கும்.

அடுத்தபடியாக, இன்றைக்கு இருக்கிற நீர் நிலைகள், குளங்களில் கூட பில்டர் பாயிண்ட் போடலாம். குளம் குட்டைகளில் எல்லாம் போடலாம். இந்த நடவடிக்கைகள் எல்லாம் நிச்சயமாகப் பலன் கொடுக்கும்.

அடுத்தபடியாக, கொள்முதல் பற்றி. இதைப்பற்றி நிறைய பேசப்படுகிறது. அப்ரூவ்ட் பிரைஸ் என்று ஒன்று வைத்திருக் கிறார்கள். இது விவசாயிக்கு நியாயமான விலையா என்று பரிசீலனை செய்ய வேண்டும். சரியான விலை கொடுக்கவில்லை என்றால் வியாபாரி வரத்தான் செய்வான். கொள்ளை அடிக்கத்தான் செய்வான். தண்டனை என்றால் பயப்படுவார்கள் என்று நினைக்கத் தேவையில்லை. அது எல்லாம் நடக்காது. வியாபாரிகள் எல்லாம் பார்த்தவர்கள். இன்றைக்கு நெல் அரசாங்கத்திற்குக் கிடைக்க வெளியே வரக்கூடிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள். ஸ்டாக் வைத் திருக்கும் வியாபாரிகள் ஸ்டாக்கை தெரிவிக்க வேண்டும், கொடுக்க வேண்டும் என்று போட்டு அப்படி இல்லை என்றால் சில பண்ணு வோம் ஐந்து வருஷம் தண்டிப்போம் என்று சொல்லுங்கள். இல்லாவிட்டால் நடக்காது. இன்றைக்கு வியாபாரிகளிடத்தில் மனிதத் தன்மை இல்லை, லாபம் அடிப்பது தான் மனோதர்மமாகப் போய்விட்டது. ஆகவே கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதே மாதிரி ஓளவு எதிர்கட்சிகளையும் கலந்து கொள்முதல் பற்றி நல்ல முடிவுகளை எடுங்கள். ஸ்தலத்தில் இருக்கிற எம்.எல்.ஏ. பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் இவர்கள் ஆலோசனையைக் கேட்டு செயலபடலாம். இந்த ஏற்பாட்டின் மூலம் கொளமுதல் செய்தால் உங்களுக்குக் கெட்ட பெயர் வராமல் பார்த்துக் கேட்டு செயல்படலாம். இந்த ஏற்பாட்டின் மூலம் கொள்முதல் செய்வதில் ஜனங்கள் மத்தியில் கூட்டங்கள் போட்டு நாட்டு மக்கள் அனைத்துக் கட்சிகள் சேர்ந்து கூட்டம் போட்டு இந்த விதத்திலாவது நாலு கட்சிகள் ஒன்று சேர்ந்து ஒற்றுமையுடன் மக்களின் பிரச்னையைக் கவனிக்க வாய்ப்பாக ஆக முடியும், என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. மணலி சி. கந்தசாமி] [1974 டிசம்பர் 17

விலை நிர்ணயிப்பதைப் பொறுத்தவரையில் 'அட்ராக்டிவ் பிரைஸ்' இருக்கவேண்டும். அந்த வகையில் குவின்டாலுக்கு இவ்வளவு என்று நிர்ணயம் செய்யுங்கள். ஏற்கெனவே மத்திய சர்க்கார் நிர்ணயித்த அளவு இருக்கிறது என்று சொன்னீர்களானால் நிச்சயமாக அதில் தவறுதான் நடைபெறும். அவர்கள் குறிப்பிட்டிருக்கிற விலை போதவே போதாது. நீங்கள் நிர்ணயித்த விலையாவது ஒழுங்காகக் கிடைக்க வேண்டும். அது மோட்டா ரகத்துக்காகனும், மெல்லிய ரகத்துக்காகனும், மிக மெல்லிய ரகத்துக்காகனும் ஒரு அட்ராக்டிவ் பிரைஸ் இருக்க வேண்டும். அந்த வகையில் குறைந்தபட்ச விலையை நிர்ணயம் செய்து கொடுங்கள்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நான் பார்த்தேன். மிராசுதார்கள் கொடிபிடித்துக்கொண்டு வருவதைப் பார்த்தேன். இதுதான் சோஷலிச பாதை, 'தொடாதே, தொடாதே, நிலத்தைத் தொடாதே', 'தொடாதே தொடாதே, குத்தகை நிலத்தைத் தொடாதே' என்று திருநெல்வேலி ஜில்லாவில் மிராசுதார்கள் கொடி பிடித்துக்கொண்டு வந்தார்கள். எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி கொடிபிடிப்பதை இப்போது விட்டு விட்டது. ஆனால் இப்போது மிராசுதார்கள் கொடி பிடிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஏனென்றால் இப்போது நிலைமை அப்படி இருக்கிறது. அதைப் புரிந்துகொண்டு நம்முடைய முதலமைச்சர் செயல்பட வேண்டும்.

அட்ராக்டிவ் பிரைஸ் இல்லாமல் கொள்முதல் செய்தால் நிச்சயமாகத் தண்டு விழுத்தான் செய்யும். கொள்முதலில் தண்டு விழுந்தால் நிச்சயமாகச் சமாளிக்க முடியாது; விலை ஏறும்.

கோதுமையை எவ்வளவு வாங்கிப் போட முடியுமோ அவ்வளவு வாங்கிப் போடுங்கள். இப்போது எல்லோரும் கோதுமை சாப்பிட்டுப் பழகிவிட்டார்கள். அதேமாதிரி கேழ்வரகு கூட விநியோகம் செய்யலாம். வேண்டுமானால் உங்களுடைய உணவுத் துறையிலிருந்தும், மாதர் சங்கத்திலிருந்தும் கேழ்வரகை எப்படிச் சமைப்பது, எப்படி பக்குவப்படுத்துவது, எப்படி சாப்பிடுவது என்று மக்களுக்கு விளக்க ஏற்பாடு செய்யுங்கள். நான் கூட கோதுமைதான் சாப்பிடுகிறேன்.

1974 டிசம்பர் 17] [திரு. மணலி சி. கந்தசாமி]

வரி, வாய்தா, குத்தகையைப் பொறுத்தவரையில் விவசாயிகள் பாதிக்கப்படாத வகையில், முன்ஜாக்கிரதையாக, முன் எச்சரிக்கையாக தேவையான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக நான் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே நடப்பவைகளைப் பார்த்தால் உள்ளபடியே எனக்குச் சங்கடமாக இருக்கிறது. அரசாங்கத்தைக் கண்டிப்பதற்கு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்க்கட்சியினர் கொண்டுவந்திருக்கிறார்கள். நானும் எதிர்க்கட்சியிலே தான் இருக்கிறேன். என்னுடைய பொதுவாழ்வில் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்திருக்கிறேன்; மக்களுக்காகப் பாடுபட்டிருக்கிறேன். நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து விவாதிக்கும்போது இந்தச் சபையிலே நடந்துகொள்ளும் முறைப்படி நடக்க வேண்டாமா? ஆளும் கட்சியைக் குறை கூறலாம். அது எதிர்க்கட்சியினுடைய கடமை. குறைகளை அழுத்தமாகச் சொல்லலாம். அதில் தவறு இல்லை. ஆனால் முறை தவறி நடக்கக் கூடாது. முன்னாள் துணை சபாநாயகர் பெஞ்சின்மேல் ஏறிநின்று பேசியதாகக் கேள்விப்பட்டேன். இது என்ன முறை? இது நம்முடைய சபை, இது நம்முடைய அரசாங்கம், இங்கே நாம் பொறுப்போடு நடந்துகொள்ள வேண்டாமா? சொல்ல வேண்டியவைகளை அழுத்தமாகப் பேசலாம்; நேரடியாகப் பேசலாம். ஆனால் அதற்கும் ஒரு எல்லைக்கோடு இருக்க வேண்டும். ஒரு எல்லைக்குட்பட்டு நடக்க வேண்டும்.

திரு. பெ. சீனிவாசன்: சார், பாயின்ட் ஆப் ஆர்டர். நேற்று நடந்த நிகழ்ச்சி நேற்றுடன் முடிந்துவிட வேண்டுமென்று எல்லோரும் சொன்னார்கள். நானும் அதை விட்டுவிட்டேன். ஆனால் அந்தப் பிரச்னையை மாண்புமிகு உறுப்பினர் மணலி அவர்கள் மீண்டும் கிளப்புவது சரியா? என்னை மட்டும் சொல்லல், ஆளும் கட்சியில் இருப்பவர்கள் தவறு செய்யவில்லையா? அவர்கள் மட்டும் ஒழுங்காகவா நடந்து கொண்டார்கள்? நேற்று நடந்தவைகளை சில மோசடி பத்திரிகைகளும் திரித்துப் போட்டிருக்கிறார்கள். அதை நான் மீண்டும் குறிப்பிட விரும்பவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னை மட்டும் குறிப்பிட்டு சொல்வது சரியா?

[1974 டிசம்பர் 17

திரு. மணலி சி. கந்தசாமி: நண்பருக்கு நன்றி. நான் நேற்று சபைக்குள்ளே இல்லே. நீங்கள் பெஞ்சுமேலே நின்று பேசியதாகச் சொன்னார்கள். நான் உங்களைப்பற்றி மட்டும் சொல்லவில்லே. இரண்டு பக்கத்திலும் இருப்பவர்களைச் சொல்கிறேன். நான் பொதுவாகத்தான் சொல்கிறேன். இது நம்முடைய சபை, இது நம்முடைய சபாநாயகர், இது நம்முடைய அரசாங்கம். அதை நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். எதிர்க்கட்சியினர் கேட்பதற்கு ஆளும் கட்சியினர் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதற்கு உரிய முறையோடு இரு தரப்பினரும் நடந்து கொள்ள வேண்டும். நான் தங்களைப் பற்றி கொஞ்சம் அக்கறையோடு சொல்வதற்குக் காரணம், நீங்கள் ஒரு பொறுப்புள்ள பதவியில் இருந்தவர்கள். நாங்கள் சாதாரண உறுப்பினர்கள். நீங்கள் வயதில் குறைந்தவராக இருந்தாலும், பெரும் பொறுப்பை வகித்தவர்கள்; இன்னும் பெரும் பொறுப்புகளை வகிக்க வேண்டியவர்கள். பல்வேறு விஷயங்களுக்காக நீங்கள் வெளியே போயிருக்கிறீர்கள். அது வேறு விஷயம். ஒரு உதாரணத்திற்காகத்தான் இதைச் சொன்னேனே அல்லாமல் தங்களை அவமானப்படுத்த வேண்டுமென்றே, புண்படுத்த வேண்டுமென்றே சொல்லவில்லே. பொதுவாகக் குறிப்பிடும்போது ஏடுத்துக்காட்டுக்காகத்தான் குறிப்பிட்டேன் என்பதோடு இந்தப் பிரச்னையை முடித்துக் கொள்கிறேன்.

இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வருகிற ஒவ்வொரு முறையும் சொன்னதையேத்தான் திருப்பித் திருப்பிச் சொல்கிறார்கள்; புதிதாக ஒன்றும் இல்லே. துர்பாக்கியவசமாக இந்த முறை இதில் எஸ்டிமேட் கமிட்டி ரிப்போர்ட் மாட்டிக் கொண்டிருக்கிறது. பாக்கி விஷயங்கள் எப்போதும் உள்ளவைதான்.

இந்த எஸ்டிமேட் கமிட்டி ரிப்போர்ட்டையும் துலுக்கமாகப் பார்க்க வேண்டியதில்லே. சொல்ல வேண்டியவைகளைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். சர்க்கார் தரப்பிலே கூட அதைப் பார்த்துக் கொள்வார்கள். ஆனால் இந்த அறிக்கையில் சொல்லியிருக்கின்ற விஷயங்கள் கலைஞருடைய ஆட்சிக்கு உகந்ததாக இல்லே, பெருமை தருவதாக இல்லே என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ரிப்போர்ட்டிலே தெளிவாகச் சொல்கிறார்கள். அதற்கு மேல் பைலைப் பார்க்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்குத்

1974 டிசம்பர் 17] [திரு. மணலி சி. கந்தசாமி]

தேவையே இல்லை. ரிப்போர்ட்டில் இல்லாதது என்ன பைலில் இருக்கப் போகிறது? பைலை பார்த்தால் மாட்டிக் கொள்வார்களோ என்று நினைத்தேன். பைலிலே கொஞ்சம் நுணுக்கம் தெரிந்தால் போதும், மாதவன் அதற்குள் புகுந்துவிடுவார். ஆனால் பைலை பார்த்ததில் அப்படி ஒன்றும் இல்லை. நானும் பைலைப் பார்த்தேன். ரிப்போர்ட்டில் இல்லாதது ஒன்றும் அதில் இல்லை. அதைப்போய் பார்க்கவேண்டும், பார்க்கவேண்டுமென்று அடித்துக் கொண்டார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பைலை நாங்கள் எல்லாம் பார்த்தோம். அதிலே ஒன்றும் இல்லை என்றால் அதை பார்த்த நாங்கள் எல்லாம் பைத்தியக்காரர்களா (சிரிப்பு)?

திரு மணலி சி. கந்தசாமி: பைலை பார்க்கத் தேவையில்லை என்று சொல்கிறேன். பார்த்தால் நாங்கள் எல்லாம் பைத்தியக்காரர்களா என்று நண்பர் கேட்கிறார் (சிரிப்பு). என்னைப் பொறுத்தவரையில் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. முதலில் நான் வரவில்லை என்றுதான் சொன்னேன். பார்ப்பதற்கு அதில் என்ன இருக்கிறது? இந்த ரிப்போர்ட்டில் இல்லாதது அதில் ஒன்றும் இல்லை. என்னுடைய நண்பர் தங்கமணி அவர்கள் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். அவருக்குக் கோபம் வந்துவிட்டால் கண்மண் தெரியாது. அவரோடு நெருங்கிப் பழகியதால் எனக்குத் தெரியும். இப்போதுகூட சும்மா வாய்யா, வாய்யா என்று சொல்வார்.

இதில் விவாதம் பண்ணுவதற்கு ஒன்றும் இல்லை. கமிட்டி விசாரணை செய்து, உறுப்பினர்கள் எல்லாம் நன்றாக விவாதித்து, அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதைப்பற்றி கலைஞர்தான் முடிவு செய்ய வேண்டும். இன்னும் சொல்ல வேண்டுமானால் சம்பந்தப்பட்ட அமைச்சர் ப.உ.ச. அதைப்பற்றி முடிவு செய்ய வேண்டும். அவர்களுக்கு அதில் பொறுப்பு உண்டு. இதிலே நான் வலியுறுத்திச் சொல்வது, கலைஞர்கள் நிச்சயமாக சம்பந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எத்தனை டி.எஸ்.ஓ. (D.S.O.) டி.எஸ்.ஓ. (T.S.O.) ரெவின்யூ இன்ஸ்பெக்டர் இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்? இந்த புண்ணியவான்கள் எல்லாம் எங்கே இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் வேலையில் இருக்கிறார்களா, இல்லையா, அவர்கள்மீது என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை எல்லாம் கலைஞர்

[திரு. மணலி சி. கந்தசாமி] [1974 டிசம்பர் 17

அவர்கள் அவைக்குத் தெரிவிக்க வேண்டும். இன்னும் வேறு யாராவது இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்களா என்பதை யெல்லாம் சொல்ல வேண்டும். எவ்வளவு பெரிய படுபாதகத்தைச் செய்திருக்கிறார்கள். அந்த படுபாதகர்கள் இன்னும் டிப்பார்ட்மென்டில் இருக்கிறார்களா? அவர்களுக்கு குறைந்தபட்ச தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறதா? இந்த இலாக்கா காரியதரிசி மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? இந்த விபரங்களை எல்லாம் இந்தச் சபைக்குத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு ஆளும் கட்சிக்கு நிச்சயமாக உண்டு.

இந்த ரிப்போர்ட்டின் கடைசி பக்கத்தைப் பாருங்கள். 'பாலன்ஸ், டியூ, கலெக்டர்' என்று காலம் போட்டிருக்கிறார்கள். கலெக்டர் என்று ஒரு காலம் இருக்கிறதே தவிர, அதில் ஒன்றும் இல்லை. அது எதற்கு? ஒன்றுமே இல்லாததற்கு ஒரு காலம் போட்டிருப்பது எதற்காக?

(நண்பகல் 12-00)

உள்ளபடியே அந்த ரிப்போர்ட்டைப் படித்துப் பார்க்கிறபோது சங்கடமாக இருக்கிறது. 80 லட்சம் ரூபாய்க்குக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு ஆள் செத்துப் போன பிறகு—அதற்கு நான் ஜவாப்தாரியே தவிர என் தம்பி இல்லை என்று எழுதிய கடிதம்—சாவதற்குள்ளேயே எழுதி தம்பியிடம் கொடுத்துவிட்டுப் போனாரோ என்னமோ—ரிஜிஸ்டர் பண்ணப்பட்டு வந்திருக்கிறது. ரிப்போர்ட் ரொம்ப அம்மணமாக—அப்பட்டமாக இருக்கிறது. கலைஞர் அவர்கள் அந்த இலாக்காவையே ஸ்ட்ரீம்லைன் பண்ண வேண்டும். எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்திருக்கிறீர்கள். ஆயினும் இது உங்கள் கட்சிக்கு மாசு உண்டாக்கியிருக்கிறது. இதைத் துடைக்க என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போகிறீர்களோ அதை உங்களிடம் விட்டுவிடுகிறேன். நல்லமுறையில் இயங்க வந்திருக்கக்கூடிய ஒரு கட்சிக்கு இந்த அறிக்கை ஒரு அவக்கேட்டை ஏற்படுத்துகிறது. பலவிதமான கஷ்டங்களை ஏற்படுத்துகிறது.

அந்தக் கட்சி அங்கத்தினர்களும் சிந்திக்க வேண்டும். இன்றைக்கு எதிர்க்கட்சியில் இருக்கிறவர்கள் எல்லாம் ஊழல், ஊழல், தலையீடு என்கிறார்கள். இந்தமாதிரி சமாசாரங்கள் இருக்கின்றன. அதை ஓரளவுக்குக் குறைத்துக் கொண்டால் நல்லது.

1974 டிசம்பர் 17] [திரு. மணலி சி. கந்தசாமி]

அம்மையார் அவர்கள் பேசும்போது, இங்கே அமைதி படம் இருக்கிறது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று எழுதப் பட்டிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். இந்தக் கொள்கைகளை மனசார ஏற்று—இன்னும் ஒரு வருஷம் இருக்கிறது—உங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டும். அதற்கு அவகாசம் இருக்கிறது. நாட்டில் நல்ல சக்திகளும் இருக்கின்றன—தீய சக்திகளும் இருக்கின்றன—நீங்கள் பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்ள வேண்டும். உங்களைப்பற்றி ஒரு புதிய இமேஜை உருவாக்க வேண்டும். நாட்டில் நல்லாட்சி நடைபெற வேண்டும். உங்களுக்கு எதையும் துணிவோடு—செயல்படுத்தக்கூடிய ஆற்றல் பெற்ற ஒருவர் தலைவராக இருக்கிறார். நல்ல கருத்துக்களுக்கு எல்லாம் கலைஞர் வலுவூட்டுகிறார். அவரிடம் எனக்கு நிறைய அட்மிரேஷன் உண்டு. இதற்கு அவர் ஏதாவது செய்தாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

யார் நல்லதைச் செய்தாலும் நான் அதை ஆதரிக்கத் தயாராய் இருக்கிறேன். இன்றைக்கு அ.தி.மு.க. என்றால் அவர்கள் யார்? அது என்ன? அதுவே ஒரு கேள்வி. இங்கே இருந்து போனவர்கள் தானே. இங்கே இருந்தபோது அவர்கள் பேசிய பேச்சுகளையும் கேட்டிருக்கிறேன். இப்போ அங்கேயிருந்து அவர்கள் பேசுகிற பேச்சுக்களையும் கேட்டு வருகிறேன். அங்கே இருந்து சிலர் பேசுகிற பேச்சுகளைப் பார்த்தால் அவர்கள் ஒருசிலர் திரும்ப இங்கே வரலாம் என்று நினைக்கத் தோன்றுகிறது. காரணம் பேசுகிறபோது 'கலைஞரைக் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து' என்றெல்லாம் எவ்வளவு பாசத்தோடு பேசுகிறார்கள். அப்படி வேருன்றி இருக்கிறது அன்பும் மதிப்பும். அப்படி இருக்கும்போது எதற்காக ஒருவர் இருவர் ஒரே சூடாகப் பேச வேண்டும்? கலைஞர் பேரில் தப்பு இருந்தால் எடுத்துச் சொல்லுங்கள். இன்னார் இன்ன இடத்தில் ஊழல் செய்திருக்கிறார் என்று பேசுங்கள். ஆனால் ஒன்று. இன்றைக்கு கீழே இருக்கிறவர்கள் செய்கிற காரியங்கள் ஆட்சியில் செய்யப்படுகிற நல்ல விஷயங்களைப் பாதிக்கத்தான் செய்கிறது. கட்சியில் ஆதிக்கம் மாத்திரம் அல்ல-ஒழுக்கம்-நான் தனி மனிதர் ஒழுக்கத்தைப்பற்றிக் கூடச் சொல்லவில்லை-பொது வாழ்வில் கடைப்பிடித்தாக வேண்டிய ஒழுக்கத்தை-குறைந்த பட்சமாவது அங்குள்ளவர்கள் பின்பற்றியாக வேண்டும்.

[திரு. மணலி சி. கந்தசாமி] [1974 டிசம்பர் 17

இன்னும் ஒரு வருஷம் இருக்கிறது தேர்தலுக்கு. நான் தேர்தலுக்கு நிற்பேனு என்பதே சந்தேகம். என்னைப் பற்றிச் சொல்லவில்லே. வீணாக இங்கே தொண்டைத் தண்ணியை வற்றடித்துக் கொள்ளாமல் ஜனங்கள் மத்தியிலே ஆக்கபூர்வமான யோசனைகளைச் சொல்லி பிரச்சாரம் செய்யுங்கள். ஐக்கிய முன்னணியை ஒரு கொள்கை அடிப்படையில் அமைத்துக்கொள்ளப் பாருங்கள். இறங்கு, இறங்கு என எதற்காக இங்கே பேச வேண்டும்? அதைக் கேட்டுக்கேட்டு எனக்கு அலுத்துப்போச்சு. ஒருவருஷம் கஷ்டப்பட்டு வேலே செய்யுங்கள். ஆட்சிக்கு வாருங்கள். அது எத்தனே நாளில் முடியும் என்றும் பார்க்கலாம். அ.தி.மு.க. இயற்கையாக கொள்கை அடிப்படையில் தமிழ்நாட்டில் தோன்றிய கட்சி அல்ல. தூர்பாக்கியவசமாக கலைஞருக்கும், எம்.ஜி. ஆருக்கும் அபிப்பிராய பேதம் வந்தது. அவர் எம்.ஜி.ஆர்.-ஐ வெளியேற்றியதன் காரணமாக அவர் வெளியே போனர், அவரோடு கூட பல்வேறு காரணங்களுக்காக சிலர் வெளியே போய் இருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பெரியவர்—குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். அவர் ஆரம்பித்திருக்கிற கட்சி எப்படிப் பிறந்தது?

திரு. மணலி சி. கந்தசாமி: நான் சொல்கிறேன். இது ஒரு சின்னக் கட்சி—என்னுடையே இருப்பது—கவலேயில்லே. திரு. கே. டி. கே. சொல்லிக் கொடுத்து அந்த அம்மையார் பேசி விட்டார்கள். (சிரிப்பு)

திரு. ஆர். பொன்னப்பநாடார்: திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் எப்படி கட்சிமாறினர்கள் என்பதை அவர்களே சிந்திக்க வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி: காங்கிரஸ் உறுப்பினருக்கு என் நன்றி.

திருமதி த. ந. அனந்தநாயகி: இன்னும் கொஞ்சநாள் போனல் திரு பொன்னப்பநாடார் அவர்களே இந்தக் கட்சிக்குத்தான் வர வேண்டியிருக்கும்.

1974 டிசம்பர் 17]

திரு. மணலி சி. கந்தசாமி : வரப்போகிற அரசியலில் யார் யார் எந்தக் கட்சிக்குப் போகப் போகிறார்கள் என்று சொல்ல முடியாது. அம்மையார் அவர்கள் அந்தக் கட்சியில் எத்தனைநாள் இயங்கப்போகிறார்கள் என்றும் சொல்ல முடியாது. எந்தக் கட்சியிலே அந்த அம்மாள் போய் உட்கார்ந்தாலும் புள்ளிப் பூச்சியை மடியில் கட்டிவைத்துக்கொள்கிற மாதிரிதான். ரூலிங் காங்கிரசுக்குள்ளேயே ஒரு ப்ராப்ளமாக வந்திருக்கிறதும் தெரியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : செத்த பூச்சியாக இருக்கிறதை விட பிள்ளைப்பூச்சியாக இருக்கலாம்.

திரு. மணலி சி. சுந்தசாமி : இன்றையதினம் காம்ப்புணர்ச்சிக்கு இடம் அளிக்காமல் பிரச்சனைகளை அணுக வேண்டும். நேற்று சட்ட அமைச்சர் பேசுகிறபோது கூடச் சுவை வேண்டும், சூடு கூடாது, சுவை வேண்டும், சூடு கூடாது என்றார்கள். இட்லி சூடாகத்தான் வேண்டும். மசால்வடை சூடாகத்தான் வேண்டும். சூடு இருந்தால்தான் ருசி. அவைக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கிற ரிப்போர்ட்டோ பச்சைமிளகாய். உறைக்கத்தான் செய்யும். எப்படிச் சுவை வர முடியும்? கலைஞரை சொம்பக் கேட்டுக் கொள்கிறேன். அவருடைய திறமையில் நம்பிக்கை உள்ளவன் நான். கட்சிக்கு அவர் கட்டுப்பட்டவர் என்பதோடு தமிழகத்திலுள்ள 4 கோடி ஜனங்களுக்கும் கட்டுப்பட்டவர். அத்தகைய முதல்வர் பாத்திரத்தையும் அவர் வகிக்கிறார். ஆகவே கட்சியை ஒழுங்குப் படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் கட்சியிலுள்ள தவறுகளைத் திருத்திக் கொள்ளுங்கள். தி.மு.க.-வில் நல்லவர்களும் இருக்கிறார்கள். இல்லை யென்று சொல்லவில்லை. அத்தனைபேரும் அயோக்கியர்கள் அல்ல. எனக்குத் தெரியும்—என் பகுதியில் ஒரு தி.மு.க. காரியதரிசி ஒரு லட்சம் ரூபாயை விட்டிருக்கிறார். சொந்த ரூபாயை விட்டிருக்கிறார். ஒரு முஸ்லீம் பையன். ஆகவே நான் பொதுவாகச் சொல்லவில்லை, எப்படியோ இந்த எஸ்டிமேட் கமிட்டி ரிப்போர்ட் குறைபாடுகளை நிவர்த்திக்க குறைந்த பட்சம் என்ன செய்யலாம் என்பதையாவது உடனடியாகச் சிந்தித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : துணைத் தலைவரவர்களே, கடந்த 4 தினங்களாக இங்கே நடந்த விவாதங்களைக் குறிப்பாக, எதிர் வரிசையிலே, எதிர்க் கட்சியிலே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்களால் பேசப்பட்டவைகளை மிகக் கவனமாக நான் கேட்டுக் கொண்டிருந்தேன். அப்படி அவர்கள் பேசிய நேரத்தில், புதிதாக இந்த ஆட்சியின் மீது ஏதாவது குற்றச்சாட்டுகளைச் சொல்வார்களா ? அந்த அடிப்படையில் சில மாற்றுத் திட்டங்களைச் சொல்லி, இன்றைக்கு நாடு சந்தித்துக் கொண்டிருக்கிற பிரச்சனைக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளைச் சொல்லி, இந்த அவையினுடைய நேரத்தை, பொதுப்பணத்திலிருந்து செலவழிக்கப்பட்டு நடத்தப்படுகின்ற இந்த அவையினுடைய நேரத்தை மிகப் பயனுள்ளதாக அவர்கள் மாற்றித் தருவார்கள் என்று நான் எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள் பேச்சிலேயிருந்து அத்தகைய ஒருபலன் கிடைக்கவில்லை யென்பதைத்தான் இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, இன்றைக்கு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து, இங்கே அதனை முன்மொழிந்து வழி மொழிந்து பேசியவர்கள், இறுதியாக, இந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி, ஆட்சியிலிருந்து, பதவியிலேயிருந்து விலக வேண்டுமென்று சொல்லி உட்கார்ந்தார்கள். ஆனால், நேற்றையதினம் இங்கே ஒரு நிகழ்ச்சி நடந்தது. நம்முடைய ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தொடர்ந்து அரசியலிலே இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் அரசியலிலே நீடித்திருந்து நல்லபல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று ஒரு உறுப்பினர் சொல்ல, அதை ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சும்மா கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால், எதிர்க்கட்சியிலே, இத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள், மிகுந்த ஆரவாரத்தோடு கைதட்டி அதை வரவேற்றார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அரசியலிலே இருக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் அரசியலிலே இருக்கவேண்டும். கிருஷ்ணமூர்த்தி முக்கியமான பதவியிலே இருக்கவேண்டுமென்று சொல்லப்பட்ட கருத்து, தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள் ஆரவாரம் செய்து வரவேற்றார்கள் என்றால், மறைமுகமாக திராவிட முன்னேற்றக் கழகம்

1974 டிசம்பர் 17] [திரு. எம். ஏ. லத்தீப்]

நல்லதைச் செய்கிற கட்சி என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டு, தீர்மானத்தை எதோ ஒப்புக்குக்கொண்டு வந்தோம், நீங்களே ஆளுங்கள், உங்களிடத்திலேதான் நல்லவர்கள் இருக்கிறார்கள் என்ற நோக்கத்தில், நல்ல முறையில் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

ஒரு விஷயத்தை நாம் இன்றைக்குப் பார்க்க வேண்டும். இப்பொழுது பிரதானமாகப் பேசப்படுவது அரிசிப் பிரச்சனை. நாடு முழுவதிலும் கவலையிலே ஆழ்ந்திருக்கிற பிரச்சனையாக இருக்கிறது. எதோ, இங்கே இருக்கிற பிரச்சனை போன்று எதிர் வரிசையிலே இருக்கிற உறுப்பினர்களுக்கும் அல்லது மற்ற நண்பர்களுக்கு மட்டும் இருக்கிற பிரச்சனை அல்ல. இங்கே இருக்கிற முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்ன விலைக்கு அரிசி வாங்குகிறார்களோ, அந்த விலைக்குத்தான் லத்தீஃபும் வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அரிசிப் பிரச்சனை முக்கியமான பிரச்சனை.

இன்றைய தினம் அதிகமாக பேசப்படுவது மதிப்பிட்டுக் குழு கொடுத்திருக்கின்ற அறிக்கை. அந்த அறிக்கையிலே சில குறை பாடுகளை அவர்கள் தந்திருக்கிறார்கள். கடந்த காலத்தில், சில ஆண்டுகளுக்கு முன்பு, அரசாங்கத்தின் சார்பாகக் கொடுக்கப் பட்ட சில கான்ட்ராக்ட்களின் வாயிலாக, நடைமுறையிலே வந்த சில அரிசி போங்கள், இவைகளின் விளைவாக ஏற்பட்டுவிட்ட சில ஊழல்கள் என்ற அடிப்படையில் இன்றைக்கு வந்துள்ள அறிக்கை, அதன் அடிப்படையில் நண்பர்கள் பேசினார்கள். ஆனால், அந்த அறிக்கையைத் தந்தவர் யார் என்று பார்த்தால், அவர் நிர்வாக முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்—குழுத் தலைவர். அறிக் கையைத் தந்த குழுவினுடைய தலைவர், முன்னேற்றக் கழகத்தின், டாக்டர் கலைஞர் அவர்களுடைய பின்னாலேதான் உட்கார்ந் திருக்கிறார்.

அரசாங்கம் நடைபெறும் போது, அமைச்சர்களாக இருந்தாலும், அமைச்சர்களுடைய உத்தரவுகளை நிறைவேற்றக் கூடிய பல்வேறு அதிகாரிகள், மேல்நிலையிலே இருக்கக்கூடிய

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 டிசம்பர் 17

அதிகாரிகள், அவர்களுக்குக் கீழே இருக்கிற அதிகாரிகள், கீழ் நிலையிலே இருக்கிற அதிகாரிகள், என்று பல்வேறு நிலையிலே அதிகாரிகள், அமைச்சர்கள் இடுகின்ற உத்தரவுகளை நிறைவேற்றக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், எல்லாக் காரியங்களும் அமைச்சர்களுடைய உத்தரவுகளைப் பெற்றுத்தான் நடைபெற வேண்டுமென்ற நிலையிலே இல்லை. சில அதிகாரிகள் தம் மட்டத்திலே உத்தரவுகளைப் போட்டு, தம் மட்டத்திலே காரியங்களை நிறைவேற்ற முடியும். ஏதாவது பிரச்னைக்குரிய நிலைமை ஏற்பட்டால்தான், அதுவும் நிர்வாகத்தின், அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால், குறிப்பாக அமைச்சர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால், என் இப்படி நடந்தது என்ற அந்த அளவுக்குக் கவனிக்க அவர்கள் கடமைப்பட்டவர்கள். அந்த அளவுக்குத்தான் அவர்களுக்கு கான்ஸ்டிட்யூஷனல் செஸ் பான்சிபிலிட்டி இருக்கிறது, பொறுப்பு இருக்கிறது.

இப்பொழுது நான் கேட்கிறேன், உங்களுடைய பதில் என்ன? இன்றைக்கு நடந்துவிட்ட ஊழல் என்று நீங்கள் சொல்கிறீர்கள், அல்லது தவறு என்று நீங்கள் சொல்கிறீர்கள், மற்றவர்கள் சொல்கிறார்கள், அல்லது தவறு என்று நான் கூடச் சொல்லலாம். இப் பிரச்னையைப் பொறுத்தவரையில், அது எந்தக் கட்டத்திலே நடந்தது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏனென்றால், பொறுப்பான இடத்திலே உட்கார்ந்து கொண்டு நாட்டுமக்களுக்கு நன்மை செய்வதற்காகத்தான் இங்கே வந்திருக்கிறோம். அனைவருக்கும் பொறுப்பு இருக்கிறது. ஆட்சியிலே இருப்பவர்களும், எதிர்க்கட்சியிலே இருப்பவர்களும் நாட்டுமக்களுக்கு நன்மை செய்வதற்குத்தான் இங்கு வந்திருக்கிறோம். நாட்டு மக்களுக்கு நன்மை ஏற்படுகிற வகையில், எதிர்க்கட்சிகள் நியாயமான முறையிலே பலகீனம் எங்கே இருக்கிறதோ, அங்கே சுட்டிக்காட்டி, அந்தப் பலகீனம் இருப்பதற்குக் காரணங்கள் இவை, அதற்குரியவை அமைச்சர்களா, அல்லது அதிகாரிகளா என்பதை ஆராய்ந்து, எந்தவிடத்தில் பொறுப்பு இருக்கிறதோ, அந்தப் பொறுப்புக்குரிய காரணங்கள் என்ன? அதற்காக எடுத்த நடவடிக்கைகள் என்ன? அல்லது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஆராய்ந்து அதற்கும் சரியான பதில் இல்லாவிட்டால், குற்றம் நடந்திருக்கிறது, பலகீனமான இடம்தான் என்று அரசாங்கத்தின்மேல் சொன்னால், நாம் ஏற்றுக்கொள்ளலாம்.

1974 டிசம்பர் 17] [திரு. எம். ஏ. லத்தீப்]

இப்பொழுது இங்கே ஒரு அறிக்கை தரப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையைத் தந்தவர் யார்? திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணமூர்த்தி. தம்முடைய கட்சி ஆண்டு கொண்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட் என்று சொன்னால் பரவாயில்லை. தி.மு.க. தலைவர் என்று சொன்னால் எப்படி?

திரு. எம். ஏ. லத்தீப்: எனக்கு நன்றாகத் தெரியும். நானும் ஒரு குழுவின் தலைவராக இருக்கிறேன். நானும் அதை எப்படி நிறை வேற்றிக் கொண்டிருக்கிறேன் என்று பல அருமை உறுப்பினர் களுக்குத் தெரியும். ஆகவே, அதிலே எந்தவிதமான தவறான போக்கையும் நான் கடைப்பிடிக்க மாட்டேன். நண்பர் கிருஷ்ணமூர்த்தி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. ஆகவே, அரசியல் வேலை செய்யக் கூடாது, கட்சி அரசியல் வேலை செய்யக் கூடாது, தனிப்பட்டவர்களின் மனமாச்சரியங்கள் வேலை செய்யக் கூடாது, தனிப்பட்டவர்களின் ஆசாபாசங்கள் வேலை செய்யக் கூடாது, என்று சொல்ல முடியாத அளவுக்கு சட்டமன்றம் நாட்டு மக்களது நன்மையை மனதிலே கொள்ளவில்லை யென்று நீங்கள் சொல்ல முடியாத அளவுக்கு, ஒரு சிறு இடத்திலே இருந்தாலும், சாதாரண உறுப்பினராக இருந்தாலும், ஒரு கட்சியை, தன்னை இந்நிலைக்கு உயர்த்தக் கூடிய கட்சியைப் பலகினப்படுத்துவதாக இருந்தாலும், தாம் அறிந்த உண்மைகளை, நியாய உணர்வுடன், நல்ல எண்ணத்துடன், அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதிலே இருக்கிற நியாயபூர்வமான, நீதிபூர்வமான உண்மைகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இன்றைக்குச் சில குறிப்புகளை அவர்கள் தந்திருக்கிறார்கள். அந்தக் குறிப்புகளைப் பற்றி, இந்த ஆட்சி விலக வேண்டுமென்று சொல்கின்றவர்கள் குறிப்பாகச் சொல்ல வேண்டும். தவறுகள் நடந்திருக்கின்றன, ஏதோ, சில வழக்கத்துக்கு மாறான நிகழ்ச்சிகள் அல்லது முறைகள் கையாளப்பட்டிருக்கின்றன என்று இந்த அறிக்கையிலேயிருந்து தெரிந்தாலும், அந்த முறைகளை, அரசாங்கத்தினுடைய அமைச்சர்களுடைய உத்தரவு பெற்று செய்தார்களா என்று பார்க்க வேண்டும். சில இடங் களிலே, சில காரியங்களை அமைச்சர்களுடைய உத்தரவு களைப் பெற்றுத்தான் செய்யமுடியும் ஆனால் சில இடங்களிலே, அவர்களாகவே அதிகாரிகளாகவே, சில

[திரு. எம். ஏ. லத்திப்] [1974 டிசம்பர் 17

காரியங்களைச் செய்யமுடியும். செய்து முடித்தபிறகு, அவைகள் அமைச்சர்களுடைய கவனத்திற்கு வரும். அப்படி வந்தவுடன், ஏன், எப்படி நடந்தது, இதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து அமைச்சர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். அப்படி வந்தவுடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். இதிலே பார்க்கிறோம், தெளிவாகப் பார்க்கிறோம், உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கட்சியின் உறுப்பினரே, தலைவராக உள்ள அந்தக் குழு, அதையும் கவனித்து, இதிலே சந்தேகம் கூடாது என்ற ஒரே நோக்கத்தைக் கவனத்தில் கொண்டு, நல்ல செம்மையான நிர்வாகம் இருக்க வேண்டும், நல்ல நிர்வாகம் இருப்பதன் மூலமாக நாட்டு மக்கள் பயனடைய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, ஒரு நல்ல அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். இந்த அறிக்கையிலே கடைசியாகச் சுட்டிக் காட்டப்பட்டிருப்பது என்ன? இங்கே கூடச் சொன்னார்கள், விசாரணை வேண்டும், நீதி விசாரணை வேண்டுமென்று சொன்னார்கள். இதைப்பற்றி சபாநாயகர் அவர்கள் தங்களுடைய தலைமையிலே ஒரு குழு நியமித்து விசாரணை செய்ய வேண்டுமென்ற அபிப்பிராயமும் இங்கே சொல்லப்பட்டது. ஆனால் நான் சொல்கிறேன். இந்தக் குழு யாரால் நியமிக்கப்பட்டது? இந்தச் சபை முழு இறையாண்மையையும் பெற்ற இந்தக் குழு இந்தச் சபையின் டெலிகேட்டட் பவர்ஸ்-ஐ உடைய இந்தக் குழு தன் முடிவை அறிவித்திருக்கிறது என்றால் இதிலேகூட சந்தேகம் இருக்கிறதா? இந்தக் குழுவின் அறிக்கையை வைத்துத்தான் இங்கே விவாதம் நடைபெறுகிறது. ஆனால் இங்கே சொல்கிறார்கள், இந்தக் குழுவினுடைய அறிக்கையை நாங்கள் நம்பவில்லை, மீண்டும் விசாரணை வேண்டுமென்கிறார்கள் . . .

திரு. முனு ஆகி: கனம் உறுப்பினருடைய அதே கட்சியைச் சேர்ந்த ஜப்பார் அவர்கள் நேற்றையதினம் பேசும் இதிலே சந்தேகத்திற்குரியது இருப்பதாலே விசாரணை செய்தாக வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதே கட்சியைச் சேர்ந்த இந்த அங்கத்தினர் அவர்கள் வேண்டாம் என்று சொல்கிறார்களா?

திரு. ஆலடி அருணா: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், இந்த அறிக்கைக்கு மரணம்—டெண்டர் தாண்டவராயன் கேட்கவில்லை என்று சொல்கிற இந்த அறிக்கைக்கு மரணம்—அமைச்சர் அவர்கள் அவர் டெண்டரில் கலந்து கொண்டார்கள் என்று கூறி

யிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இந்த அறிக்கையில் என்ன கூறியிருக்கிறது என்பதைப்பற்றிக் கவலையில்லை என்று அமைச்சர் சண்முகம் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலை இருப்பதால் நீதி விசாரணை வேண்டுமென்று கேட்கிறோம்.

திரு. எம். ஏ. லத்தீப்: திரு. முனு ஆதி அவர்கள் நம்முடைய கட்சியைச் சேர்ந்த ஜப்பார் அவர்கள் நீதிவிசாரணை வேண்டுமென்று கேட்டதாகச் சொன்னார்கள், அவர்களுக்கும் எனக்கும் கருத்து முரண்பாடு இருக்கிறதா என்று கேட்கிறார்கள், எங்களிடத்திலே முரண்பாடு வராது, முரண்பாட்டின் அடிப்படையிலே பிளவுகள் ஏற்படக்கூடிய சூழ்நிலை வருவதில்லை. நீதிவிசாரணை கேட்கிறார்கள். நீதிபதி வைத்து விசாரிக்கலாம் என்று சொல்கிறார்கள், ஆனால் நான் சொல்கிறேன் சட்டசபை குழுவே விசாரிக்கலாம் என்று சொல்கிறேன். விசாரணை முடிந்து விட்டது என்று சொல்லவில்லை, விசாரணையின் பல கட்டங்கள் இருக்கின்றன, பொதுக் கணக்காய்வுக் குழு இருக்கிறது, நான் அதன் தலைவராக இருக்கிறேன் . . .

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் பேச்சைத் தவறாக புரிந்து கொண்டார்கள். எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டை தவறு என்று அவர்கள் சொல்லவில்லை. அந்தக் குழுவின் பரிந்துரைகள் தவறு என்று சொல்லவில்லை. நம்பித்தான் விவாதத்தில் இறங்கியிருக்கிறோம். ஆனால் நேற்றுப் பேசிய மாண்புமிகு அமைச்சர் சண்முகம் அவர்கள் அந்த ரிப்போர்ட்டைப்பற்றிக் கவலையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்களும், திரு. தங்கமணி, மற்றத் தலைவர்கள் எல்லோரும் உயர்நீதி மன்ற நீதிபதியை வைத்து விசாரணை செய்ய வேண்டுமென்று சொன்னோம். ஆகவே அந்த ரிப்போர்டின் மீது சந்தேகம் எங்களுக்கு இல்லை, அமைச்சருக்குத் தான் சந்தேகம்.

திரு. எம். ஏ. லத்தீப்: நான் புரிந்து கொண்டேன். தவறாகப் புரிந்துகொண்டார் என்று சொல்கிறார்கள், நான் தவறாகப் புரிந்து கொள்ளவில்லை, நன்றாகத்தான் புரிந்து கொண்டிருக்கிறேன், கனம் உறுப்பினர் அவர்களையும் நன்றாகத் தான் புரிந்து இருக்கிறேன், அவர்களுடைய வார்த்தைகளையும் நன்றாகப் புரிந்து வைத்திருக்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 டிசம்பர் 17

கிறேன். அவர்கள் சொல்கிறார்கள், பொதுப்பணித்துறை அமைச்சராக இருக்கிற ப. உ. சண்முகம் அவர்கள் அந்த அறிக்கையைப்பற்றி எனக்குக் கவலை இல்லை என்று சொன்னார்கள் என்றும் ஆகவே எங்களுக்குச் சந்தேகம் இருக்கிறது என்றும் சொன்னார்கள். நாம் சில அமைப்புகளின் அடிப்படையிலே வேலை செய்கிறோம். பொது நிர்வாகம் ஜனநாயகத்திலே மூன்று அமைப்புகளின் மூலமாகச் செயல்படுகிறது. சட்டமன்றம் தன்னுடைய கடமையைச் செய்திருக்கிறது. இதுதான் சட்ட மன்றத்தின் அறிக்கை. அதை வைத்துக் கொண்டு நாம் விவாதம் செய்யக்கூடிய உரிமை எல்லா உறுப்பினர்களுக்கும் உண்டு. ஆனால் இந்தச் சட்டமன்றத்திலே உட்கார்ந்து பதில் சொல்லக்கூடிய நிலைமையில் இருக்கிற எக்ஸிக்யூடிவ் தனி அமைப்பு ஆகும், அதற்கு உத்திரவிட்டு, அதிகாரிகளிடத்தில் விவரங்களையும் புள்ளி விவரங்களையும் அறிந்து நம்மைவிட அதிகமாக அறிந்து கொள்கின்ற வாய்ப்பு அவர்களுக்கு அதிகமாக இருக்கிறது.

'That is the exclusive privilege of the executive' அப்படிப்பட்ட முழு உரிமையைப் பெற்றிருக்கக்கூடிய அவர்களுக்கு சில புள்ளிவிவரங்கள் கிடைக்கின்றன. அவர்கள் அதைச் சொல்கிறார்கள். நான் அவர்களுக்கு வக்காலத்து வாங்கிப் பேச வேண்டிய அவசியம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் பேசியதால் அவர்களுடைய பதில் உணர்ந்து கொண்டேன் என்பதற்கு விளக்கம் தருகிறேன். மாண்புமிகு அமைச்சர் எப்படிப் பேசினார் என்று நான் அவருக்கு வக்காலத்து வாங்கிப் பேச வேண்டிய அவசியமில்லை. அவர்களுக்கு அந்த வாய்ப்பு இருக்கிறது அதைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் சொன்னார்கள்.

'I am stating on the floor of the House as a Member of the Executive and therefore, whatever I say, is based upon facts and figures. I do not dispute the facts and figures contained in the observations made by the Estimates Committee in its Report but without disputing it, I stand to say that what I submit is the correct statement.'

என்ற அளவிற்குச் சொல்லியிருக்கிறார்கள். வேறு சொல்லவில்லை. அதை டிஸ்ப்யூட் செய்ய முடியாது. டிஸ்ப்யூட் செய்வதாக இருந்தால் உண்மையான தகவலை அவர்கள் பெறுவதாக இருந்தால் நிச்சயமாக நீங்கள் உரிமைப் பிரச்னையை அவர்கள்மீது கொண்டு வரலாம்.

1974 டிசம்பர் 17] [திரு. எம். ஏ. லத்தீப்]

திரு. கிருஷ்ணமூர்த்தி தலைமையிலே இந்தக் குழு சமர்ப்பித்திருக்கிற அறிக்கையின்மீது நம்பிக்கை வைத்து விவாதத்தை நடத்திக் கொண்டு இந்த அரசாங்கம் தவறு செய்திருக்கிறது இதோ ஆதாரம் என்று சொல்லக்கூடியவர்கள், திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் நீடித்து நிலைத்து இந்த மன்றத்திலே நீடித்து நல்ல பதவிகளை வகித்து வாழ வேண்டுமென்று சொல்லுகிறபோது கைகளைத் தட்டி ஆரவாரம் செய்கிறவர்கள் இவர்கள் எல்லாம் இந்த அறிக்கையை ஒப்புக் கொள்ளாமல் மீண்டும் விசாரணை வேண்டுமென்று கேட்பது தவறு என்று சொல்லமாட்டேன். ஆனால் அவர்கள் சந்தேகம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இதோடு முடிந்துவிட்ட கதையும் அல்ல.

மற்றவர்களுக்குத் தங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு விசாரணை என்ன வேண்டியிருக்கிறது? மேலும் ஸ்க்ரூட்டினி வேண்டுமென்றால் மீண்டும் ஒரு கட்டம் இருக்கிறது. அந்தக் கட்டம்தான் பி.எ.சி. பி.எ.சி. தன்னுடைய கடமையைச் செய்ய இருக்கிறது. சபைக்கு இருக்கிற அதிகாரத்தை மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்வதும் சபாநாயகரைக் கொண்டு குழுவை நியமித்து விசாரணை செய்யவேண்டுமென்று சொல்வதும் எங்கே இருந்து வந்திருக்கிறது? அந்த தூர்நாற்றம் எங்கேயிருந்து இங்கே வந்திருக்கிறது என்றால் அங்கே துல்மோகன்ராம், விசாரணை என்று சொன்னார்களே, அதைப்போன்ற சென்சேஷனை இங்கே கிளப்ப வேண்டுமென்ற முறையிலே . . .

திரு. கோவை செழியன்: தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எஸ்டிமேட்ஸ் கமிட்டி சில முடிவுகளை சில பரிந்துரைகளைக் கொடுத்திருக்கிறது. பெர்மிட் தவறுகப் பயன்படுத்தப்பட்டு வெளிமாநிலங்களுக்கு அனுப்பப் பட்ட செயல்கள் எல்லாம் அதிலே வந்திருக்கிறது. அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் பற்றித்தான் பி.எ.சி.-க்கு வருமே தவிர நிர்வாகத்திலே ஏற்பட்ட ஊழல்கள் எஸ்டிமேட்ஸ் கமிட்டிக்குத்தான் வரும், பி.எ.சி.-க்கு எப்படி வரும் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

[1974 டிசம்பர் 17

(பிற்பகல் 12-30)

திரு. ஆலடி அருணா: தலைவரவர்களே, எஸ்டிமேட் கமிட்டியினால் கண்டுபிடிக்கப்பட்ட விவரங்கள் அல்லது பரிந்துரைகள் இவற்றின்மீது முடிவெடுக்க வேண்டியது அரசாங்கமா அல்லது பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியா? யாருக்கு அந்த அதிகாரம் இருக்கிறது என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். ஒருவேளை எங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். அப்படலெட் அதாரிட்டிபோல் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியைச் சொல்கிறார்கள். அது உண்மையாகவும் இருக்கலாம். அதை மக்களுக்கும், இந்த மாமன்றத்திற்கும் தாங்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர். திரு. லத்தீப் அவர்கள் பேசும்பொழுது இப்படிக் கூறுகிறார்கள். ஆனால் நேற்றைக்கு திரு. அப்துல் ஜப்பார் அவர்கள் பேசினார்கள். அவர்கள் அந்த எஸ்டிமேட் கமிட்டியில் உறுப்பினராக இருந்திருக்கிறார். அந்த எஸ்டிமேட் கமிட்டியின் அறிக்கை சபையில் வைக்கப்பட்டிருக்கிறது. ஜப்பார் அவர்கள் பேசும் பொழுது நீதி விசாரணை கொண்டு வருவதில் தவறில்லை, நீதி விசாரணை நடத்துங்கள் என்று அந்த எஸ்டிமேட் கமிட்டியின் மெம்பரே சொல்கிறார். அப்படி அவருடைய கட்சிக்காரரே நீதி விசாரணை வேண்டுமென்று பேசும்பொழுது லத்தீப் அவர்கள் அதை மறுக்கிறார்களா அல்லது இல்லை என்று சொல்கிறார்களா என்பதையும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, இந்தக் கேள்வி என்னுடைய கட்சிக்காரர் கேட்க வேண்டிய கேள்வி. தவறி, நம்முடைய குமாரசாமி அவர்கள் கேட்கிறார்கள்.

திரு. ஆலடி அருணா: இதற்கு தங்கள் ரூலிங் இல்லையா?

திரு. எம். ஏ. லத்தீப்: நானும் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். அதற்குப் பதில் சொல்கிறேன். கோவை செழியன் அவர்களும், ஆலடி அருணா அவர்களும் சொன்னார்கள். மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று நடத்தும் பொறுப்பில்

1974 டிசம்பர் 17] [திரு. எம். ஏ. லத்தீப்]

இருப்பவர்கள் அரசாங்கமா அல்லது பொதுக் கணக்காய்வுக் குழுவா என்று கேட்டார்கள். நிச்சயமாகச் சொல்கிறேன் அரசாங்கத்திற்குத்தான் அந்தப் பொறுப்பு. மதிப்பீட்டுக் குழுவின் மதிப்பீடுகளை, பரிந்துரைகளை ஏற்று . . .

THIRU ALADI ARUNA: Sir, I want a ruling from the Chair. This is a vital issue.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் முன்பே சொல்லியிருக்கிறேன். மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசுகள் இங்கே நிறைவேற்றப்பட வேண்டியவை. ஆனால், சில நேரங்களில் அவைகள் நிறைவேற்றப்பட முடியாத நிலையில் அதற்கான காரணங்களை அமைச்சரவை அளிக்கும். இரண்டாவது, இதே பொருள்பற்றி பொதுக்கணக்காய்வுக் குழுவும் ஏற்றுக் கொள்ளலாம். எங்கேயாவது தவறுகள் சுட்டிக்காட்டப்படும் நேரத்தில் இப்படிப்பட்ட முறைகளில் அங்கேயும் சுட்டிக்காட்ட அவர்களுக்கும் உரிமை உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: ஆகையால், அந்தப் பரிவுரைகளை ஆராய உரிமைகள், கடமைகள் அரசாங்கத்திற்கு உண்டு. பரிந்துரைகளை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்ற உரிமை அரசாங்கத்திற்கு உண்டு. பரிந்துரைகளை ஆராய்ந்து அதை ஏற்கவும், நடவடிக்கை எடுக்கவும் முழு உரிமை அரசாங்கத்திற்குத்தான் உண்டே தவிர, பொதுக்கணக்காய்வுக் குழுவிற்கு நேரடியாக இல்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் பொதுக் கணக்காய்வுக் குழு நிர்வாகத்தில், பொதுச் செலவினத்தில் ஊழல்கள் அல்லது தவறுகள் நடந்திருக்கின்றன என்ற குறிப்புகளைப் பெறுவார்களேயானால் இந்த மாநிலத்திலிருந்து எந்தத் துறையிலிருந்தும்,

From any department or from any person, the Public Accounts Committee can call for any paper for proper scrutiny of the public expenditure and if the Committee has got even least doubt about misappropriation or misapplication of the public money, they will call for all the relevant records from any department. They are also entitled to requisition even the services of the C.I.D. to effect proper enquiry. That is my submission. Therefore, they have got every right and proper machinery to go further into the so-called rice scandal that is being questioned here.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 டிசம்பர் 17

என்ற அளவில்தான் சொல்கிறேனே தவிர, தான் பொதுப் படையாகப் பேசுகிறேன், யாரையும் ஆத்திரமூட்டுவதற்காகப் பேசவில்லை. இங்கிருப்பவர்கள் இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இருக்கின்ற நடைமுறையைச் சொல்கிறேன். அதற்கு வாய்ப்பிருக்கிறது. என்னுடைய கட்சி உறுப்பினர் அத்தக் குழுவிலே உறுப்பினராக இருந்திருக்கிறார், நீதி விசாரணை கேட்டு விட்டார் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கும் எனக்கும் மாறுபாடே இல்லை. நானும் சொல்கிறேன், அவர் நீதிபதியை வைத்து விசாரிக்க வேண்டுமென்று சொல்கிறார், நான் பொதுக் கணக்காய்வுக் குழுவின் தலைவராக இருப்பவர் விசாரிக்க வேண்டும் என்று சொல்கிறேன். அதுதானே தவிர, இந்த மன்றத்திற்கு வெளியே அதை எடுத்துச் சொல்லக்கூடாது என்பதுதான் என்னுடைய வாதமே தவிர, அவர் வேறுவிதமாகச் சொல்கிறார்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, may I just seek one clarification. The hon. Member, Thiru Latheef, was saying that the enquiry should be conducted by the Public Accounts Committee and it is entitled to scrutinise it. So far as the Report presented by the Estimates Committee is concerned, the Chairman of the Public Accounts Committee is also an ex-officio Member of the Estimates Committee. So, how can he just put forward that argument? Is it proper to do so? I do not think that the P.A.C. is the appellate authority which is entitled to scrutinise it. I would like a clarification from the hon. Member or from the Chair on the point, whether appellate powers are conferred on the Public Accounts Committee which is also another Committee created by the Legislature. Both these Committees are creatures of the Legislature. I also want to know whether they have got independent functions or is there any overlapping or are they separate? To me, it appears that the P.A.C. is not an appellate authority and so much so, it would be futile and wasting the time of the House if we embark upon such an argument. I would like to have clarification from the Hon. Minister.

THIRU M. A. LATHEEF: I too agree with the view of the hon. Member, Thiru Ponnappa Nadar, that the Public Accounts Committee is not an appellate body. The authority of both the Committees emanate from the House. The delegated authority of the Estimates Committee only emanates from the House and

1974 டிசம்பர் 17] [Thiru M. A. Latheef]

similarly the authority of the P.A.C. emanates from the House So. these bodies are independant bodies having their separate and specified jurisdiction. At the same time they are not competitive bodies but they are complementary bodies. That is my submision. Both of them are financial bodies but the purpose of these Committees is the same. The purpose of the Estimates Committee is to suggest how the public money is to be invested. The purpose of the Public Accounts Committee is to scrutinise whether the public money or public expenditure has been incurred in accordance with the sanction of the Government . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே மதிப்பீட்டுக் குழுவிற்கும் பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கும் என்ன அதிகாரம் என்ற விவாதம் இல்லை. ஆகவே, அது வேண்டாம். இந்த அறிக்கையையே பொதுக் கணக்காய்வுக் குழு விவாதிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு அதிகாரம் இல்லை. பொதுக் கணக்காய்வுக் குழு ஆடிட்டர்-ஜெனரல் கொடுக்கும் அந்த நிலையை வைத்துக் கொண்டு ஆய்வு செய்யும் நிலையே ஒழிய, மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை விவாதிக்கும் அளவிற்கு பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு உரிமை இல்லை, முறையும் இல்லை.

THIRU K. T. K. TANGAMANI : Sir, we are aware of the rules and we need not be tutored . . .

THIRU M. A. LATHEEF : The observation of the Chair is with regard to procedure and rule. What I am going to submit is that when a document is brought to the cognizance of the Public Accounts Committee, the Committee is entitled to call for the document and the A.G. may be requested to go into it . . . .

THIRU V. KRISHNAMOORTHY (NELLIKUPPAM) : Mr. Speaker, Sir, on a point of order.

அருமை நண்பர் திரு. லத்தீப் அவர்கள் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியின் சேர்மனை இருக்கிறார்கள். ஏதாகிலும் அவருடைய கமிட்டிக்கு ரெஃபர் செய்தால் அதைப்பற்றி உட்கார்ந்து முடிவு செய்ய வேண்டுமே தவிர, முன்னாகவே எங்களுக்கு அதைக் கொடுங்கள். இப்படிச் செய்கிறேன் என்று சொல்வது, மாஜிஸ்ட்ரேட், ஊரிலே சண்டை போட்டுக்கொண்டிருக்கும் நேரத்தில், அந்த வழக்கை எழுதிக் கொடுங்கள், நான் தண்டனை கொடுக்கிறேன் என்று சொல்வதைப்போல் ஆகும். அது முறையல்ல.

[1974 டிசம்பர் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த விவாதம் வேண்டாம். அதற்கு ஒரு செமினர் வைத்துக் கொள்ளலாம். அதற்கு ஒரு செமினர் ஏற்பாடு செய்துவிட்டு விவாதித்துக் கொள்ளலாம். பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டிக்கு என்னென்ன அதிகாரம், பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு என்னென்ன அதிகாரம் என்பதை விவாதித்துக் கொள்ளலாம். இப்பொழுது இருப்பது நம்பிக்கையில்லாத் தீர்மானம். ஏற்கனவே உங்களுடைய நேரம் முடிந்துவிட்டது, இன்னும் ஐந்து நிமிடங்களுக்குள் முடித்துக் கொள்ளுங்கள்.

THIRU M. A. LATHEEF : I shall be brief. We have get powers to scrutinise the accounts of each department and every item of public expenditure and administrative action and executive action can be properly scrutinised. This House is entirely responsible to censure the Government. That is my submission. Therefore we do not need any other body, or tribunal to conduct another enquiry. This House is most-competent body to enquire and to ensure Government, if necessary. Those safeguards are there so far as this House is concerned.

ஆகையால் மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நான் என்னுடைய சார்பாகச் சொல்லுவதெல்லாம், எப்படியெல்லாம் ஆட்சி நடந்திருக்கிறது. எப்படி எல்லாம் ஆட்சியை நடத்த வேண்டும் என்பதிலே நமக்குத் தெளிவான எண்ணம் இருக்க வேண்டும். இப்படித்தான் நடைபெற வேண்டுமென்ற தெளிவான உணர்வு இருக்க வேண்டும். அந்த உணர்வும், பொறுப்பும் இல்லாமல் இந்த அவையில் சாதாரணமாகச் சொல்லுகின்ற விஷயங்களால் ஏற்படுகின்ற விளைவுகள் என்ன என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அரசியலுக்காகச் சொல்லலாம். அரசியலில் தங்களை வளர்த்துக் கொள்ள சில கருத்துக்களை மிகக் காரசாரமாக எடுத்துச் சொல்லலாம். அது நிர்வாகத்தை எப்படிப் பாதிக்கிறது என்று பார்க்கக் கடமைப் பட்டவர்களாக இருக்கிறோம். நிர்வாகத்தில் இருக்கக்கூடிய குறைகளை அகற்றக்கூடியதாகவும், நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தக்கூடியதாகவும், நிறைவுகளாக மாற்றக்கூடியதாகவும் இருக்க வேண்டுமே தவிர, நாட்டுமக்களை மேலும்

1974 டிசம்பர் 17] [திரு. எம். ஏ. லத்தீப்]

பாதிக்கக்கூடிய அளவில் இருக்கக்கூடாது. பொறுப்புணர்ச்சி வேண்டும். அந்த அளவில் என்னைப் போன்றவர்கள் விவாதங்கள் இல்லையே என்றுதான் கவலைப்படுகிறேன்.

" தேறற்க யாரையும் தேராது ; தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள் "

யாரையும் தேராது தேர்ந்தெடுக்காதீர்கள். தேர்ந்தெடுத்த பிறகு ஆக்கபூர்வமான ஆலோசனைகளைச் சொல்லுங்கள்.

அமைச்சர்கள் ஊழல் செய்கிறார்கள், மற்றவர்கள் ஊழல் செய்கிறார்கள் என்று புகார்களைச் சுமத்திக் கொண்டேயிருந்தால் நீர்வாகிகள், அமைச்சர்கள் என்ன சொல்லுவது, நாங்கள் என்ன செய்வது என்ற போக்குக்கு வந்து விடுவார்களோ என்று ஐயுறக் கூடிய நிலையில் இருக்கிறேன். பல இடங்களில் அப்படி நடக்கக் கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. கீழ் இருக்கும் அதிகாரிகள் தான்தோன்றித்தனமாக நடக்கக்கூடிய நிலைமை ஏற்படக்கூடும். என்னைப் போன்று எதிர்க்கட்சியிலிருந்து பேசக்கூடியவர்களுடைய பேச்சில் பொறுப்பு இருக்கவேண்டும். நிதானம் இருக்கவேண்டும். நாட்டு மக்களுக்கு நன்மை செய்கிறோம் என்ற உணர்வு இருக்க வேண்டும். குறைகளை களையும் வண்ணம் பேச்சு தெளிவாக இருக்கவேண்டும். அந்த அடிப்படையில் இந்த மன்றத்தின் விவாதங்கள் அமைந்திருக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய நிலை என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : திரு. லத்தீப் அவர்கள் பேச்சிலே, இங்கே எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் பொறுப்புணர்ச்சி இல்லாமல் பேசுகிறார்கள், அதிகாரத்திலே உள்ள அமைச்சர்களைப் பற்றிக் குற்றம் சொல்லக்கூடாது என்ற வகையிலே பேசியிருக்கிறார்கள். இந்த மன்றத்திலே இருக்கும் அவ்வளவு பேரும் நாட்டு மக்களின் நன்மையை எண்ணி வந்தவர்கள்தான். ஏதோ அவர் மட்டுந்தான் நாட்டு மக்களின் நன்மைக்காக வந்தவர் போன்று தொனிக்கும்படி பேசுகின்ற பேச்சை நிறுத்திக் கொள்ளுவாரா ?

திரு. எம். ஏ. லத்தீப் : நான் எந்த மாதிரியாகவும் பேசுவதில்லை. இருப்பதைத்தான் பேசினேன். யாரையும் குறிப்பிட்டுப் பேசவும் இல்லை. திரு. சுரேந்திரன் போன்றவர்கள் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இன்சின்யூவேஷனாக யாரைப் பற்றியும் குறிப்பிடவில்லை. அவரை விட நான் ஜூனியராகத்தான் இருக்கிறேன்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 டிசம்பர் 17

ஒரு விஷயத்தை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நம்முடைய உற்பத்தி பெருகியிருக்கிறது என்ற புள்ளி விவரங்களைத் தந்திருக்கிறோம். அப்படியிருக்கும்போது பங்கிட்டு முறைகளில் என்ன கோளாறுகள் இருக்கின்றன என்பதைத் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு பங்கிட்டு முறையை நிர்ணயித்துவிட்ட பிறகு அதை அடிக்கடி மாற்றிக்கொண்டிராமல் எல்லாத் துறையினருடனும் செம்மையாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்து விட்டால் அதைப் பிறகு மாற்றக்கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், உணவு அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஒரு ஆலோசனை கூறுகிறேன். சாத்தியக்கூறுக இருந்தால் அரசு கவனிக்கலாம். நாட்டில் ஒரு பக்கத்தில் செல்வம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இன்னொரு பக்கத்திலே ஏழ்மை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அதிகமாகச் செல்வம் வைத்திருப்பவர்களிடமிருந்து எந்த அளவுக்குப் அரசு பெற முடியுமோ பெற்று திட்டங்களைத் தீட்டி ஏழை மக்களை வாழ வைக்கவேண்டும். அதிகமாக வைத்திருப்பவர்களுக்கு அதிகமாக வரி போடுங்கள். அதைப் பயன்படுத்தி ஏழை மக்களுக்கு சப்சிடைஸ்டு ரேட்டில் உணவு கொடுங்கள்.

இனி எந்த ஆட்சி வந்தாலும் திடீரென்று அரிசி விலையை மட்டும் குறைத்துவிட முடியாது. பொருளாதாரத்தில் சாதாரண மானவன் என்ற முறையில் சொல்லுகிறேன். மற்ற விலைகளைக் குறைக்காமல் அரிசி விலையைக் குறைக்க முடியாது. ஆகவே, மக்களுக்கு ரிலீப் கொடுக்க வேண்டுமென்றால், அதிகமாக வைத்திருப்பவர்களுக்கு அதிக வரி போட்டு 50 கோடி ரூபாயைப் பெற்று அந்தத் தொகையை வைத்துக் கொண்டு ஏழை மக்களுக்கு சப்சிடைஸ்டு ரேட்டில்தான் அரிசி கொடுக்க முடியும். அந்த வழியைத் தவிர விலையைக் குறைக்க வேறு எதேனும் வழி இருக்கிறது என்று யாரேனும் சொல்வார்களானால், அவர்கள் தங்களைத்தாங்களே ஏமாற்றிக் கொள்ளுகிறார்கள், நாட்டு மக்களையும் ஏமாற்றுகிறார்கள் என்றுதான் சொல்ல முடியும்.

வேறு எந்த வகையிலும் நாட்டுமக்களிடம் இந்த அரசுக்குச் செல்வாக்கில்லை என்று எண்ணவேண்டாம். நாட்டுமக்களுக்குப் பல நன்மைகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் செய்திருக்கிறது.

1974 டிசம்பர் 17] [திரு. எம். ஏ. லத்தீப்]

துரதிருஷ்டவசமாக அரிசிப் பிரச்னை உலகம் பூராவும் இருக்கும் பிரச்னை. இதனால் பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்போது திதானமும், தைரியமும் தேவை. திரு. மணலி அவர்கள் எடுத்துக் காட்டியது போல் ஆட்சியில் இருக்கும் டாக்டர் கலைஞர் அவர்கள், பேராசிரியர் அவர்கள், நாவலர் அவர்கள், போன்றவர்களுக்கு மட்டுந்தான் பொறுப்பு இருக்கிறது என்று நினைக்கக் கூடாது. பின்னால் உட்கார்ந்து கொண்டிருப்பவர்கள் யாரேனும் அப்படி நினைப்பார்களானால் நான் நிச்சயமாகக் கூறுகிறேன்— நீங்கள் டாக்டர் கலைஞர் அவர்களையும் காப்பாற்ற முடியாது, இந்த ஆட்சியையும் காப்பாற்ற முடியாது. பின்னால் உட்கார்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் இந்த ஆட்சிக்கும், கட்சிக்கும் நான் என்ன செய்ய வேண்டுமென்று நினைக்க வேண்டுமே தவிர, இந்த ஆட்சியும், கட்சியும் எனக்கு என்ன செய்தது என்று நினைக்கக்கூடாது.

நாட்டுமக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு செயலாற்றுவோமானால் யாரும் இந்த ஆட்சியை அகற்ற முடியாது. நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் வந்து கொண்டிருந்தாலும் அவர்களுக்கு நம்பிக்கையாக எதுவும் கிடைக்காது. இந்தக் கதையின் தொடர்ச்சி இப்போது மட்டுமல்ல, இன்னும் 20 ஆண்டுகளுக்கு நடந்து கொண்டே இருக்கும். அந்தத் தைரியம் உங்களுக்கு வேண்டும். ஊக்கமும், உற்சாகமும், தூய்மையும் இருக்க வேண்டும். இன்றைக்கு வந்துள்ள இந்தத் தீர்மானம் தேவையற்ற தீர்மானம் என்று கூறி இதனைக் கடுமையாக எதிர்த்து நான் அமர்கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : ஒரு பர்சனல் **எக்ஸ்பிளனேஷன்**. நேற்றைய பேச்சில் பேசிய ஒருசில கருத்துக்களைப் பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிய காரணத்தால் அதை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மதிப்பீட்டுக் குழு தன்னுடைய அறிக்கையை முடிக்கும்போது ஒருசில ஃபைல்கள் மதிப்பீட்டுக் குழு ஆயுட்காலத்திற்குள்ளாக கிடைக்க முடியாதபோன காரணத்தால் ஃபைல்களைப் பார்க்காமலே ஒருசில முடிவுகளுக்கு வரவேண்டியிருந்தது. ஃபைல்கள் முழுவதும் கிடைத்த பிறகு சில உண்மைகள் தெரியவரும் என்ற காரணத்தால், இந்த அரசுக்கு எந்தவிதமான மாசும் களங்கமும் ஏற்படக்கூடாது என்ற நல்ல நோக்கத்திலே விசாரணைக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்ற கருத்தைத் தெரியப்படுத்தினேன்.

[திரு. வா. பை. அப்துல் ஜப்பார்] [1974 டிசம்பர் 17

ஆக நாங்கள், மிகுதியாக மதித்து, போற்றி, பாராட்டி புகழுடன் பேசி வருகிற இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு மீது ஒருவிதமான மாசும் களங்கமும் இருக்கக்கூடாது என்ற நல் லெண்ணத்தில் இருக்கிறோம். இந்த மதிப்பீட்டுக் குழு ஓளவு ஒரு எல்லையோடு விடப்பட்ட இந்த விஷயங்கள் மேற்கொண்டு ஆராயப்பட்டு 'பிக்லிங்க் தி ரெஸ்பான்ஸிபிலிட்டி' என்று சொல் வார்கள், அதை எங்களால் செய்ய முடியவில்லை, காரணம் சில பைல்கள் எங்கள் கைக்கு கிடைக்கவில்லை, அவை கிடைத்த பிறகு ரெஸ்பான்ஸிபிலிட்டி பிக்ஸ் செய்யும் கட்டத்தை அடையட்டும் என்ற காரணத்தால் ஒரு விசாரணை தேவை என்ற அளவிற்கு நேற்று பேசினேன். என் கட்சியின் எனைர் அவர்கள் ஒரு வழக் கறிஞரும் கூட. அவர்கள் என்னைவிட சிறந்த வழிமுறைகளைக் காட்டியிருக்கிறார்கள். அவர்களது முடிவுதான், அவர்களது பேச்சுத்தான் இறுதியான முடிவாகும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. ஏ. ஆர். பெருமாள்: மாண்புமிகு சட்டப் போவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன் வந்திருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும், இந்த அரசின் மீது வந்திருக்கும் கண்டனத் தீர்மானத்தையும் கடுமையாக எதிர்த்து எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டு வருவதும், அதை ஆளும் கட்சிகள் சந்திப்பதும் ஜனநாயக அரசியலில் ஒரு மரபு என்றாலும் நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டு வரப்படுகிற நேரம், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற் குரிய சூழ்நிலைகள், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கான அடிப்படையான வலிமையான காரணங்கள் இவைகளை எல்லாம் நாம் சந்தித்திருக்கிறோம். இருபது ஆண்டுக் காலமாக இந்த நாட்டை ஆட்சி செய்து வந்த காங்கிரஸ் கட்சியின் ஆட்சியின்போது நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் இந்த மன்றத்தில் வந்திருக்கின்றன. அன்று இன்றைக்கு ஆளும் கட்சி யாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சி யாக இருக்கக் கூடிய நேரம். இன்று எதிர்க்கட்சிகளாக இருக்கக் கூடிய காங்கிரஸ் கட்சிகள் ஒரே கட்சிகளாக இருந்த நேரம், இன்று எதிர்க்கட்சிகளாக இருக்கக்கூடிய கம்யூனிஸ்ட் கட்சிகள் ஒரே கட்சியாக இருக்கிற நேரம், இன்று இந்திரா காங்கிரசோடு

1974 டிசம்பர் 17] [திரு. எ. ஆர். பெருமாள்]

சேர்ந்திருக்கிற சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி அன்று எதிர்க் கட்சியாக இருக்கக்கூடிய நேரம் அந்த நேரத்தில் காங்கிரஸ் ஆட்சியின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் வந்திருக் கின்றன.

அன்று இருந்த அரசாங்கத்தின் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்களுக்கு, அவற்றைக் கொண்டுவருவ தற்கு உண்டான சூழ்நிலைகள், அவற்றைக் கொண்டுவருவதற்கான காரணங்கள், அவற்றைக் கொண்டுவருவதற்கான சமயங்கள் இவை களையும், அதாவது இருபது ஆண்டுகால காங்கிரஸ் கட்சியின் ஆட்சி மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங் களையும், திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டு வரப் பட்ட நேரம், அவற்றைக் கொண்டு வருவதற்கான சூழ்நிலைகள், அவற்றைக் கொண்டுவருவதற்கான காரணங்கள் இவைகளையும் ஒப்பிட்டு நோக்கி ஆராயும்போதுதான் தெரியும், அன்று காங்கிரஸ் ஆட்சிமீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்க களுக்கு எவ்வளவு வலிமை மிக்க காரணங்கள் இருந்தன, எவ்வளவு சரியான சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகள் இருந்தன, எவ்வளவு வலிமையான காரணங்கள் இருந்தன என்று. அப்படிப்பட்ட சரியான சந்தர்ப்பங்கள், சரியான சூழ்நிலைகள், வலிமையான காரணங்கள் இன்று திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது கொண்டு வரப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானங்களுக்கு இருக்கின்றனவா என்றால், என்னைப் பொறுத்தவரையில் என் கட்சியைப் பொறுத்தவரையில் இல்லை, இல்லை என்றுதான் நான் சொல்வேன். நடுநிலையில் சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு இது தெரியும்.

இருபது ஆண்டுகளில் காங்கிரஸ் அரசாங்கம் எத்தனை நம்பிக்கையில்லாத் தீர்மானங்களைச் சந்தித்திருக்கிறது? இந்த ஏழு ஆண்டுக் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு எவ்வளவு நம்பிக்கையில்லாத் தீர்மானங்களைச் சந்தித்திருக்கிறது? கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு எவ்வளவு நம்பிக்கையில்லாத் தீர்மானங்களைச் சந்தித்திருக் கிறார்கள்? என்பதையெல்லாம் கணக்கெடுத்துப் பாருங்கள். காங்கிரஸ் ஆட்சியின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டு வருவதற்கு பல காரணங்கள் இருந்தன, சட்டமன்றக் கூட்டத்திற்குக் கூட்டம் நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டு

[திரு. ஏ. ஆர். பெருமாள்] [1974 டிசம்பர் 17

வர முடியும். அப்படியிருந்தும் கூட அன்று எதிர்க்கட்சி வரிசையில் இருந்த பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், அவர்களைப் போல் மற்ற பொறுப்புள்ள தலைவர்கள் இருந்த காரணத்தினால் சட்டமன்றத்தில் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரவேண்டுமென்றால், அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாட்டு மக்களின் மத்தியிலிருந்து எழக்கூடிய தீர்மானமாக, இந்த அரசு நாட்டு மக்களின் நம்பிக்கை இல்லாத தன்மைக்கு ஆளாகியிருக்கிறது என்று நாட்டு மக்கள் நினைக்கிறார்கள் என்ற அளவிற்கு இருந்தது. நாட்டில் பரபரப்பானதொரு சூழ்நிலை, அரசாங்கத்தால் ஆட்சி செய்ய முடியவில்லை, அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டு இரத்தம் பெருக்கெடுத்து ஓடுகிறது, பஞ்சம் பட்டினியால் மக்கள் செத்து மடிகிறார்கள், நாட்டில் பெரிய கொந்தளிப்பு குழுறல் இருக்கின்ற நிலை என்ற நிலை ஏற்படும்போது அரசாங்கத்தால் அமைதியைக் காக்க முடியவில்லை, பஞ்சத்தை விரட்ட முடியவில்லை. அரசாங்கத்தால் ஒன்றும் செய்ய முடியாத நிலை என்று வரும்போதுதான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது என்பது ஜனநாயக மாபு. அப்போதெல்லாம் அப்படிப்பட்ட நிலைமைகளில்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன.

ஆனால், இப்போது கூட்டத்திற்குக் கூட்டம் நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டு வரப்படுகின்றன. நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டு வரட்டும், அதைப்பற்றிக் கவலையில்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டுவர அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானங்களைச் சந்திக்கக்கூடிய துணிவு ஆளும் கட்சிக்கு இருக்கிறது. அவர்களுக்கு கொண்டுவர உரிமை இருக்கிறது, இவர்களுக்கு அதைச் சந்திக்க துணிவு இருக்கிறது.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படுவதற்கான காரணங்கள் என்ன? நான் நான்கு நாட்களாக விவாதத்தைக் கவனித்துக்கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு கட்சி உறுப்பினர் பேசுவதையும் கவனிக்க முடியாவிட்டாலும் அந்தந்தக் கட்சியில் உள்ள முக்கியமானவர்கள் பேச்சை எல்லாம் கேட்டேன். இந்த அரசின் மீது நம்பிக்கையில்லை என்று சொல்வதற்கான காரணங்கள் என்ன? எப்போதும் அவர்கள் இந்த மன்றத்தில் சொல்லும் காரணங்களைத்தான் சொன்னார்களே தவிர, இன்று

1974 டிசம்பர் 17] [திரு. ஏ. ஆர். பெருமாள்]

கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு அடிப்படைக் காரணங்கள் என்ன என்று சொல்லவில்லை. ஏற்கனவே இந்த அரசின் மீது பல குற்றச்சாட்டுக்களைக் கூறியிருக்கிறார்கள், அந்தக் குற்றச்சாட்டுக்களுக்கெல்லாம் இந்த அரசு சரியான முறையில் பதில் சொல்லவில்லை என்று பேசலாம். ஏற்கனவே சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்களையும் எடுத்து வைத்த ஆதாரங்களையும் திரும்பத் திரும்ப எடுத்து வைத்து பேசினார்களே தவிர இன்று கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கான அடிப்படைக் காரணங்கள் இன்னின்ன என்று சொல்லவில்லை. இன்னின்ன காரணங்களினால் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது, நாங்கள் ஆதாரபூர்வமாக அவைகளை நிரூபிக்கிறோம் என்று சொல்லவில்லை.

எனவே, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது, நான்கு நாட்கள் விவாதிப்பது, அப்படி விவாதிப்பதால் பத்திரிகைகளில் தங்கள் பேச்சுக்களை தலைப்பு தலைப்புகளாக போட்டுக் கொள்ள ஏதுவாகும் என்பதற்கு நம்பிக்கையில்லாத் தீர்மானம் பயன்படுமானால் இந்த மன்றத்தின் பெருமையே குறையும் என்பது என் கருத்து.

மதிப்பிற்குரிய கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசினார்கள். 1971-ம் ஆண்டு தேர்தல் பற்றியெல்லாம் சொன்னார்கள். 1967 தேர்தலுக்குப் பிறகு, அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, பின்னர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகும் கூட்டணிகள் என்ற அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. சமதர்மக் கொள்கைகளுக்கு விரோதமாக இந்த அரசு ஏதாவது நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகச் சொல்ல முடியுமா? ஏழை எளிய மக்கள், பாட்டாளி மக்கள், பாமர மக்கள், தொழிலாளி மக்கள் இவர்களுக்கு விரோதமாக அல்லது ஆலை முதலாளிகளுக்குச் சாதகமாக, நிலப் பிரபுக்களுக்குச் சாதகமாக அல்லது மக்களைச் சுரண்டி கொள்ளையடிக்கும் கூட்டத்திற்குச் சாதகமாக இந்த அரசு எந்தத் திட்டத்தையாவது இந்த ஏழு ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றியிருக்கிறதா? அந்தப் பாதையில் இந்த அரசு சென்றிருக்கிறதா? என்பதை நடுநிலை தவறாது சமதர்ம வாதி என்ற முறையில் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏழை எளிய மக்களுக்கு விரோதமாக இந்த அரசு எந்தச் செயலையும் செய்யவில்லை. செய்யத் துணியவில்லை. காரணம், ஏழை எளிய மக்கள் மத்தியில், பாட்டாளி மக்கள் மத்தியில்,

[திரு. வ. ஆர். பெருமாள்] [1974 டிசம்பர் 17

உழைக்கிற தொழிலாளிகள் மத்தியில் வளர்ந்தது முன்னேற்றக் கழகம். அந்தக் கழக ஆட்சியின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர்களும் அதே துறையில் வளர்ந்து வந்திருப்பதால், ஏழைகளுக்கு விரோதமாக, பாட்டாளி மக்களுக்கு, தொழிலாள மக்களுக்கு விரோதமாக எந்த நடவடிக்கையும் எடுத்ததில்லை.

இந்த அரசு ஏழைகளுக்கு, பாட்டாளிகளுக்கு, தொழிலாளர்களுக்கு விரோதமான எந்த நடவடிக்கையிலும் இறங்கவில்லை. நடுநிலைமை தவறாமல் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நான்கு நாட்களாக விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பேசவேண்டிய பேச்சுக்களை ஏராளமாக பேசிவிட்டார்கள். சாட்டவேண்டிய குற்றச் சாட்டுக்களையெல்லாம் ஏராளமாக சாட்டிவிட்டார்கள். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நாளைக்கு வோட்டுக்கு விட்டு, வோட்டெடுப்புக்குத் தயாராகி அதற்கு மேல் ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை, கண்டனத் தீர்மானத்தை கொண்டு வந்தவர்கள் அவற்றை திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வோட்டெடுப்புக்கு விட வேண்டுமென்று கோரி வரிசையாக எல்லோரும் எழுந்து நின்று அந்தத் தீர்மானம் தோற்கடிக்கக்கூடிய நிலைதான் வரமுடியும். நிச்சயமாக தீர்மானங்கள் தோற்கடிக்கப்படும். இந்தத் தீர்மானங்கள், மக்களைத் தெளிவுபடுத்துவதற்கும் அவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கும் தான் கொண்டுவரப்பட்டுள்ளது என்பது அவர்களுக்குத் தெரியும்.

(பிற்பகல் 1-00)

நாளைக்கு இரண்டு கட்சித் தலைவர்கள் பேச இருக்கிறார்கள். ஆகவே தீர்மானத்தை வலியுறுத்தாமல் திரும்ப பெறவேண்டும்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நான்கு நாட்கள் பேசியதைக் கூர்ந்து கவனித்தேன் யார் பேசினாலும் தாண்டவராயன், தாண்டவராயன் என்ற பெயரைத்தான் பேச்சுக்கு பேச்சு சொன்னார்கள். வேறு பெரிய அரசியல் காரணம் ஒன்றையும் சொல்லிவிட வில்லை. தவறு செய்கிற அதிகாரிகள் இருக்கிறார்களா என்றால், இருக்கிறார்கள். ஆனால் அப்படி தவறு செய்கின்ற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா, அப்படி நடவடிக்கை எடுக்க அரசு தவறுகிறதா, தயங்குகிறதா, விட்டு விடுகிறதா என்பதைத்தான் பார்க்க வேண்டும். மத்திய அரசில் ஒன்றேகால் கோடி ரூபாய்

1974 டிசம்பர் 17] [திரு. எ. ஆர். பெருமாள்]

ஊழல் ஒன்று நடைபெற்றது, ஜவஹர்லால் இருக்கின்றபோது. ஒன்றேகால் கோடி ரூபாய் ஊழலைப்பற்றி அங்கே ஆதாரபூர்வமாக பாராளுமன்றத்தில் அடுக்கடுக்காகச் சொன்னார்கள்.

ஜவஹர்லால் நேரு என்ன சொன்னார்? 450 கோடி ரூபாய் பட்ஜெட் போட்டு வரவு செலவு செய்கின்ற அரசாங்கத்தில் ஒரு ஒன்றேகால் கோடி ரூபாய் ஊழல் நடக்காது என்று கருதுகிறீர்களா. எங்காவது நடந்திருக்கும். அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கிறேன் என்றுதான் நேரு பெருமகனார் சொன்னார். அரசாங்கத்தில் இருக்கிற அதிகாரிகளும் நிர்வாகத்தை நடத்தக் கூடியவர்களும் அத்தனை பேருமே தேர்மையானவர்களாக, பரிசுத்தம் உள்ளவர்களாக, கை சுத்தம் உள்ளவர்களாக இருப்பார்கள் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. அங்கொன்றும் இங்கொன்றும் தவறுகள் நடந்த அதனால் நாட்டு மக்கள் பிரச்னைகள் பாதிக்கப்பட்டு அதற்குத் தக்க ஆதாரங்களுடன் எதிர்க்கட்சியாளர்கள் காட்டினால் அதில் ஒன்றும் தவறு இல்லை. இங்கே என்ன நடந்திருக்கிறது என்றால் ஏற்கனவே மூன்று டெண்டர்கள் போடப்பட்டு அதிகப்படியான தொகை கிடைக்கிறது இந்த அரசுக்கு லாபகரமானது என்று நினைத்துத்தான் தாண்டவராயனிடம் இது ஒப்படைக்கப்பட்டது. அந்தத் தாண்டவராயன் பிரச்னை ஒன்றைத் தவிர வேறு வெயிட்டான, கனமான காரணங்கள் என்ன என்று துருவித் துருவிப் பார்த்தபோது மற்ற காரணங்கள் எல்லாம் ஏற்கனவே சொல்லப்பட்ட காரணங்களாகத் தான் இருக்கிறது.

அண்ணாவின் பாதைக்கு விரோதமாக கலைஞர் அவர்கள் போய் விட்டார் விலகிப் போய்விட்டார் ஆகையினாலே சொல்லுகிறோம், என்றெல்லாம் பேசினார்கள். நானும் ஏறத்தாழ 37 ஆண்டுக் காலம் அரசியலில் இருக்கிறேன். பேறிஞர் அண்ணா அவர்களை எனக்கு தெரியும். காங்கிரஸ் கட்சியில் இருந்த நேரத்திலும் அதை விட்டு பிரிந்து பார்வர்ட் பிளாக்கில் இருந்து காங்கிரஸ் கட்சிக்கு எதிர்க் கட்சியாக இருந்த நேரத்திலும் அவர் பேச்சை விரும்பி கேட்பவன். அவருடைய கொள்கைகள் எனக்கு நன்றாகத் தெரியும். அவருடைய புத்தகங்களை படித்து இருக்கிறேன். சட்டமன்றத்திற்கு வந்த பிறகு அவருடைய உள்ளக் கருத்துக்களை தெளிவாக நேருக்கு நேர் கேட்டிருக்கிறேன். கலைஞர் அவர்கள் ஒரே ஒரு இடத்தில் விலகிச் சென்றார். அண்ணா அவர்கள் மதுவிலக்கில் பிடிவாதமாக

[திரு. எ. ஆர். பெருமாள்] [1974 டிசம்பர் 17

இருந்தார்கள். மதுவிலக்கை ரத்து செய்யமாட்டேன் என்று உறுதியாக நின்றார். அந்த மதுவிலக்கை ரத்து செய்த நேரத்தில் சரியான காரணங்களைச் சொன்னர். பொருளாதார காரணங்களுக்காக அந்த உயர்ந்த கொள்கைகளை தாற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டு இருக்கிறது, நாட்டின் பொருளாதார நிலையை அடிப்படையாக வைத்து என்று காரணம் சொன்னர். மதுவிலக்குக் கொள்கை தேவையற்றது தத்துவரீதியாக கொள்கை ரீதியாக ஏற்கவில்லை என்று அவர் கூறவில்லை. ஒத்தி வைத்திருக்கிறோம் என்றுதான் சொன்னர். இந்த ஒத்தி வைக்கப்பட்ட மதுவிலக்கு கொள்கை மீண்டும் அமுல் செய்யப்பட்டது. அந்த ஒன்றை வேண்டுமென்றால் கொஞ்ச காலத்திற்கு ஒரு இடைவெளி காலத்திற்கு—காரணம் எதுவாக இருந்தாலும்—அண்ணா கொள்கையிலிருந்து விலகிச் சென்றார் என்ற வாதத்திற்கு சொல்லலாமே தவிர, எந்த கொள்கையில் எந்த நேரத்தில் கலைஞர் அவர்கள் அண்ணாவின் கொள்கைகளுக்கு விரோதமாக செயல்பட்டார் என்று அவர்கள் சொல்லவில்லை. தெரியவில்லையோ என்னவோ. காரணங்கள் எதுவாக இருந்தாலும் ஓர் அரசின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது. பஞ்சம் பசி என்று காரணத்தைச் சொன்னர்கள்.

அடுத்தாற்போல் அரிசிப் பிரச்னை காரணம் என்றார்கள். அரிசியிலே வந்தவர்கள் அரிசியில் போகப் போகிறார்கள் என்று சொன்னர்கள். அரிசியில் திராவிட முன்னேற்றக் கழகம் வந்ததாக எனக்கு நினைவில்லை. அப்படி இருந்ததாக வாதத்திற்கு ஒத்துக் கொண்டாலும் அரிசியிலிருந்து தானே வருகிறவர்களும் வர வேண்டும். ஒருவர் அரிசியினால் போனால் இன்னொருவர் அரிசியினால்தானே வரவேண்டும். ஆகவே அவர்களும் அரிசியில்தானே போவார்கள். அரசியலினால் தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. அரிசியினால் வந்தது என்றால் எந்த அரிசியினால் சம்பா அரிசியா, குறுவை அரிசியா, அரசியல் ரீதியாக காங்கிரஸ் ஆட்சியை விமரிசித்து நாட்டு மக்கள் மத்தியில் காங்கிரஸ் ஆட்சியில் இருக்கிற கொடுமைகளை விளக்கி போராட்டம் நடத்தி ரத்தத்தை சிந்தி சிறை தண்டனை அனுபவித்து திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தது. அரிசியில் வரவில்லை. அரிசியில் வந்தது என்று சொல்லுவதெல்லாம் சும்மா.

1974 டிசம்பர் 17] [திரு. ஏ. ஆர். பெருமாள்]

என் தொகுதி மக்களுக்கு குடிக்க தண்ணீர் கிடையாது. இன்னும் 10 நாளில் மழை பெய்யவில்லை என்றால் முதுகளத்தூர், கமுதி, இராமநாதபுரம், திருமங்கலம் போன்ற தாலுக்காக்களில் குடிக்கக்கூட தண்ணீர் கிடையாது. அதற்குக் காரணம் யார்? அதற்குத் தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு. கருணாநிதியா காரணம்? நெஞ்சில் கை வைத்து சொல்லுங்கள். மழை பொய்த்து விட்டது. இவ்வளவு குறைந்த மழை கடந்த 100 ஆண்டு காலத்தில் என்றைக்கும் இருந்ததில்லை. இப்படி சொல்லுவது முதலமைச்சர் திரு. கருணாநிதியா, உணவு அமைச்சர் மன்னை நாராயணசாமியா என்றால் இந்தக் கட்சியை சேர்ந்தவர்களா அல்லது தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்களா என்றால் இல்லை. சொல்லுவது வானிலை அறிக்கை. நூறு ஆண்டுக் காலத்தில் தமிழகத்தில் இதுபோன்ற குறைவான மழை எப்போதுமே பெய்தது இல்லை. அதற்கு யார் உத்தரவு போட்டார்கள் நூறு வருஷத்தில் இல்லாத அளவு இவ்வளவு குறைவாக பெய்யவேண்டும் என்று? அப்போதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராக மக்கள் கிளம்புவார்கள் என்று உத்தரவு போட்டது யார்? நாங்களா போட்டோம்? இந்த அரசாங்கமா போட்டது? காலம் பொய்த்தது என்றால் அது இயற்கை. ஒழுங்காக மழை பெய்து இருக்குமானால் பருவ மழை தவறாது பெய்து இருக்குமானால் இந்த பிரச்னையே இங்கே வந்து இருக்காது. அரிசி எப்போதும் போல விற்றுக் கொண்டு இருக்கும். அரிசி பிரச்னைபற்றி பேச முடியாது.

எதிர்க்கட்சிகள் எந்தக் காரணம் கிடைக்கும் என்று தேடி அலையக் கூடாது. பிரச்னைகள் எதிர்க்கட்சிகள் காலடியில் வந்து விழ வேண்டும். காரணங்களை தேடித் தேடி ஓடக் கூடாது. காரணங்கள் நம்முடைய மடியில் வந்து விழவேண்டும். இந்த ஆட்சிக்கு எதிராக அடிப்படையான சம்பவங்கள் நாம் போகிற போக்கில் வந்து விழ வேண்டும். அதை வைத்துக்கொண்டு மக்களை அரசுக்கு எதிராக திருப்ப வேண்டும். ஆறு ரூபாய் ஏழு ரூபாய் விற்கிறது படி அரிசி. அதை வாங்க முடியாமல் ஏழை மக்கள் கையில் காசு இல்லாமல் திண்டாடுகிறார்கள். உண்மை. வறட்சி நிலை தண்ணீர்கூட கிடைக்காத நிலை. இரண்டு மூன்று மாவட்டங்களில் இருக்கிற விவசாயம் இல்லை. உண்மை. அதற்கு எல்லாம் அடிப்படையான காரணங்கள் இந்த அரசா? அல்லது இந்த வறட்சியையும் பஞ்சத்தையும் போக்குவதற்காக இன்னின்ன முறைகளில் துல்லியமாக தீவிரமாக நடவடிக்கை எடுக்க தவறியது,

[திரு. ஏ. ஆர். பெருமாள்] [1974 டிசம்பர் 17

இப்படி இப்படி செய்ய வேண்டும் என்று எடுத்துக் காட்டிய பிறகும் நடவடிக்கைகள் எடுக்க தவறியது என்று யாராவது சொல்ல முடியுமா ?

"வறட்சி, வறட்சி, பஞ்சம், பஞ்சம், இதற்கு கருணாநிதிதான் காரணம், கீழே இறங்கு". இது நியாயமா. மழை பெய்யாத தற்கு கடவுள்தான் காரணம். கடவுள் மீது, ஆண்டவன் மீது கொண்டு வாருங்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானம். ஆட்சிமீது வேண்டாம்.

காங்கிரஸ் ஆட்சி இருக்கும்போது எங்கே எல்லாம் உணவு தானிய மூட்டைகள் பதுக்கி வைத்து இருந்ததோ அதை எல்லாம் அப்போது அதிகாரிகளிடம் சொன்னேன். அதிகாரிகள் பிடித்து இருக்கிறார்கள். இன்றைக்கு என்ன செய்கிறீர்கள் ? இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைக் கேட்கிறேன். மக்களுக்காகப் பாடுபடு கிறோம், இந்த மாநிலத்தில் புரட்சிகரமான அரசாங்கத்தை அமைக்கப் போகிறோம் என்று சொல்லுகிற அண்ணா திராவிட் முன்னேற்றக் கழகத்தை கேட்கிறேன், ஆளும் காங்கிரஸ் கட்சியை கேட்கிறேன், ஸ்தாபன காங்கிரஸ் கட்சியைக் கேட்கிறேன், இப்படி பதுக்கி வைத்திருப்பவர்களை பிடித்துத் தந்து இருக்கிறீர்களா. தகவல் தந்து இருக்கிறீர்களா. கடத்தல் மன்னர்களை பிடித்து மாதிரி தானிய கடத்தல் செய்கிறவர்களை பிடித்து விலங்கிட்டு வீதியில் கொண்டு வரவேண்டும் என்று சொல்லுங்கள், நான் வரவேற்கிறேன். பதுக்கி வைத்துக்கொண்டு 6 ரூபாய், 7 ரூபாய் என்று விற்கிறார்களே அந்த பதுக்கல் மன்னர்களை வீதியில் விலங் கிட்டு கொண்டு வரட்டும். அது நாம் வரவேற்க வேண்டிய காரியம். பஞ்சம், பசி, அதற்கு கருணாநிதிதான் காரணம் என்றால், ஆதாரப் பூர்வமாக சொல்லுங்கள். பசிக்கும் பஞ்சத்திற்கும் யார் காரணம்? இவை நேற்று இன்று எழுந்த பிரச்னையா ? வேலையில்லாத் திண்டாட்டம், பசி, பஞ்சம் இவை எல்லாம் நேற்று இன்று மூளைத்ததா ? யாராலும் ஒழித்துக் கட்ட முடியாத சமுதாயத்தில் உள்ள அடிப்படை பிரச்னைகள், எத்தனையோ காலம் நிலைத்து நிற்கின்ற பிரச்னைகள்.

திடீரென்று ஏற்படக்கூடிய வெள்ளம், திடீரென்று ஏற்படக் கூடிய புயல், திடீரென்று ஏற்படக்கூடிய மழை இவைகளுக் கெல்லாம் யார் காரணம் ? இவைகளுக்கெல்லாம் யார் பொறுப்பு

1974 டிசம்பர் 17] [திரு. எ. ஆர். பெருமாள்]

ஏற்றுக்கொள்வது? இந்த அரசாங்கமா? கலைஞர் கருணாநிதியா? நெஞ்சிலே கை வைத்துச் சொல்லுங்கள். இயற்கை விளைவுகளால் ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகளுக்கு யாரும் பொறுப்பல்ல. ஆனால் அவைகளுக்கான நிவாரணப் பணிகளைச் செய்வதற்கு அரசாங்கம் இருக்கிறது. செய்யவில்லை என்றால் அரசாங்கத்தைக் கேட்கலாம். என்னென்ன வழிகளிலே தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம், என்னென்ன முறைகளிலே நிவாரணப் பணிகளை மேற்கொள்ளலாம் என்பவைகளை மற்றவர்கள், மாற்றுக் கட்சிக்காரர்கள் எடுத்துச் சொல்லவேண்டும். அந்தக் கடமையையும் அவர்கள் மறந்துவிடக்கூடாது.

இன்றைக்கு மக்களிடம் ஒரு கொந்தளிப்பு இருக்கிறது. கிராம மக்களுக்கு உண்ண உணவு கிடைக்கவில்லை; குடிக்க தண்ணீர் இல்லை. குடிநீருக்குக்கூட மக்கள் கஷ்டப்படக்கூடிய நிலை இருக்கிறது. அதற்கு காரணம் போதுமான அளவுக்கு மழை இல்லை. வானம் பொய்த்துவிட்டது. இப்படிப்பட்ட இயற்கை கோளாறுகள் ஏற்படும்போது, அதையெல்லாம் சமாளிப்பதற்கு நாம் தயாராகிக் கொள்ளவேண்டும்; நம்மை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இன்னும் 10 நாளில் அல்லது ஒரு மாதத்தில் அல்லது 6 மாதத்தில் அல்லது ஒரு வருடத்தில் மழையே பெய்யவில்லை என்றால் கருணாநிதி என்ன செய்வார்? அல்லது மற்றவர்கள் என்ன செய்வார்கள்? இந்தமாதிரி நேரங்களில் பிரச்னைகளைச் சந்திக்க பழகிக்கொள்ள வேண்டும். மக்களுக்காகப் பணியாற்ற வந்த நாம், அதற்குப் போராட நம்மை நாமே அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும். திட்டங்களை ஒழுங்காக செயல்படுத்த நாம் உதவி செய்ய வேண்டும். பஞ்சத்தை அகற்றப் போராட வேண்டும். மக்களுக்கு உணவு கிடைக்க, குடி தண்ணீர் கிடைக்க அரசாங்கம் மேற்கொள்ளும் திட்டங்களுக்கு நாம் உறுதுணையாக இருக்க வேண்டும். வானம் பொய்த்தாலும் மழை பெய்யாவிட்டாலும் அதற்குத் தகுந்த மாதிரி நம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இயற்கைக் கோளாறுகளுக்கு கருணாநிதிதான் காரணம் என்று சொல்லக்கூடாது. திடீரென்று ஏற்படும் இடையூறுகளுக்கு உரிய நடவடிக்கை எடுத்து, திட்டங்கள் போட்டு செயல்பட வேண்டும்.

இன்றைக்கு பஞ்சப் பிரதேசங்கள் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகள் இருக்கின்றன. கிழக்கு இராமநாதபுரம் முழுவதும் பஞ்சப் பிரதேசம். அதோடு சேர்ந்து அருப்புக்கோட்டை

[திரு. ஏ. ஆர். பெருமாள்] [1974 டிசம்பர் 17

தொகுதி இருக்கிறது. கிழக்கு இராமநாதபுரத்தை விட மோசமான பகுதி என் தொகுதியில் இருக்கிறது. அவைகளுக்கு உரிய பரிகாரம் காணவேண்டும். அங்கே இருக்கிற மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும். அப்படி வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும்போது அதிலே ஊழல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்குரிய வழிவகைகளை எல்லோரும் சேர்ந்து வகுக்க வேண்டும். இப்போது ஏற்பட்டிருக்கும் இந்தப் பிரச்சினையை அரசியல் பிரச்சனையாக்காமல், ஏழை மக்களுடைய வயிற்றை அரசியல் பிரச்சினையாக்காமல் அனைவரும் சேர்ந்து பாடுபட வேண்டும்.

அரிசி எங்கெங்கே பதுக்கப்பட்டிருக்கிறதோ அவைகளை எல்லாம் வெளியே கொண்டுவர நாம் ஒத்துழைக்க வேண்டும். பதுக்கல்காரர்களைப் பிடிப்பதில் அனைவரும் ஒன்று சேர்ந்து முயற்சி செய்ய வேண்டும். பதுக்கல் தானியங்களை வெளியே கொண்டுவந்து, பசித்து வாடும் மக்களுக்கு உதவ வேண்டும்.

உணவுப் பிரச்னையை சமாளிக்க உங்களுடைய யோசனைகளைச் சொல்லுங்கள்; ஏற்றுக்கொள்கிறோம். குறைந்த விலைக்கு அரிசி கொடுங்கள், அரசாங்கத்திற்கு நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்று சொல்லுங்கள்; ஏற்றுக்கொள்ளலாம். இன்னின்ன வகையிலே தவறு நடைபெற்றிருக்கிறது; இன்னின்ன வகையிலே திருத்திக்கொள்ளுங்கள் என்று சொல்லுங்கள்; ஏற்றுக் கொள்ளலாம். அதை அரசாங்கம் செய்யவில்லை என்றால் இப்படிப்பட்ட கண்டனத் தீர்மானத்தையும் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தையும் கொண்டு வாருங்கள்; நாங்கள் ஆதரிக்கிறோம். அதைச் செய்யாமல் மழை பெய்யவில்லையா கருணாநிதிதான் காரணம், பஞ்சமா கருணாநிதிதான் காரணம், வானம் பொய்த்ததா கருணாநிதிதான் காரணம்; ஆகவே, ஆட்சியை விட்டு ஓடு என்று சொன்னால் அதை யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

இந்த அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் இப்போது ஏற்பட்டிருக்கிற பஞ்சத்தைப் போக்க துரித நடவடிக்கை எடுங்கள், பஞ்சத்திலிருந்து மக்களை விடுதலை செய்யுங்கள். அதற்கு ஏற்ற வகையிலே திட்டங்களைப் போட்டு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1974 டிசம்பர் 17] [திரு. ஏ. ஆர். பெருமாள்]

அதோடு இன்னொரு வேண்டுகோளையும் விடுக்கிறேன். மூதூகளத்தூர் தொகுதியிலே கள்ளர் ரெக்ளமேஷன் இருப்பதைப்போல மறவர் ரெக்ளமேஷன் திட்டத்தைக் கொண்டுவரவேண்டும்.

எங்கள் தலைவர் முத்துராமலிங்க தேவரின் சமாதியையும் அரசின் பொறுப்பிலேயே கட்டித்தர வேண்டுமென்று கேட்டு, இந்தத் தீர்மானங்களை முழு மனதோடு எதிர்க்கிறேன் என்று சொல்லி, விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பொன்னப்ப நாடார் அவர்கள் பேசுவார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். மதிப்பிற்குரிய பொன்னப்ப நாடார் அவர்கள் நாளை பேசுவது என்று முடிவு செய்திருக்கிறீர்கள். இப்போது 1¼ மணிதான் ஆகியிருக்கிறது; இன்னும் கால் மணி நேரம் இருக்கிறது. நான் பேசுவதற்கு நேரம் கேட்டபோது, இன்றைக்கு மற்ற தலைவர்கள் எல்லாம் பேசிவிட்டு, நேரம் இருந்தால் எனக்குத் தருவதாகச் சொன்னீர்கள். இப்போது கால் மணி நேரம் கிடைத்திருக்கிறது. அப்படி இருந்தும் என்னைப் பேச அழைக்காமல் திரு. பொன்னப்ப நாடார் அவர்களைப் பேச அழைக்கிறீர்கள். இது நியாயமா? என்னைப் பேசவிடாமல் தடுக்க வேண்டுமென்ற எண்ணம் தங்களுக்கு இருக்காது என்று நம்புகிறேன். அப்படி இருந்தும், பேசுவதற்கு தாங்கள் சொன்னமாதிரியே நேரம் இருந்தும் எனக்கு அந்த நேரத்தைக் கொடுக்காமல், திரு. பொன்னப்ப நாடார் அவர்களை பேச அழைப்பது முறைதானே? அது சரியா என்று தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசுவதற்கு நேரம் கேட்டிருந்ததாகச் சொல்கிறார்கள். அதைப்போல நான் கூட கேட்டிருந்தேன். ஆளும் கட்சியின் சார்பில் இன்றைக்கு யாரும் பேசவில்லை. ஆகையால் நேரம் இருந்தால் எனக்குப் பேசுவதற்கு ஒரு வாய்ப்பு தரவேண்டுமென்று கேட்டிருந்தேன். என்னுடைய கோரிக்கையையும் பரிசீலிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, நேற்று அலுவல் ஆய்வுக் குழுவில், இன்றையதினம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், ஸ்தாபன காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆகிய இருவரையும் தவிர, மற்ற தலைவர்கள் எல்லாம் பேசுவது என்று

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 டிசம்பர் 17

முடிவு செய்திருந்தீர்கள். இன்று காலை எங்கள் கட்சி உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசுவதற்கு நேரம் கொடுக்கவேண்டுமென்று கேட்டேன். இன்று பேச வேண்டியவர்கள் எல்லாம் பேசி முடித்த பின்னால் நேரம் இருந்தால் தருவதாகச் சொன்னீர்கள். அதை நிச்சயமாக நீங்கள் மறக்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இப்போது 1¼ மணிதான் ஆகிறது. இன்னும் 15 நிமிடம் மீதி இருக்கிறது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறது. ஆகவே, அந்தக் கட்சியின் சார்பில் இன்றைக்கு யாரும் பேசவில்லை என்றால் அது சரியாக இருக்காது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தான் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொடுத்திருப்பதாலும், அந்தக் கட்சியின் சார்பில் இன்று யாரும் பேசாததினாலும் மிச்சம் இருக்கின்ற நேரத்தை டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு கொடுக்கும்படி தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் நாளை பேசுவதற்கு ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று பேசவேண்டியவர்கள் பேசிய பின்னால் நேரம் இருந்தால் எனக்குத் தரவேண்டுமென்று ஹாண்டே அவர்கள் கேட்டிருந்தார்கள். அதேமாதிரி ஆளும் கட்சியின் சார்பிலே இன்று யாரும் பேசவில்லையாதலால் நேரம் இருந்தால் எனக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று வீராசாமி அவர்களும் கேட்டிருந்தார்கள். இந்த இரண்டு கட்சிகளின் சார்பில் இன்று யாரும் பேசவில்லையாதலால் மீதி இருக்கிற பத்து நிமிடங்களில் டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு 5 நிமிடங்களும், திரு. வீராசாமி அவர்களுக்கு 5 நிமிடங்களும் ஒதுக்குகிறேன். முதலில் வீராசாமி அவர்கள் பேசுவார்கள்.

திரு. நா. வீராசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தையும், கண்டனத் தீர்மானத்தையும் வன்மையாகக் கண்டித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு செல்வாக்கே இல்லை, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தொண்டர்கள் இல்லை, முன்னேற்றக் கழக ஆட்சி செய்கின்ற காரியங்கள் எல்லாம் சீமான்களுக்குத்தான் என்று இங்கே பேசினார்கள். ஆனால் மதுரை

1974 டிசம்பர் 17] [திரு. நா. வீராசாமி]

மாவட்டத்தில் 6, 7, 8 தேதிகளில் நடைபெற்ற செயற்குழு, பொதுக் குழு கூட்டங்களில் இன்றையதினம் நாட்டில் இருக்கின்ற பிரச்சனைகளை எல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று சொல்லி, அதற்காக சில தீர்மானங்களையும் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறோம். அவைகள் எல்லாம் இவர்களுக்கு சீமான்களுக்குச் செய்வதைப் போல தோன்றுகின்றன.

ஏழை எளிய மக்களுக்கு வரி வஜா செய்வது சீமான்களுக்காக, குடிதண்ணீர் வழங்க போடுகின்றன திட்டம் சீமான்களுக்காக, ஐந்து கோடி ரூபாய் வறட்சி நிவாரணப் பணிக்கு ஒதுக்குவது சீமான்களுக்காக என்று மாற்றுக் கட்சிக்காரர்கள் சொல்வார்களேயானால், அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

இன்றைக்கு நாட்டிலே இருக்கிற உணவுப் பிரச்சனையை சமாளிப்பதற்காகத்தான் நம்முடைய முதலமைச்சரவர்கள் நாட்டிலே இவ்வளவு வறட்சி இருந்தாலும் 60,000 பம்ப்செட்டுகளுக்கு இந்த ஆண்டு மின்னிணைப்பு கொடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

இந்த அரசு ஏழை எளிய மக்கள் பக்கம் இல்லை என்று பலர் இங்கே சொன்னார்கள். இந்த அரசு ஏழை அரிசனங்களுக்கு தனி வாரியம் அமைத்து வீடுகளைக் கட்டிக்கொடுத்துக்கொண்டிருக்கிறது என்றால், குடிசையிலே இருந்தவர்களுக்கு மாடிவீடுகளைக் கட்டிக் கொடுத்துக்கொண்டிருக்கிறது என்றால், அது எந்த சீமான்களுக்காகச் செய்யப்படக்கூடிய காரியங்கள் என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சுதந்திரம் பெற்று 25 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் இன்னும் கிராமப்புறங்களிலே குடிப்பதற்கு தண்ணீர் இல்லை என்ற குறையைப் போக்குவதற்காக குடிநீர் வடிகால் வாரியம் ஒன்றை அமைத்திருக்கிறோம். இப்படிப்பட்ட காரியங்கள் எல்லாம் சீமான்களுக்காகச் செய்கிறோம் என்று எதிர்க்கட்சிக்காரர்கள் கூறுவார்களேயானால், அப்படிப்பட்டக் காரியங்களை இந்த அரசு தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் உணவுப் பிரச்சினை இருக்கிறது. இந்த அரிசிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் அரசு பொறுப்புணர்ச்சியோடு சிந்திக்கிறதா என்பதைத்தான் மாற்றுக் கட்சிக்காரர்கள் எண்ணிப்

[திரு. நா. வீராசாமி] [1974 டிசம்பர் 17

பார்க்க வேண்டும். இந்தப் பிரச்சினையை அலட்சியப்படுத்தி விட்டோமா? நல்ல முறையில் சமாளிப்பதற்கு அணுகுகிறோமா என்று பார்க்க வேண்டும். பிரச்சினையை இதுபோல நேரிடையாக சந்திப்பதற்குப் பதிலாக, எதிர்க்கட்சியில் இருப்பதனால் எதையும் செய்யலாம் என்ற முறையில் எம்.ஜி.ஆர். பங்களூர் போகிறார். அங்கிருந்து உடனே வருகிறார்.

திரு. க. உரொ. எட்மண்ட்: எதற்கெடுத்தாலும் எம்.ஜி.ஆர். பெங்களூர் போகிறார் என்றால் அவர் போகிறார். அவர் இங்கு வர வேண்டுமென்ற அவசியம் இல்லை.

திரு. நா. வீராசாமி: இருப்பது குறைந்த நேரம். இந்த நாட்டில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. நமக்குத் தேவையானது தண்ணீர். இங்கு பொறுப்புள்ள அரசாங்கம் இருக்கிறது. மத்திய அரசாங்கத்து அமைச்சர்களோடு கலந்து பேசுகின்றார்கள். பெங்களூருக்கு எதற்கோ போய்விட்டு, நான் மைசூர் முதலமைச்சரை சந்தித்துத் தண்ணீர் கேட்டேன், கொடுக்கிறேன் என்று சொன்னார் என்பதாக இங்கே வந்தவுடன் ஓர் அறிக்கை கொடுப்பது, இவருக்கு அங்கே போய் அவரைச் சந்திக்க யார் அதிகாரம் கொடுத்தது? அதை மிகவும் பொறுப்பு வாய்ந்த முன்னாள் முதல மைச்சர் பக்தவத்சலம் அவர்களே கேட்டார்கள். இது தமிழ் நாட்டுப் பிரச்சினை. இது யோக்கியமான செயல் இல்லை, அரசியல் வாதிகளுக்கு இதில் என்ன இருக்கிறது. இப்படி பொறுப்பற்ற முறையிலே அரசியல்வாதிகள் நடந்துகொள்ளக்கூடாது என்று அவர்களே கண்டித்திருக்கிறார்கள். (திரு. பெ. சீனிவாசன் எழுந்திருந்தார்) இப்படி பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் நாட்டில் வறட்சி நிலைமை இருக்கிற போது எப்படி எல்லாம் நடந்துகொள்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

வரி பாக்கியைப்பற்றிச் சொன்ன நேரத்தில் எல்லோருக்கும் தான் இன்கம் டாக்ஸ் இருக்கிறது, இது ஒரு பிரச்சினையா என்றார்கள். இன்கம்டாக்ஸ் இருக்கலாம். ஆனால் டாக்ஸ் கட்டு வதற்குள்ளாக சொத்துக்களை யார் பேரிலாவது எழுதி வைப்பது, விற்றுவிடுவது என்பது எல்லாம் ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள வர்கள் நடந்துகொள்கிற முறை அல்ல. நாடாளுமன்றத்திலே 10—8—1973 அன்றைக்கு திரு. கணேஷ் அவர்கள் எம்.ஜி.ஆர். சொத்துக்களை மாற்றக்கூடாது என்று மத்திய அரசாங்கம் உத்தரவு போட்டிருப்பதாகச் சொன்னார்கள். இப்படிப்பட்டவர்கள், நாட்டில்

1974 டிசம்பர் 17] [திரு. நா. வீராசாமி]

நல்லாட்சி நடைபெறுகிறது என்பதைப் பாராட்ட மனம் இல்லாவிட்டாலும் சும்மா இராமல் நாட்டில் குழப்பம் விளைவிக்க முயற்சிக்கிறார்கள். அதற்காக ஜனநாயகப் பாதுகாப்பு அணி என்பதாக—ஜனநாயகத்திலே நம்பிக்கை இல்லாதவர்கள்—சட்டமன்றம் செத்துவிட்டது என்று சொன்னவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் பதவி வகித்துக்கொண்டிருக்கும்போது—ஜனநாயகப் பாதுகாப்பு அணி என்பதாக ஜனங்களைத் தூண்டிவிடுகிறார்கள். இவர் என்ன சொல்கிறார்? ஜயப்பிரகாஷ் நாராயண் செய்தது சரியல்ல என்கிறார். இந்த அரசாங்கம் ராஜினாமா செய்ய வேண்டும், நாட்டில் அராஜகம் ஏற்படவேண்டும் என்று போராட்டத்தைக் கிளப்பிவிட்டு, சட்டமன்ற உறுப்பினர் வீடுகளுக்கு எல்லாம் சென்று மகஜர் கொடுக்கப் போகிறோம் என்ற கிளர்ச்சியை நடத்தி, அது போதாது என்று போலீஸ்காரர்களின் மனைவிகளிடத்தில் கொடுக்கப் போகிறோம் என்கிற ஒரு போராட்டத்தை அறிவித்து . . . . (மணி அடிக்கப்பட்டது).

Dr. H. V. HANDE: Hon. Mr. Speaker Sir, in support of the two Motions before the House, I would like to say that the Chief Minister and his Cabinet having understood that they are not going to stay in power in 1976, have indulged in nefarious and dangerous activities inside Fort St. George. It is a shocking thing that I am going to bring to the notice of the House. The Hon. Chief Minister is working this way and the Hon. Minister for Agriculture Thiru Si. Pa. Aditanar is also working in this way. Thiru Aditanar is responsible for the destruction and reconstruction of a number of files inside Fort St. George. It is seen to-day that orders have been passed to reconstruct the files. It is a shocking thing.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோ நோ. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பைல்களை அழித்துவிட்டார்கள் என்று சொல்கிறார். அதற்கு ஆதாரம் என்ன?

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் ஆதாரம் சொல்கிறேன். ஐ.ஓ. கோட் பண்ணுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிற நேரத்தில் எப்படிப்பட்ட முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அது எனக்குத் தெரியும். நான் ஆதாரம் கொடுக்கிறேன். ஜி.ஓ. கொடுக்கப் போகிறேன். எனக்குத் தெரியும் சூல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் பேசுவதற்கு என்னிடம் நேரம் கேட்டபோது கூட என்னிடம் இதைப் பற்றிச் சொல்லவில்லை. குற்றம் சாட்டுவதற்கு முன்னால் பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெற்றுத்தான் இந்த அவையில் வந்து குற்றம் சாட்ட வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் தான் அதற்கான ஆதாரங்களைக் கொடுக்கிறேன். ஜி.ஓ. நம்பரையே சொல்கிறேன் என்று சொல்கிறேனே. ஏன் அவ்வளவு கவலைப்படுகிறீர்கள்? இதற்குத் தானே என்னைப் பேசக்கூடாது என்று தடுத்துக்கொண்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எத்தகைய குற்றச் சாட்டைக் கொண்டுவரப் போகிறீர்கள். அதற்கான ஆதாரங்கள் என்ன என்பதை என்னிடம் நீங்கள் முன்கூட்டியே தெரிவித்து என் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். ஒரு அமைச்சரைப் பற்றி . . .

டாக்டர் எச். வி. ஹாண்டே : எங்கே அந்த அமைச்சர்? அவர் தான் இங்கு இல்லையே?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் இப்படிச் சொல்வது முறையா? ஆத்திரப்படாமல் முறைப்படி பேசுங்கள். விதிப்படி நடந்துகொள்ளுங்கள்.

DR. H. V. HANDE: I am quoting the G.O. The Board of Revenue has passed orders. I am not going into the details. Board of Revenue, Food Production reference D-4/781/74, dated 26th April 1974—Files lost, re-construction ordered.

இ 2/2357/70 என்பதாக ஒரு பைல் இல்லை, 18 பைல்கள் காணாமல் போய் இருக்கின்றன. காணாமற்போன பைல்களின் நம்பர்கள் அத்தனையும் என்னிடம் இருக்கின்றன. இப்படி பல பைல்கள் காணாமல் போய், காணாமல் போனதற்கு ரீகன்ஸ்ட்ரக்ஷன் செய்யச் சொல்லி அமைச்சர் ஆணித்தனுடைய புட் ப்ரொடக்ஷன் டிபார்ட்மெண்டிற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. அந்த ஜி.ஓ.-விலேயே,

1974 டிசம்பர் 17] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

The Assistant Secretaries are requested to keep a watch on the reconstruction of the files.

என்று சொல்லியிருக்கிறார்கள். திரு. சீனிவாசன் அவர்கள், எங்களுக்கு காட்டிய பைலே கூட ஒரிஜினல் பைல் இல்லே என்று சொல்லியிருக்கிறார் என்றால் இது கூட உண்மையாக இருக்குமோ என்கிற பயங்கரமான சந்தேகம் எழுகிறது. தாண்டவராயன் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட பைலே கூட என்ன கதிக்கு ஆளாகியிருக்கிறது என்று சொல்ல முடியாது. அதேமாதிரி இ 2/1623/70 பைல் காணமல் போயிருக்கிறது.

Where is the guarantee that it is an original file? What is the guarantee that whatever you give is a genuine file?

திரு. செ. கந்தப்பன் : சார், ஆன் எ பாயின்ட் இப் ஆர்டர்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பாயின்ட் ஆப் ஆர்டர் நான் பேசி முடித்த பிறகு சொல்லுங்கள்.

திரு. செ. கந்தப்பன் : பாயின்ட் ஆப் ஆர்டர் அவை முன்புள்ள விஷயத்தைப் பற்றி உடனே எழுப்பப்படாமல் பிறகு எப்படி எழுப்புவது ?

THIRU G. R. EDMUND : You raise your point of order. You straightaway come to your point of order . . .

THIRU DURAI MURUGAN : You have no right to give direction.

THIRU S. KANDAPPAN : I can tolerate comments on the point of order raised by me from the Chair but I cannot tolerate the comments from the Opposition.

(பிற்பகல் 1-30)

THIRU G. R. EDMUND : I am not making any comments on the point of order. I am only stating that you can straightaway come to the point of order.

திரு. செ. கந்தப்பன் : நான் வாயைத் திறந்தவுடனே, எதிர்க்கட்சி உறுப்பினர் பேசினால், பாயின்ட் ஆஃப் ஆர்டரைச் சொல்ல முடியாது. நான் 4 நாட்களாக வாயைக்கூட திறக்கவில்லே. இவ்வளவு நாட்கள் பொறுமையாகக் கேட்டிருந்துவிட்டு,

[திரு. செ. கந்தப்பன்] [1974 டிசம்பர் 17

இப்பொழுது அவர் சொன்ன அந்தக் குற்றச்சாட்டின் காரணமாக, இந்த பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்புகிறேன். 15, 20 பைல்கள் அளவுக்கு சில நம்பர்களைச் சொல்லிவிட்டு, அந்த பைல்கள் காணமல் போய்விட்டதாகவும், அவை ரீ-கிரியேட் செய்யப்படுவ தாகவும் இங்கே குற்றச்சாட்டு சொல்லப்பட்டிருக்கிறது. நான் திடீரென்று ஒரு நெம்பர் உள்ள பைலைச் சொல்லி, இதில் இந்தச் செய்தி இருக்கிறது, பார்த்துக்கொள்ளுங்கள் என்று இந்தச் சட்ட மன்றத்தில் சொல்லலாம். ஆனல், அது சரியா? இவர் சொல்வது, பொதுமக்கள் மத்தியில் அரசு எவ்வளவு பெரிய ஒரு பயங்கரத்தை செய்திருக்கிறது என்ற வதந்தியை உயிரோடு உலவவிடுவதாகப் போகிறது. அப்படி ஒரு வதந்தியை உயிரோடு உலவ விடுவதற்கு மூன்னல், நீங்கள் இதைப்பற்றி ஒரு முடிவுக்கு வருகிற வரையில், இவை குறிப்பேடுகளிலே ஏறவும் கூடாது, எடுகளிலே வரவும் கூடாது என்று தாங்கள் ஆணையிடவேண்டும். அவர் சொல்வது உண்மை என்று வந்த பிறகு, அரசாங்கத்திற்கு தண்டனை அளிக்க லாம். இப்படியே ஏறவிடுவது நியாயமற்றது. வேண்டுமென்றே சொல்லி, அவைகள் பத்திரிகையிலே வந்துவிட்டால், நிலைமை மாறி விடும். ஆகவே, உண்மை தெரிகிற வரை, அரசுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். இதனை அப்படியே விடுவது, உலகத்திலே எந்த இடத்திலேயும் நடைபெறுத ஒன்று (கூச்சல் குழப்பம்).

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, எங்கள் கட்சி யைச் சேர்ந்த டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு ரெஃபரன்ஸ் சொல்லி, ஜி.ஓ.க்களையே படித்திருக்கிறார்கள். அதற்கு மறுப்பு சொல்ல வேண்டுமென்றல், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் மறுப்பு சொல்ல வேண்டுமேயொழிய, சம்பந்தப்படாத உறுப்பினர் எப்படி மறுப்பு சொல்லலாம். அவருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய ஹாண்டே அவர் களுக்கு தொடக்கத்திலேயே சொன்னேன். ஒரு குற்றம் சாட்டு கின்ற நேரத்தில், நாம் கடைப்பிடிக்க வேண்டிய மரபுப்படி குற்றம் சாட்டுங்கள் என்று சொன்னேன். அந்த முறையிலே, டாக்டர் ஹாண்டே அவர்கள் குற்றம் சாட்டவில்லை.

திரு. முனு ஆதி: ஜி.ஓ. சொல்கிறார். அப்படி இல்லை என்றால், அந்த மெம்பர் மீது நடவடிக்கை எடுங்கள்.

1974 டிசம்பர் 17]

*மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த ஜி.ஓ.வை என்னிடம் காட்டியிருக்கலாம். காட்டாமல் பேசியிருக்கிறார். அதையொட்டி பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பப்பட்டிருக்கிறது. அதற்குத் தீர்ப்பு நாளை அறிவிக்கிறேன். அதுவரையில் இந்த நடவடிக்கைகள் குறிப்பிலே ஏறாது, பத்திரிகையிலே வெளியிடக் கூடாது.**

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-33 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.

3. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

112. Notification issued with G.O. Ms. No. 111, Rural Development and Local Administration, dated the 19th January 1974 in regard to division of wards and reservation of one seat for Scheduled Castes and one seat for women in the Tenkasi Municipal Council. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920)]

113. Notification issued with G.O. Ms. No. 1511, Rural Development and Local Administration, dated the 22nd June 1974 in regard to alteration of the name of the Nellikuppam Panchayat Union as the Anna Gramam Panchayat Union. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

114. Notification issued with G.O. Ms. No. 1822, Rural Development and Local Administration, dated the 12th August 1974 in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification No. 11 (2)/RUL/100-V/74, published at pages 39-43 of Part II—Section 2 of the

---

** 18—12—1974-ம் தேதி மாண்புமிகு பேரவைத் தலைவர் அளித்த அனைக்கிணங்க இந்நிகழ்ச்சிகள் நடவடிக்கைக் குறிப்பில் சேர்க்கப் பட்டுள்ளன.*